ஜநவிநோதிநி.

இல. 4, 5.] ஏப்பிரல்மீ—மேமீ 1877. [புஸ்த. VIII.

ஜகந்நாதம்.

இத்தேசத்தில் புண்ணியஸ்தலங்களும் தேவாலயங்களும் அநேகமுண்டு; ஆயினும் அவற்றுள் ஜகந்நாதம் என்கிற புண்ணியஸ்தலம்தான் ஐரோப்பியர்களுக்கெல்லாம் மிகவும் பிரசித்தமாய்த் தெரிந்திருக்கின்றது. அந்த ஜகந்நாதம் இத்தேசத்தின் வடபாகத்தில், கல்கத்தாவுக்குத் தென்மேற்கே சுமார் 250 மைல் தூரத்தில் ஒட்டிரதேசத்திலிருக்கின்றது. அந்தப் பட்டணம் இக்காலத்து மாதிரியாய் நாகரிகமான கட்டடங்களும் சீர்திருத்தமும் இல்லாமல் பூர்வகாலத்து மாதிரியாகவே அவலட்சணமான தெருக்களும், தெருப்புறத்தில் குட்டை குட்டையாய்த் தாழ்வாரமிறக்கிக் கட்டிய வீடுகளுமாய்ப் பார்க்க வழங்காமலிருக்கின்றது. தெருக்களிலும் வீடுகளிலும் தோப்புகளிலும் தோட்டங்களிலும் குரங்குகள் அளவற்றிருக்கின்றன. குளம் குட்டை முதலிய நீர்த்தாக்குகளில் முதலைகள் மனிதர்களோடுகூடவே பழகிச் சஞ்சரித்துக்கொண்டிருக்கும்.

ஜகந்நாத நகரத்தின் பிரதான வீதி மிகவும் விசாலமானது. அந்தப் பெரிய தெருக்கோடியில் சிறந்த விஷ்ணுதேவாலயம் ஒன்று உண்டு. அந்தக் கோயில் நாற்சதுரமாய் உயர்ந்த கன்மதிலால் சூழப்பட்டிருக்கின்றது. அந்தப் பிராகாரம் ஒரு பக்கத்தில் 650 அடி உயரமுள்ளது. கோபுரவாயிலண்டை ஓலைகளாலும் தழைகளாலும் அநேகம் குடிசைகள்போட்டு அவைகளில் அநேகம் வைராகிகள் வாசஞ்செய்கிறார்கள். அந்தக் கோபுரவாயிலில்

வைராகிகளுடைய குடை கூடைமுதலிய சாமான்கள் எப்போ பார்த்தாலும் நிறைந்திருக்கும். அந்த ஆலய துவாரத்தின் இருபுறத்திலும் இரண்டு சிங்கப்பிரதிமை கிரீடம்வைத்து அமைத்திருக்கின்றன. கோயிலின் முன்புறத்தில் ஒருவகைக் கல்லினுற்செய்த பெரிய துவஜஸ்தம்பமொன்று சிகரத்தில் அனுமான் பிரதிமையோடு நாட்டியிருக்கின்றது. அந்தக் கோபுரவாயிலின் சிறப்பை இச்சஞ்சிகையுடன் சேர்த்திருக்கிற படத்தில் ஒருவாறு காணலாம்.

ஜகந்நாத் ஸ்தலத்தின் முக்கிய தேவன் விஷ்ணுவினுடைய அம்சாவதாரமான கண்ணபிரான். அவர்க்கு அங்கே வருஷத்தில் ஒரு தடவை ரதோச்சவம் நடப்பதுண்டு; அப்படி ரதோச்சவம் நடக்கும்போது, முற்காலத்தில் பகவத்பக்தர்கள் அநேகர் தமது தேகத்தைப் பகவானுக்குப் பலியாய் அளித்துவிட்டால் தமக்கு நற்கதி கிடைக்குமென்று, நிஸ்ஸாரமான இந்தத் தேகத்தில் சிறிதும் ஆசைகொள்ளாமல், மனதில் கடவுளுடைய குணங்களையே தியானஞ்செய்துகொண்டு, தேரோடுகிறவழியில் வீழ்ந்து மடிந்துகொண்டிருந்தார்கள். இந்த ஸ்தலத்தின் பெயர் ஐரோப்பாமுழுதும் பரவியதற்கு இதுதான் முதற்காரணம். இப்போது இந்தத் துரைத்தனத்தார் அந்த வழக்கத்தைத் தடுத்திருக்கிறார்கள். அந்த ஸ்தலத்தில் முக்கியமான விசேஷம் ஒன்றுண்டு. ஸர்வம் ஜகந்நாதம் என்று யாவரும் சொல்லுகிறபடி அந்த திவ்ய ஸ்தலத்தில் கீழோர் மேலோர் என்கிற வேறுபாடொன்றுமில்லாமல் நாநாஜாதி ஜனங்களும் ஒன்றுகூடி பகவானுடைய நைவேத்தியத்தை அங்கீகரிப்பார்கள். பகவத் ஸந்நிதானத்தில் எல்லாருமொன்றுதான் என்று இந்துக்கள் கொண்ட கொள்கைக்கு இதுவே திருஷ்டாந்தமாம்.

அவசியமான உழைப்பும் அவசியமில்லா உழைப்பும்.

நாம் எங்கிருந்தபோதிலும் எது செய்தபோதிலும் வேலைசெய்யாமல் சும்மா இருப்பதில்லை. ஒரு அறையில் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்துக்கு நடந்துபோகும்போதுகூட வேலையில்லாமல் இருப்பதில்லை. எப்படியெனில், நாம் நடந்துபோகும்போது நமது தேகத்தைச் சுமந்து போகிறோம்; அதுவும் ஒரு வேலைதான். நடந்துபோகிறவர்களுக்கு அது

தோன்றுது. மற்றெல்லாருக்கும் அது எளிதான வேலையல்ல. வேலை செய்கின்றுமென்று நமக்குத் தெரியாதிருந்தபோதிலும், செய்கிறவேலையில் குறையில்லை. ஏணியில் ஏறும்போதும் தேகத்தைச் சுமந்துபோகிறோம். ஏணியேறுகிறவனைத்தவிர மற்றெல்லாருக்கும் அவன் தேகத்துக்குச் சரியான சுமையை ஏணியில் ஏற்றினால் அவன் செய்கிற வேலை தெரியவரும். அது வருத்தமான வேலையாகவேயிருக்கும். இரண்டு பிள்ளைகள் எளிதாக ஒரு மயில்தூரம் நடந்துபோகலாம். ஆனால் ஒருவன் மற்றவனைத் தூக்கிக்கொண்டுபோனால் களைத்துப்போவான். இவ்வாறுச் செய்கிற வேலை சமயத்துக்குத்தக்கபடி எளிதாகவும் வருத்தமாகவும் காணப்படும். இதைப் பலவிஷயத்தில் பார்த்திருக்கிறோம். கரைதட்டிப்போன கப்பலிலிருந்து ஜலத்தில் விழுந்த இருவர் தனித்தனியாக யாதொரு சுமையுமின்றி நீந்தினால் கரைவந்துசேரலாம். அப்படிக்கில்லாமல் ஒருவன் மற்றவனைத் தூக்கிக்கொண்டு நீந்தினால் கரைவந்துசேருவது அரிது. ஒரு சேனை பின்னடைந்து புறங்காட்டி ஓடும்போது போர்ச்சேவகர் சுமையில்லாமல் ஓடினால் சீக்கிரம் தப்பிப்பிழைக்கலாம். காயப்பட்டவர்களையும் தூக்கிக்கொண்டுபோகவேண்டுமானால் எளிதாக ஓடமுடியாது.

சில விஷயங்களில் இன்னும் எளிதாக வேலைநடக்கின்றது. சோம்பேறியும்கூட உட்காரும்போதும் படுக்கும்போதும் வேலைசெய்கிறான். அவன் கையை ஆட்டுகிறதும் ஒரு வேலைதான். அவன் கையை மற்றொருவன் எடுத்துவைத்தால் அப்போது அதுவும் ஒரு வேலையென்று தெரியும். நம்முடைய தேகம் பெரிதாயிருந்தாலும் சிறிதாயிருந்தாலும் குனியும்போதும் நிமிரும்போதும் திரும்பும்போதும் உழைப்புண்டாகின்றது. அது நமக்கு எளிதானவேலையாக இருப்பினும் மற்றவர்கள் நம்மைத் தூக்கிக் குனியவும் நிமிரவும்செய்தால் அவர்களுக்கு அது சற்று வருத்தமாகவேயிருக்கும். ஆகையால் நாமெல்லாரும் வேலைசெய்துகொண்டேயிருக்கிறோம். வேலை ஒன்றுமில்லாமல் ஜீவித்திருக்கமுடியாது. ஜீவித்திருக்கவேண்டுமானால் உழைக்கவேண்டும்.

வேலையில்லாமலிருக்கவேண்டுமென்று விருப்பமிருந்தபோதிலும் அப்படியிருப்பது மேற்சொல்லியபடி அசாத்தியமாகையால், வேலையில் உபயோகமுடையது இன்னதென்றும், உபயோகமில்லாதது இன்னதென்றும் பகுத்தறியவேண்டும். பரோபகாரமான செய்கையையும் பிறருக்குப் பயன்படாத செய்கையையும் தெரிந்துகொள்ளவேண்டியது ஆவசியகமானது. அவ்வாறு பகுத்தறிவது எளிதன்று. நெல்விதைக்குமுன்னமே நிலத்தை உழவேண்டுமென்று தெரியும். ஆனால் நெல் சற்று விளைந்தபின்பு நிலத்தை உழுதாலோ பயிர் அழிந்துபோகும். ஜலம்நிறைந்த அண்டாவில் பின்னும் ஜலத்தைக் கொட்டுவது பயனற்றவேலை.

எல்லாவேலையிலும் அதிக உபயோகமான வேலையைத் தெரிந்துகொள்ளவேண்டுமானால் ஜீவித்திருப்பதற்கு எது இன்றியமையாததென்று யோசித்துப் பார்க்கவேண்டும். இது தெரிந்துகொள்ளுவது வருத்தமல்ல. சகலருக்கும் தெரிந்தகாரியமே. ஆகாரமில்லாமலும் தண்ணீர்குடியாமலும் இருந்தால் இறந்துபோவோமென்று சிறுவர்களுக்கும் தெரியும். ஆதலால் அன்னபானங்களிரண்டும் ஆவசியகமானவைகள். அவற்றைச் சம்பாதிக்கிறவேலை மிகவும் விசேஷமானது. அந்த வேலை நடவாதிருந்தால் பஞ்சமுண்டாகும். அன்னமும் தண்ணீருமில்லாமல் ஜனங்கள் இறந்துபோவார்கள்.

நாம் ஜீவிப்பதற்காகவே மழைபெய்கின்றது. மழையில்லாவிட்டால் நிலமும் ஆளும் கலப்பையும் இருந்து உபயோகமில்லை. மழை எக்காலத்திலும் பெய்யமாட்டாது. எப்பொழுதும் பெய்யுமானால் விவசாயம் நடவாது. ஆகையால் குளம்வெட்டி ஜலம் நிரப்புவதும், வாய்க்கால்வெட்டி அதன் வழியாக ஆற்றுஜலத்தைப் பயிருக்குப் பாய்ச்சுவதும் உபயோகமான வேலையாகும். சாதாரணமாகப் பெய்கிறமழையால் எல்லாப்பயிரும் விளையாது; எல்லாம் விளைந்து பலன்தரவேண்டுமானால் கட்டிவைத்திருக்கிற ஜலத்தைப் பாய்ச்சிப் பயிர்செய்யவேண்டும். கலப்பை, மண்வெட்டி இவைகளைச் செய்வதும், அவைகளைக்கொண்டு வேலைசெய்வதும் உபயோகமான வேலையாம். இவ்வாறே நாம் சாப்பிடும் பதார்த்தத்தை உற்பத்திசெய்வதற்குத் தருந்த கருவிகளையும் யந்திரங்களையும் செய்வதும், அவற்றை உபயோகப்படுத்துவதும் பயனுள்ள வேலையாகும். இன்னும் பற்பலவிதமான விவசாயவேலையும், தச்சவேலை, கொல்லவேலை, குசவேலை, கன்னாரவேலை, கல்லறுத்து வீடுகட்டும்வேலை இவைகளும் செய்துவருகிறோம். இவ்வேலை அதிகமாக நடந்தால் மற்றவேலையும் மிகுதியாக நடக்கும். ஒன்று குறைந்தால் மற்றதும் குறையும். மேற்சொல்லிய தொழில்களில் வேலை செய்கிறவர்கள் அவர்கள் பிழைப்பதோடுகூட மற்றெல்லாரும் பிழைக்கும் படியாகவும் உதவிசெய்கிறார்கள். அவர்கள் வேலையை நிறுத்தினால் நாம் எல்லாரும் இறக்கவேண்டியதாக நேரிடும்.

ஆகாரம் நமக்கு ஆவசியகமானது. ஆகாரமில்லாமல் பிழைத்திருப்பது அசாத்தியம். சௌக்கியமாயிருக்கவேண்டுமானால் ஆகாரம்மாத்திரம் போதாது. மழையிலும் வெயிலிலும் திரிந்தால் அசௌக்கியமும் வியாதியும் சம்பவிக்கும். மழையிலும் கானலிலும் பிள்ளைகளைத் திரியவிட்டு வளர்க்க முடியாது. வளர்த்தபோதிலும் அவர்கள் வளர்ந்தபின்பு திடமாக இருக்க மாட்டார்கள். ஆதலால் வசிக்க வீடும், உடுக்கத் துணியும்வேண்டும். கூரை போடுவதற்குப் பனையும், கல்சுடுவதற்கும் அடுப்பெரிப்பதற்கும் மரமும் வைத்துப் பயிரிடுவது உபயோகமானவேலை. பிரயாணிகளுக்கு நிழல்தரும் படியாகப் பாதையின் இருபுறத்திலும் மரம்வைத்துப் பயிரிடுவதும் நல்ல வேலை என்றெண்ணப்படும். அந்த மரம் பலன்கொடுத்தாலும் கொடாமற் போனாலும் பாதகமில்லை. துணிநெய்வதற்கு உபயோகமான செடிகளைப் பயிர்செய்வதும் பிரயோசனமுள்ள தொழிலாகும்.. அக்காரணத்தினாலேயே பருத்தி முதலானவைகளால் துணிநெய்வதற்காக யந்திரங்களை உற்பத்தி செய்து அவற்றை வேலைசெய்வதும் உபயோகமான வேலையாகும். வீடும் உடையும் அழுக்காயும் விகாரமாயும் இருக்கக்கூடாது. அப்படியிருப்பவைகளைச் சுத்தப்படுத்துவதும் உபயோகமான வேலையே.

சில வீடுகளில் சில இடங்கள் யாதொரு உபயோகமுமில்லாமலிருக்கின்றன. அவைகளைக் கட்டிய வேலைமுழுதும் உபயோகமற்றது. மழைக்கும் வெயிலுக்கும் ஆதரவாகாத சில கட்டடங்களுண்டு; அவைகளைக் கட்டினவேலையால் சிறிது பயனுண்டு. இப்படிப்பட்ட பல கட்டடங்களின் வேறுபாட்டை எளிதாகத் தெரிந்துகொள்ளவேண்டும். அன்றியும் வீட்டுக்குப் போவதற்குக் காய்ந்து பரிசுத்தமாகிய நல்லபாதையும் இருக்கவேண்டும். இன்னும் கட்டடத்தில் நமக்கு அநேக மாதிரி தெரிந்திருக்கின்றது. அது மிகுதியானதல்ல. எல்லாவீட்டிலும் கட்டடம் ஒரு மாதிரியாக இருப்பதில்லை.

துணிநெய்து உடைதைப்பதில் மிகுந்த வேலை செல்லுகின்றது. அதற்கு விசேஷமான புத்திநுட்பம் வேண்டியதாயிருந்தும் அந்த உழைப்பினால் உபயோகமில்லை. பட்டும் பருத்தியுங்கொண்டு வஸ்திரத்தில் பூவேலைசெய்து சரிகைக்கெண்டிவைப்பதால் உலகத்திலுள்ள ஐசுவரியம் அதிகமாகாது. சரிகையில்லாவிட்டால் ஐசுவரியம் குறைந்துபோவதுமில்லை. ஜீவித்திருப்பதற்குவேண்டிய பொருள்மாத்திரம் ஐசுவர்யமென்று சொல்லப்படும். ஆகையால் சரிகைநெய்வதைவிட்டு ஜீவிப்பதற்கு இன்றியமையாத பொருளைச் சம்பாதித்தால் உபயோகமுண்டு. வஸ்திரத்தில் பூவேலைசெய்வதால் அதன் பலம் குறைந்துபோகும். மழைக்காவது வெயிலுக்காவது உதவாது. அந்த வேலையால் பயனில்லை. சரிகையினாலும் பூவேலையினாலும் வஸ்திரத்துக்கு அழகுண்டாகின்றது. ஆயினும் அது பயனற்ற வேலையே.

சில வேலையால் உண்டாகும் உபயோகம் அதைச் செய்யும்போது தெரியாது. எப்படியெனில், பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் புத்தகம் வாசிக்கும்போதும், இறகைக்கொண்டெழுதும்போதும் அதினால் பின்னிட்டுக் கிடைக்கப்போகிற பிரயோசனம் தெரியாது. இந்த வேலைக்கும் முன் சொல்லிவந்த வேலைக்கும் பேதமுண்டு. இது பதார்த்தங்களைத் தாக்கிவைக்கும்படியான வேலையல்ல. ஆயினும் அதினால் மற்ற வேலையின் தன்மையையும் சம்பந்தத்தையும் அறிகிறோம். இந்த வேலைசெய்வதால் மனதுக்கு விர்த்தி உண்டாகும். மற்ற வேலையெல்லாம் தேகத்தைப் போஷித்துத் திடப்படுத்தும்.

இவைபோக வேறொரு விதமான வேலையுண்டு. அது ஜனங்களுக்கு விநோதமுண்டாக்குவது. செப்படிவித்தைக்காரர் செய்யும் கைசாதுரியத்தால் ஆச்சரியமுண்டாகின்றது. பாடகர் பாடுவதால் ஆனந்தமுண்டாகின்றது. சுதி லயத்தோடு ஆடுகிற ஆட்டத்தைப் பார்த்தால் மகிழ்ச்சி உண்டாகின்றது. கூத்தாடிகளும் அகசியக்காரரும் செய்யும் வேடிக்கையைப் பார்த்துச் சிரிக்கிறோம். அவர்களுடைய தொழிலால் உலகத்திலுள்ள சம்பத்து அதிகமாகாவிட்டாலும், ஜீவிப்பதற்குப் போதுமானதைச் சம்பாதித்தபின்பு மனதில் கெட்ட எண்ணங்களுக்கு இடங்கொடுத்து அவைகளை விர்த்திசெய்வதைவிட விநோதமாகக் காலம்போக்குவது நல்லது. மனது வேலைசெய்யாத காலமில்லை. எப்பொழுதும் மனதில் ஏதாவது எண்ணம் இருந்துகொண்டிருக்கும். ஆதலால் மனது நல்ல எண்ணத்திலேயே செல்லும்படியாக முயலவேண்டும். கெட்ட எண்ணமுண்டானால் அயலாருடைய நடத்தையைக் கெட்டதாகப் பாவித்து அவர்களைப்பற்றி அவதூறாகப் பேசவேண்டிவரும். வேலைசெய்து சம்பாதியாமல் பிறர் சம்பாதிப்பதைப்பார்த்துப் பொறாமைப்படுவதினாலேதான் திருடுவதற்கு எண்ணமுண்டாகின்றது. சரியான ஆகாரமும் உழைப்பும் இல்லாவிடில் தேகத்துக்கு நோய் உண்டாகும். அவ்வாறே நல்ல எண்ணமில்லாவிட்டால் கெட்ட எண்ணமுண்டாகி, ஒருவன் மற்றொருவனை அடிக்கவும் ஒருவேளை கொல்லவும் செய்யும். நம்மெல்லாருக்கும் கெட்ட எண்ணம் உண்டாகக்கூடியதாயிருக்கின்றது. அது உண்டாகாமல் தடுக்கும்படியான முயற்சியை யாவரும் தேடவேண்டியது.

விடாமுயற்சி.

வியாபாரிக்கு வேண்டிய பல குணங்களில் விடாமுயற்சி மிகவும் விசேஷமானது. என்றைக்கேனும் ஒருநாள் முயற்சிசெய்தால் போதாது. அனுதினமும் விடாமல் முயலவேண்டும். தீர ஆலோசித்துத் தெரிந்தெடுத்த கருமத்தை இடையில் தவறாமல் நடத்திமுடிப்பதே விடாமுயற்சி என்னப்படும். இது வியாபாரிகளுக்கு இன்றியமையாத சாதனமாகும். ஒரு பட்டணத்தில் ஒரு வியாபாரி கடைவைத்தான். அநேக நாளாகக் கடைதிறந்திருந்தும் ஒருவரும் சாமான்வாங்க வரவில்லை. இதனால் தளர்ச்சி அடையாமல் பின்னும் நாடோறும் கடையைத்திறந்து உட்காந்திருப்பான். சிலநாளானபின்பு ஜனங்கள் அவன் கடைக்கு வரத் தலைப்பட்டார்கள். வியாபாரம் விருத்தியாயிற்று. நல்லலாபம் கிடைத்தது. கடைசியாகத் தகுந்த சொத்தைச் சம்பாதித்துக்கொண்டு வியாபாரி தன் தொழிலை நிறுத்தினான். இவ்வாறாக விடாமுயற்சியில்லாமல் வருத்தமடைந்தபேர் எண்ணிறந்தவர்களுண்டு. ஆரம்பத்தில் அபஜயமடைவதால் தைரியம் விடக்கூடாது. விடாமல் தொடர்ந்து முயன்றால்தான் இறுதியில் சௌக்கியம் கிடைக்கும்.

எந்த வேலையானாலும் சரி, விடாமல் செய்துவந்தால் அதனால் நமக்குப் போதுமான பொருளைச் சம்பாதிக்கலாம். வேலை அற்பமாயிருக்கிறதே என்று யோசிக்கக்கூடாது. பம்பாய் நகரத்தில் குபேரனுக்குச் சமமாகச் செல்வமிகுதியால் சிறந்த பிரபு ஒருவருண்டு. அவர் ஆரம்பத்தில் வெறும் புட்டிகளை விற்று ஜீவனம்செய்தவர். ஆகையால் அற்பவேலையென்று ஒன்றையும் இகழக்கூடாது. லாபம் கிடைக்குமானால் எந்தவேலையானாலும் ஒன்றே.

தளர்ச்சியின்றி முயலவேண்டும். விடாமுயற்சி புத்திகூர்மையினும் சிறந்தது. புத்திகூர்மையால் வியாபாரம் ஒருகால் பலிக்கும். விடாமுயற்சியிருந்தால் அது பலிக்காமற்போகாது. ஆரம்பத்தில் உண்டாகிற வருத்தத்தால் அதைரியப்படக்கூடாது. அப்பப்போது உண்டாகும் சங்கடங்களால் சிறிது நஷ்டமுண்டானபோதிலும் வியாபாரம் முற்றும் கெட்டுப்போவதில்லை. கெட்டாலும், "அவனால் ஆனதெல்லாம் செய்துபார்த்தான், முடியவில்லை" என்று ஜனங்கள் சொல்லும்படியாகக் கூடியவரைக்கும் விடாமல் முயலவேண்டும். நீ என்னசெய்தபோதிலும் முழுமனதோடு சக்திஉள்ளமட்டும் செய். லாபம் தானே கிடைக்கும்.

எடுத்தகருமம் அசாத்தியமாயினும் முயற்சிக்குப் போதுமான கூலி கிடைக்கும்.

"தெய்வத்தா லாகா தெனினு முயற்சிதன்
மெய்வருந்தக் கூலிதரும்" என்றார் நாயனார்.

ஒவ்வொருவரும் வருத்தப்பட்டால்தான் சுகமடையலாம். வருத்தமின்றிப் பொருள் சம்பாதிப்பது அரிது. நாம் செய்யும் வேலைமாத்திரம் வருத்த

மானதென்று நினைக்கவேண்டாம். எந்த வேலையிலும் வருத்தம் இருந்துகொண்டிருக்கின்றது. நாம் எடுத்தகருமம் முடியாவிட்டால் தெய்வச் செயல் என்று சும்மாவிருக்கிறது தவறு. ஆராய்ந்துபார்த்தால் நாம் செய்த பிசகு தெரியவரும். எஜமானன் வேலைக்காரனைத் தள்ளிவிட்டால் சிறு பிசகுக்காகப் பெரிய தண்டனையை விதித்தானென்று வேலைக்காரன் நினைப்பது வழக்கம். அப்படித் தீர்மானிப்பது நியாயமன்று. ஏனெனில் எஜமானன் தன் வேலைக்காரனைத் தள்ளிவிட்டது குடத்தை உடைத்ததற்காகவன்று. வேலையாளின் அஜாக்கிரதையை நாளாவர்த்தியில் எஜமானன் தெரிந்திருந்ததால் அவனை நீக்குவதற்குக் குடம் உடைந்தது ஒரு காரணமாயிற்று. அவ்வாறின்றி வேலைக்காரன் நல்லொழுக்கம் உடையவனாய் இருப்பானாகில், குடம் உடைத்ததற்காக வேலையை இழந்துவிடமாட்டான்.

எடுத்தகாரியம் முடியாமற்போவதாலும் சிறிது பிரயோஜனம் உண்டு. தவறிப்போனதற்குக் காரணம் என்னவென்று யோசிக்கும்போது நம்முடைய தெரியாமை விளங்கும். காரியசித்தியானால் நமக்குச் செருக்குண்டாகின்றது. பின்னிட்டு அஜாக்கிரதையும் உண்டாகும். காரியம் தவறினால் ஜாக்கிரதை உண்டாகின்றது. எந்தவிஷயத்தில் பிசகிப்போனோமென்று யோசிக்கச் சமயம் நேரிடும். நம்முடைய தெரியாமையைத் தெரிந்துகொண்டால்தான் விருத்தியடையலாம்.

நினைத்த கருமத்தை முடிப்பதற்கு ஒரே உபாயம் இருக்கின்றது. அதுவே விடாமுயற்சியென்னப்படும். எத்தனித்தபின்பு எவ்வளவும் அதைரியப்படக்கூடாது. மனப்பூர்வமாக உழைத்தால் மலைபோல்வந்த தடையெல்லாம் பனிபோல் பறந்துபோம். முடியுமோ முடியாதோ என்ற எண்ணத்தை மறந்துவிடவேண்டும். அந்த எண்ணம் உண்டாவதாலேயே காரியம் முடியாமற்போகும். நாம் நம்மிஷ்டப்படி நடப்பது முடியாது என்பது உண்மையே. அநேக சங்கதிகளைச் சேர்த்து ஆலோசிக்கவேண்டியதாயிருக்கின்றது. இஷ்டப்படி எல்லாம் இசையமாட்டாது. இதெல்லாம் உண்மையாயினும் மனப்பூர்வமான விருப்பம் இருந்தால் கூடியவரைக்கும் உலககாரியங்களை வசப்படுத்திக்கொண்டு எடுத்த கருமத்தை முடிக்கலாம்.

பாலியத்தில் சற்றேனும் அதைரியப்படக்கூடாது. வாழ்நாளின் ஆரம்பத்திலேயே அதைரியம் உண்டானால் பின்னிட்டு ஒன்றும் நன்றாக நிறைவேறாது. பட்டுப்பூச்சிகள் கூட்டில் வளரும்போது அதைவிட்டு வெளியேபோனால் உஷ்ணத்தால் வருந்தி இறந்துபோவோமென்று நினைக்கும். வெளியே வந்தபின்போவெனில் சூரியகிரணத்தில் சந்தோஷமாக ஓடியாடிக்கொண்டு கூட்டை மறந்துபோகும். விடாமுயற்சியால் ஆகாதது ஒன்றும் இல்லை. செய்யவேண்டுமென்று உண்மையாக விருப்பங்கொண்டதையெல்லாம் செய்யலாம். விடாமுயற்சி இல்லாமல் சிறிதுகாலம் ஒரு விஷயத்திலும் சிறிதுகாலம் மற்றொருவிஷயத்திலும் உழைப்போமானால் ஒன்றிலும் பெருமை அடையமாட்டோம். மணல் ஓரிடத்தில் தங்காமல் காற்றில் இங்கும் அங்கும் அலைவதால் அதனால் நிலையான கட்டடம் உண்டாகமாட்டாது. ஒரேயிடத்தில் நிலைத்திருந்தால் பிரயோஜனம் உண்டு.

உலகத்தில் ஒருவரை ஒருவர் கல்வியிலும் செல்வத்திலும் மிஞ்சவேண்டுமென்றும் உழைக்கிறார்கள். இந்த ஏணியில் ஒருவர் மேற்படியிலும், ஒருவர் கீழ்ப்படியிலும் இருக்கிறோம். இருபது படிக்குக் கீழிருக்கிறவர்களும் அவரவர்களுக்கு மேலே இருக்கிறபடிக்குப் போவதற்கு முயுன்றுவருகிறார்கள். எவ்வளவு உயரம் இருந்தபோதிலும் திருப்தி உண்டாவதில்லை. இது மனுஷசுபாவம். மோக்ஷமெல்லாப் படிக்கும் உயரத்திலிருக்கின்றது. அது உன்னதமானது. நமது உழைப்பெல்லாம் அதனிடத்தில் முடிவுபெறும். நாம் போகப்போக அது தூரமாகக் காணப்படும். ஆயினும் நாம் திருப்தியடையாமல், பின்னும் அதை நாடிச் செல்லுவோம். இந்த விருப்பம் விடாமுயற்சியை உண்டாக்குகின்றது. மேலே போகவேண்டுமென்ற எண்ணம் இல்லாதிருந்தால் உலகத்திலிருந்து சமாளிக்கமுடியாது. துரதிஷ்டத்தை விலகிக்கொள்ளவும் இயலாது. முதலில் ஒரு தடை உண்டானால் அதோடு முயற்சி நின்றுவிடும். விடா முயற்சியால் திரும்பியும் உழைக்கிறதில்லை. எண்ணம் நிறைவேறாமல் போவதைக் கடவுள் சித்தமென்று நம்பிச் சிலர் சும்மாவிருப்பதுண்டு. உயர்ந்து விருத்தியடையவேண்டுமென்ற விருப்பம் இருக்கும்பக்ஷத்தில் நடுவில் உண்டாகும் தடையால் கெடுதி உண்டாகாது. கெடுதி சிறிது காலம் உண்டானாலும் முயற்சியை நிறுத்தமாட்டாது. உண்டாகிற தடையால் தைரியமும் முயற்சியும் அதிகரிக்கும்.

மனுஷர்களை இருவகையாகப் பிரிக்கலாம். ஒருவகையார் காலத்துக்கும் சமயத்துக்கும் தக்கபடி முயற்சியை விட்டிருப்பவர்கள்; மற்றொரு வகுப்பார் எது எப்படியானாலும் கொண்டகருத்தை நிறைவேற்றும்பொருட்டு விடாமல் முயற்சிசெய்பவர்கள். விரும்பிய பொருளைச் சம்பாதிப்பதில் கருத்தாயிருப்பது மேலான குணம். அந்தக் குணத்தால் அநேக கொடுங்கோலரசர் தங்கள் ராஜ்யம் இழந்திருக்கிறார்கள். பலவிதமான அநியாயமெல்லாம் அந்தக் குணத்தால் மாறியிருக்கின்றது. நாம் விருத்தியடைந்து நிலைபெற்றிருக்கவேண்டுமென்று எண்ணம் கொள்ளுவதால் வியாபாரம் ஓங்கிவளரும். அந்த எண்ணமே ராஜ்யங்களை உண்டாக்கும்.

நகரங்களும் ராஜாங்கங்களும் அழிந்துபோகின்றன. உற்பத்தியாவதெல்லாம் அழியும். மனுஷனும் அவனால் உண்டாகிற வேலைகளும் இவ்வாறு மாறிவரும். உற்பத்தியானபின்பு விருத்தியாகிக்கொண்டுவருவதில் ஒருகாலத்தில் அவ்விருத்தி உயர்ந்துநிற்கும். வியாபாரத்திலும் இம்மாறுதல் காணலாம். அதுவும் ஒருகாலத்தில் விருத்தியடைந்து பின்பு மற்றொருகாலத்தில் அழியும். இது உலகத்தியற்கை. விருத்தியாகிற காலத்தில் வியாபாரியினுடைய வல்லமைக்குத்தக்கபடி செழிப்புண்டாகும். அவன் திறமையுடையவனாகவும், காலமும் சமயமும் தகுந்தபடியாகவும் இருந்தால் வியாபாரமும் செல்வமும் வளர்ந்தேறும்.

நிலையாக இருக்கிற ஜலந்தான் நாற்றமெடுத்துக் கெட்டுப்போகும். ஓடுகிற ஜலம் தெளிவாக இருக்கும். மந்தபுத்தியால் யாதொரு பயனுமில்லை. உயரவேண்டுமென்கிற விருப்பங்கொண்டு விடாமுயற்சி செய்தால்தான் அறிவு மங்காமலிருக்கும். பிடிவாதம் நல்ல வழியில் செல்லுமாகில் சக்தி அதிகரிக்கும். பிடிவாதமாவது தீர ஆலோசித்துவரும் தீர்மானத்தை உறு

தியாகப் பிடித்து அதன்படி நடந்துவருவதேயாம். அநேக உபாயங்கள் தேடியும் தாங்கள் எடுத்தகாரியம் முடியவில்லையென்று ஜனங்கள் சொல்லப் பலதரம் கேட்டிருக்கிறோம். முடியாமற்போனது அவர்களுடைய புத்தியீனந்தான். விடாமுயற்சி செய்திருப்பாராகில் எடுத்தகருமம் முடியாமற்போகாது. ஒன்றைவிட்டு ஒன்றைத் தொடங்குவதாலேயே ஒன்றும் நிறைவேறவில்லை. நம்முடைய இஷ்டப்படிக்கே எல்லா விஷயமும் இசையமாட்டாது. இவ்வாறு வரும் தடைகளைத் தைரியமாக நீக்கிக்கொண்டு முயலவேண்டும். இல்லாவிடில் உலகத்தில் ஒன்றும் நிறைவேறாது. வருத்தப்படாமல் இருக்கவேண்டுமென்று விருப்பம் இருந்தால் சிலநாளைக்குள் உலகம் அழிந்துபோம்.

முதலில் தீர்க்கமாக ஆலோசனைசெய்து, பின்னிட்டுத் தீர்மானம் செய். உன்னுடைய நடத்தையில் வேறுபாடில்லாவிடில் தீர்மானத்தால் உபயோகமில்லை. ஆகையால் தீர்மானம் முடிவானபின்பு அதன்படி நடக்கவேண்டியது. செய்யக்கூடியதை நன்றாகச்செய். முடியுமோ முடியாதோவென்று சந்தேகமிருந்தால், அது போவதற்கு முயற்சிசெய்து பார்க்கவேண்டும். ஏதேனும் ஒன்று செய்துகொண்டேயிரு. அது எப்படியிருந்தாலும் குற்றமில்லை. சும்மா இருக்கத்தகாது. உனக்குச் சக்தியில்லையானால் இருக்கிறமட்டும் செய். கையாலானதை முழுமனதோடு செய்யவேண்டும். நாளைக்குச் செய்யலாம் என்று இருப்பதெல்லாம் தவறு. நாளைக்கு இருப்போமென்று என்ன நிச்சயம். இருக்கும்காலத்திலே செய்வனவற்றைத் திருந்தச்செய். காற்றுள்ளபோது தூற்றிக்கொள்ளவேண்டுமென்பது நமக்குத் தெரிந்தகாரியம் அல்லவா? வேலைசெய்ய ஆயுதமில்லையென்று சொல்வது வீண். கருவியில்லாத பிராணி இல்லை. அததற்குத்தகுந்த வேலைசெய்வதற்குக் கருவிகளைக் கடவுள் படைத்திருக்கிறார். பூச்சிகள் அததற்குரிய வேலைசெய்யவில்லையா? இவைகள் கருவியில்லையென்று சும்மா இருப்பது உண்டா? உனக்குக் கருவிவேண்டுமானால் உனக்குப் புத்தியிருக்கின்றது. இறகைப் பிடிப்பதற்கு விரலும் இருக்கின்றது. வேலைசெய்ய விருப்பமிருந்தால் இவ்விரண்டு கருவியும் போதும். அவைகள் இருக்கக் கருவி இல்லையென்று புலம்புவது புத்தியீனம். இறகினால் உண்டான அற்புதங்கள் எண்ணிறந்தன. அவைகளையெல்லாம் யோசித்துப்பார்.

வியாபாரத்திலுங்கூட எழுதுகிற இறகு மிகவும் பிரயோசனமாகும். விளம்பரம் எழுதுவதால் வெளியில், தூரத்தில் இருப்பவர்கள் உன் கடையிலிருக்கிற சாமானையும் அதன் விலையையும் அறிந்துகொள்ளுவார்கள். நிலையான வியாபாரம் செய்ய நாள்செல்லும். மோசம்செய்து லாபம் சம்பாதிப்பது எளிது. ஆயினும் ஒருதரம் நீ செய்கிற மோசம் தெரிந்துவிட்டால் அதோடு உன் வியாபாரம் அழிந்துபோகும். பின்னிட்டு விளங்குவது அரிது. பொன்முட்டையிட்ட வாத்தைக் கொலைசெய்த கதையாக முடியுமேயன்றி வேறில்லை. நியாயமாக விளம்பரம் எழுதி ஜனங்களுக்குத் தெரிவித்தால் நாளாவர்த்தியில் உன்னுடைய சத்தியத்தை அறிந்து உன் கடைக்குவருவார்கள். வியாபாரம் இறுதியில் நிச்சயமாய் விருத்தியடையும். விலைக்கு வாங்குகிறவர்கள் சாமான்களை நல்லது கெட்டதென்று தெரிந்துகொள்ளமாட்டார்களென்று நினைத்து மோசம்போகவேண்டாம். எந்த விலைக்கும் சாமான்களை விற்கலாம் என்று பலரும் எண்ணுகிறார்

கள். இது முற்றும் பிசகு. ஒருவன் தன்னிடத்தில் இருந்த ஒரு சாமானுக்கு அரை அணா விலை கூட்டிவிற்பேன், ஜனங்களுக்கு, அரை அணா கூட்டுவதும் கழிப்பதும் தெரியாது என்று சொன்னான். ஆம், ஆம், சிறிதுகாலம் இப்படி மோசம்செய்யலாம். பின்னிட்டுத் தெரிந்துவிட்டால் உண்டாகிற நஷ்டம் லாபத்தைப்பார்க்கிலும அதிகமாகும். நீ விற்கிற சாமானை மற்றொருவன் கடையில் அரை அணா குறைத்து வாங்கும்போது. உன் புரட்டு தெரிந்துபோகும். அதுமுதல் உன் வியாபாரம் நடவாது என்று கேட்டிருந்தவன் சொன்னான்.

ஏதேனும் ஒன்றைச் செய்யவேண்டுமென்கிற எண்ணம் விசேஷமானது; சந்தேகம் கூடாது. சந்தேகமுள்ளவன் எதையும் செய்யமாட்டான். செய்யத்தொடங்குமுன் தீர ஆலோசிக்கவேண்டும். ஆலோசித்துத் தீர்மானித்தபின்பு உடனே தீர்மானத்தின்படி நடக்க விருப்பங்கொள்ளவேண்டும். விரும்பியபின் கருமத்தைத் தொடங்கி முடிப்பதே அறிவுள்ளவர்களுக்கு அழகாகும்.

ஆபரணமிழத்தல்.

முன் இந்த இந்துதேசத்தில் மகாகலகமுண்டாகிப் பற்பல தேவாலயங்களையும் ராஜஸம்ஸ்தானங்களையும் அழித்துக்கொண்டு போம்போது, ராணுவச்சேவகர்கள் அநேகர் அவைகளுள் புகுந்து அங்குள்ள பொருள்களைக் கொள்ளையாடினார்கள். அப்படிக் கொள்ளையாடுகிற பொருள்கள் வரவர அதிகமாகித் தாங்கக்கூடாத சுமையாய்ப்போனால், அவைகளைப் போகிறவழியில் இறைத்துக்கொண்டாவது அல்லது கேட்பவருக்குச் சொல்ப விலைக்காகிலும் இனாமாயாகிலும் கொடுத்துவிட்டாவது போவார்கள். அப்படி அவர்கள் போய் விழுந்து கொள்ளையாடின தேவாலயங்களுள் ஒன்றில், வெகு அழகாய் உருவமேற்படுத்தியிருந்த பிரதான பிம்பத்திற்குக் கண்மலராகச் சிறந்த பெரிய வயிரக்கல் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அந்தக் கோயிலைக் கொள்ளையாடப் போனவர்களில் ஒருவன் அந்த வச்சிரத்தைப் பிடுங்கினான். அது செம்மையாய்ச் சாணைபிடிக்கப்படாமையால் ஒளி மழுங்கியிருக்கவே அவன், அதன் மகிமையை அறியாமல் உபயோகமற்றதென்று எண்ணி, அதை எறிந்துபோடக் கருதியிருந்தான். அது தெரிந்து அவன் பக்கத்திலிருந்த ராணுவ உத்தியோகஸ்தன் ஒருவன் இரண்டொரு ரூபாய் விலைகொடுத்து அதை வாங்கிக்கொண்டான். அந்தக் கல் சிறிதும் நீரோட்டமென்பதே இல்லாமல் மிகவும் மந்தமாயிருக்கவே, அவ்வளவு விசேஷமாய் விரும்பத்தக்க பொருளல்லவென்றே அவனுக்கும் தோன்றியிருந்தது. ஆயினும் அவ்வளவு சிறந்த விக்கிரகத்திற்குக் கண்ணாக அமைத்திருந்ததனால், அது மேற்பார்வைக்குத் தோற்றுவதைவிட அதிகவிலை பெறத்தக்கதா

கவே இருக்கவேண்டுமென்று எண்ணி, அவன் அதை வாங்கும்படியாயிற்று.

சிலநாள் கழித்து அந்த உத்தியோகஸ்தன் தனக்குக் கிடைத்த ரத்தினத்தை ஒரு தட்டானுக்குக் காட்டினன். அவன் அந்த வயிரக் கல்லைப்பார்த்து அதிசயித்து, அதைத் தனக்குக் கொடுப்பதானால் அதற்குப் பதில் வேண்டுமளவு பொருள் கொடுப்பதாகச் சொல்லவே அந்த உத்தியோகஸ்தன், அது சிறந்த ரத்தினமாயிருக்கலாமென்று எண்ணி, எங்கிலாந்துக்குப் போம்போது கையோடே கொண்டுபோய் அங்கே நன்றாய்த் தேர்ந்த ஒரு ரத்தின வர்த்தகனைக்கொண்டு செம்மையாய்ச் சீர்திருத்தவேண்டுமென்று தீர்மானித்து, அதை ஒருவர்க்கும் கொடாமலே வைத்திருந்து, எங்கிலாந்துக்குப் போனபின்பு அப்படியே செய்து முடித்தான். அது வெகு சிரேஷ்டமான ரத்தினமாய்த் தேறிற்று. அதைப் பார்த்தவர்களெல்லாரும் எவ்வளவு குறைத்து மதித்தாலும் அதன் விலை ஐயாயிரம் ரூபாய்க்குக் குறையவில்லை என்றார்கள். அந்த உத்தியோகஸ்தனும் இப்படிப்பட்ட சிறந்த வயிரத்தை ஒருவர்க்கும் கொடுக்கக்கூடாதென்று அதை ஒரு கணையாழியாகக் கட்டிக் கையிலே தரித்துக்கொண்டிருந்தான்.

இப்படியிருக்க, ஒருநாள் லண்டன் நகரத்தில் கடைக்குப் போய்க் கையுறை வாங்கிக்கொண்டிருக்கும்போது, கையைக் குனிந்துபார்த்தான். மோதிரக்கல் நழுவி வீழ்ந்துபோய்க் கூடுமாத்திரம் தனியே இருந்தது. தன் உடுப்புகளையெல்லாம் உதறிப்பார்த்ததுமன்றி, அந்தக் கடைமுழுதும் தேடியும்பார்த்தான். அந்த வயிரமணி எங்கும் அகப்படவில்லை. அது எங்கேயோ தவறிப்போயிற்றென்று தீர்மானஞ்செய்துகொண்டு நிராசையாய் வீடுவந்துசேர்ந்தான்.

மறுநாள் நேசர்களெல்லாம் ஒன்றாய்க் கூடுகிற விநோதசாலைக்குப் போகையில், அங்கே தான் விலையுயர்ந்த வயிரக்கல்லை இழந்துபோன செய்தியைப் பிரஸ்தாபஞ்செய்து, அதைக் கண்டெடுத்துக்கொடுப்பவர்க்கு நூறு ரூபாய் இனாம்கொடுப்பதாக ஒரு விளம்பரபத்திரிகை பிரசுரஞ்செய்யும்படி அந்தச் சாலையின் அதிபதிக்கு அறிக்கைசெய்தான். அவன் அப்படியே பிரசித்தப்படுத்தவே, இரண்டொருநாள் கழித்து வீட்டு வேலைக்காரப்பெண் ஒருத்தி, அவர் வீட்டில் இருட்டான ஒரு கதவுமூலையில் விழுந்து கிடந்ததென்று, அந்த வயிரக்கல்லைக் கொண்டுவந்து கொடுத்தாள். அந்த மேலான ரத்தினம் அகப்படவே, அவன் வெகு சந்தோஷமாய்ப் பிரசித்தபத்திரிகையில் கண்டபடியே வெகுமதி அளித்துவிட்டு அந்தக் கல்லை முன்னிலும் அதிக உறுதியாய் மோதிரத்தில் கட்டி முன்போலவே கையிலிட்டுக்கொண்டிருந்தான்.

இப்படியே சிலகாலங் கழிந்தன. பின்பு அந்த ராணுவ உத்தியோகஸ்தன் இத்தேசத்திற்கு வந்து சிலநாளிருந்து, மறுபடியும் செ

லவுபெற்றுக்கொண்டு சுதேசம்போய் அங்கே ஒருநாள் தன் சிநேகிதர்களோடு வேட்டையாட விருப்பங்கொண்டு, தனையெங்கும் ஒருவகைப் பாசிபடர்ந்த ஒரு காட்டிற்குச்சென்றுன். வெயிலைக் கூடப்பாராமல் ஒரு காட்டில் தனியே வெகுதூரம் போகையில், அங்கே ஒருவகைப் பக்ஷிகள் கூட்டமாய்ச் சமீபத்தில் பறந்துபோகக்கண்டு, அவைகளைச் சுடும்படி துப்பாக்கி கட்டித்து அதைத் தூக்கிப் பிடிக்கும்போது தற்செயலாய்க் கண் கைமோதிரத்தின் மேல் விழுந்தது. அதில் ரத்தினமில்லாமலிருக்கவே, அதைச் சற்றே உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தான்; அதற்குள் அவன் குறிவைத்திருந்த பறவைகள் வெகுதூரம் பறந்துபோயின. பிறகு அவன் கையிலிருந்த துப்பாக்கியைக் கீழே வைத்துவிட்டுத் தான் நின்றவிடத்தைச் செம்மையாய் ஆராய்ந்து தேடிப்பார்த்தான். அந்த ரத்தினம் இந்தத்தட்வை அகப்படுமென்கிற ஆசை அவனுக்குச் சிறிதுமில்லை. அவன் எங்கேயென்று தேடிப்பார்க்கிறது? அன்றையதினம் தான் கடந்த அநேகங்காதவழியையும், அப்போது நின்றுகொண்டிருந்த புல்தரையின் தன்மையையும் நினைத்துப் பார்க்கவே, அவனுக்கு அந்த மணிமேலிருந்த ஆசை அடியோடு ஒழிந்துபோயிற்று. ஆயினும் கீழேவைத்த துப்பாக்கியை எடுக்கக் குனிந்தபோது, முன் கட்டித்த மருந்தைக் களைந்து கொட்டிவிட வேண்டுமென்று அவன் மனதில் ஒரு எண்ணமுண்டாயிற்று. அது அவனுடைய நல்லகாலந்தான். அப்படியேசெய்து துப்பாக்கியைக் கவிழ்க்கையில் அதில் கட்டித்திருந்த ரவைமருந்து முதலியவைகளோடு அந்த வச்சிரமும் கீழேவிழுந்தது. (அவன் துப்பாக்கி கட்டிக்கும்போது அந்தக் கல் ஆடிப்போய் அதற்குள் வீழ்ந்துபோயிற்று.) அவன் அந்தப் பறவைகளைச் சுடும்படி துப்பாக்கியைத் தூக்கின தருணத்தில்தற்செயலாய் கைம்மோதிரத்தைப் பாராமலிருப்பனுஞல், உடனே சுட்டுப்போட்டிருப்பான். அந்தக் கல் துப்பாக்கி ரவைபோகிற வேகத்திஞல் எழும்பிப்போய் குறிபார்த்த பக்ஷியின் வயிற்றில் ஒருவேளை புதைந்தாலும் புதையும்; பிறகு அந்தப் பக்ஷியைக் கண்டு எடுத்துப் பக்குவஞ்செய்பவருடைய கையில் ஒருவேளை அகப்பட்டாலும் அகப்படலாம். இதேமாதிரியாய், சகுந்தலை என்கிறபெண் ஒரு நதியில் ஸ்நானம்பண்ணும்போது அவள் கையில் போட்டுக்கொண்டிருந்த கணையாழி நழுவிவிழ்ந்துபோய், அவ்வாற்றில் மீன் பிடித்த சம்படவன் கையில் அகப்பட்டதென்று சாகுந்தல நாடகக் கதை கேட்டிருக்கிறேமல்லவா? அது தப்பிஞல் அதைப் புசிப்பவருடைய பல்லிடுக்கில் தட்டுப்பட்டாலும் தட்டுப்படும். அப்படியின்றி அவனுடைய நல்லகாலத்திற்கன்றே அத்தருணத்தில் அவன் கண் மோதிரத்தின்மேல் படிந்தது.

போய்விட்டதென்று நிராசைசெய்த ரத்தினம் அகப்படவே, அவன் சந்தோஷமாய்த் திரும்பவும் அதை அங்குளீயத்தில் நன்

ருய் அமைத்து முன்போலவே தரித்துக்கொண்டு வெகுநாள் சுக மாய் வாழ்ந்திருந்தான். மறுபடி சேனைத்தலைவனாய் இத்தேசத்திற்கு வந்து ஒரு இடத்தில் பாளயமிறங்கியிருக்கையில், ஒருநாள் அவன் தன் கூடாரத்து வாயிலண்டை உட்கார்ந்து எழுதிக்கொண்டிருந் தான். எழுதுகிறவேகத்தில் மோதிரக்கல் திரும்பவும் ஆடிப்போய் எழுதிக்கொண்டிருந்த கடிதத்தின்மேல் விழுந்தது. அப்போது அவன் அதிக அவசரமாய் எழுதிக்கொண்டிருந்ததனால் அது விழுந்ததைப்பார்த்துச் சற்றே முகஞ்சுளித்து, அதை மேஜையில் ஒருபக்கமாய்த் தள்ளிவிட்டு எழுதிக்கொண்டேயிருந்தான். அச்ச மயத்தில் துரை அவசரமாய் அழைக்கிறாரென்று ஒருவன் செய்தி கொண்டோடிவந்ததனால், ரத்தினத்தை எடுத்து மசிக்கூட்டண்டை வைத்தது நினைவேயில்லாமல், உடனே எழுந்து தன் ராணுவ உடுப்புமுதலியவைகளைத் தரித்துக்கொண்டு எஜமானனண்டைக் குச்சென்றான். அங்கே கொஞ்சநேரமாய்விட்டது. அவ்விடம் விட்டுத் தன் கூடாரத்திற்குத் திரும்புகையில், தன் வயிரக்கல்லை நினைத்துக்கொண்டு அதிவேகமாய் ஓடிவந்தான். (அதுவோ போய் விட்டது! அவன் வெளியே போயிருக்கும்போது அவ்விடத்திற்கு யாரோ ஒரு திருடன் வந்திருக்கவேண்டும்.) அவன் தன் இடத்திற் குவந்து வயிரமணியை வெகுநேரந்தேடினான். எவ்வளவுநேரந்தே டியும் அந்தக் கல் அகப்படவில்லை; அவன் அதைக் கண்டுபிடிக் கும்படி எவ்வளவு பிரயத்தினஞ்செய்தும் ஒன்றும் பயன்படாமற் போயிற்று. பிறகு அதற்காக அநேகம் விளம்பரங்கள் செய்தான். கண்டெடுத்துக் கொடுப்பவர்க்கு விசேஷமாய் வெகுமதி அளிப்ப தாகப் பலதடவை பிரசித்தப்படுத்தினான். அது அகப்படவும் இல்லை; அவன் அதைப்பற்றிக் கேள்விப்படவுமில்லை; போனது போனதுதான்.

நீதிநெறிப்பயிற்சி.

உலகத்தில் மனிதர்களுடைய நடக்கை ஒரு விதமாயில்லை. பல பெயர்களிடத்தில் பலவிதமாயிருக்கக்காண்கிறோம். வாலிபத்தில் ஒருவிதம் வயதுவந்தபிறகு ஒருவிதம் விருத்தாப்பியத்தில் ஒருவித மாய் ஒவ்வொருவனுடைய நடத்தையே அந்தந்தக்காலத்திற்குத் தக்கபடி வேறுபட்டிருக்கின்றது. இதுவல்லாமல் சிலர் பொல்லாங் குசெய்வதிலேயே நோக்கமாயிருக்கிறார்கள், சிலர் நன்மைசெய்வ தையே கருதுகிறார்கள்; சிலர் எப்போபார்த்தாலும் வெறுத்த சொல் லும் கடுத்த முகமுமாயே இருக்கிறார்கள்; சிலர் குளிர்ந்த சொல்லும் சிரித்த முகமுமாயிருக்கிறார்கள்; சிலர் கோபத்தன்மையாயிருக்கி

றூர்கள், சிலர் சாந்தகுணமுடையவர்களாயிருக்கிறூர்கள்; இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான தன்மையுடையவர்களாயிருக்கிறூர்கள். இப்படி நடக்கைகள் வேறுபடுவதற்குக் காரணம் அவரவர்களுடைய பிரதம சிக்ஷையின் வேறுபாடேயன்றி வேறல்ல. சிறுபிராயத்தில் பெற்றோர் பிள்ளைகளைச் சீராய்ப் பாதுகாப்பார்களானால் மனிதர்களிடத்தில் தீயநடத்தைகள் அநேகமாயொழிந்து போமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆதலால் சிறுவர்களுக்கு நன்னெறிபயிற்றுகிறவழியை ஒருவாறு காட்டுகிறோம்.

ஒரு குலத்தில் ஒரு மனிதனுடைய வாழ்நாளில் நடக்கிற நடவடிக்கைகளைக்கொண்டே அந்தக் குலத்தின் வாலாறு முழுமையும் நாம் நன்றாய் நிதானிக்கலாமென்பதும், நமது சிறுபிராயமெல்லாம் ஆதிகாலத்துச் சீர்திருத்தமில்லாத ஜனங்களுடைய தன்மை போலவே கழிகின்றனவென்பதும் அநுபவசித்தமாக இருக்கின்றன. சாதாரணமாய்ச் சிறுபிள்ளைகளெல்லாம் பொய் புளுகு முதலான விஷமச்செயல்கள் செய்வதிலேயே அதிக விருப்பமுடையவர்களாய் இருக்கக்காண்கிறோமல்லவா? தாங்கள் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளாயிருக்கையில் செய்த பல கொடியசெய்கைகளைப் பிறகு நினைத்துக்கொண்டு பிற்காலத்தில் வெட்கமடையாதவர் ஒருவருமில்லை. ஆதலால் சிறுபிள்ளைகளிடத்தினின்று அதிகமான நற்செய்கைகளை நாம் எதிர்பார்க்கக்கூடாது. பிள்ளைகளுக்குச் சிறுவயதில் நன்னடக்கையைப் பலவந்தப்படுத்திக் கற்பிப்பது மிகவும் பிசகு. காலமில்லாக்காலத்தில் பிள்ளைகளுக்கு நன்னெறி பழக்குவது, அகாலத்தில் மனதைப் பண்படுத்துவதுபோலவே, பிறகு கெடுதியாய் விளையும். ஆதலால் குழந்தைகள் குழந்தைகளாகவே இருக்கவேண்டும். வயதுவந்தால் அவர்களுடைய விளையாட்டுப் புத்தியோடுகூட வாலிபக்கொடுமைகளும் ஒழிந்துவிடும். பருவமானது எவ்வளவு கசப்பான பொருளையும் மிகவும் மதுரமாக மாற்ற வல்லதல்லவா?

அது அப்படி, இது இப்படியென்று அடிக்கடி பிள்ளைகளுக்குக் கட்டளையிடக்கூடாது. கட்டளையிட்டால் உடனே அந்தக் கட்டளை நிறைவேறும்படி செய்துகொள்ளவேண்டும். பற்பல நியாயங்களை அதிகமாய்ப் பிள்ளைகள் தலையில் சுமத்துவது நமக்கு மிகவும் அசாத்தியம்; சாத்தியமாயிருப்பினும், நன்மைதீமைகள் இப்படிப்பட்டவையென்று நாம் கற்பித்து, நமக்குத் தோன்றிய நியாயங்களையும் கொள்கைகளையும் பிள்ளைகளுக்குச் சுயபுத்தியில்லாதகாலத்தில் வற்புறுத்தி அறிவிக்கப்புகுந்தால், அவர்களுக்கு நன்மைதீமைகள் இப்படிப்பட்டவையென்று ஆராய்கிற தன்மையற்று நல்லதோ கெட்டதோ நாம் சொல்வதே ஒரு நியாயமாய் அவர்கள் மனதில் புதைந்துபோம். மேலும் நாம் அடிக்கடி கட்டளையிடப்புகின், 'நீ அதைச்செய்' என்னும்போது, 'நான்

மாட்டேன்' என்னும்படி என்றைக்காவது ஒருநாள் பிள்ளைக்குத் தானே மனமெழும்பும். மிதம்மிஞ்சிப் பிள்ளைகளைப் பிடிப்பது மிகவும் பிசகு. அப்படிச் செய்யப்புகுந்தால் காலம் வருவதற்குமுன் காய்களை ஊதற்போட்டுப் பழுக்கச்செய்வதுபோல ரசமற்றதாய் விடும். சில விஷயங்களில் விபரீதமாக முடிந்தாலும் முடியும், நாம் பிள்ளைகளுக்கு இடுகிற கட்டளை, தன்னயத்தைப் பாராட்டிய தாயிராமல், பிள்ளைகளுடைய விருத்தியையே முதன்மையாய்க் கருதியதாகவும், அவசியம் செய்து முடிக்கவேண்டிய காரியத்தைப் பற்றியதாகவும், பிள்ளைகளுக்கு வருத்தமுண்டாக்காததாகவும் இருக்கவேண்டும். இவைகளையெல்லாம் செம்மையாய் ஆராய்ந்து அறியாமல், யாதொரு காரியமும் செய்ய நாம் துணியக்கூடாது. இவ்வளவுதூரம் நிதானித்து நாம் கட்டளையிடுவோமானால் உடனே அந்தக் கட்டளையை நிறைவேற்ற நாம் பின்னிடையவேண்டியதில்லை. அப்படியின்றி முன்னதாய் அவசரப்பட்டு ஒரு நிபந்தனை செய்துவிட்டுப் பின்பு அனுதாபப்படுவதும், மிகுந்த கோபத்தைக் காட்டி உடனே அவர்கள் முன் நகைப்பதும், இதற்காகத் தண்டனை நேரவொட்டாமல் தப்பித்துக்கொள்ளலாமென்கிற தைரியம் பிள்ளைகளுக்கு உண்டாகும்படி செய்துகொள்வதும், பிள்ளைகள் நம்மை அலக்ஷியம்செய்யும்படி நமது கவுரவத்தை நாமே போக்கடித்துக்கொள்ள வழியேயன்றி வேறல்ல.

நாம் நினைத்தபடி ஆளுகிற ஆளுகையெல்லாம் பயன்படா; நியாயத்திற்கேற்க, உலகத்திற்கெல்லாம் நற்புத்திபோதிக்கத்தக்கதாய், நம்மால் கூடியவளவு இலகுவான தண்டனையோடு ஆளுகிற ஆளுகைதான் நினைத்தபடி நிறைவேறத்தக்கது. அதைத்தான் பிராமாணிகர்களாகட்டும், அப்பிராமாணிகர்களாகட்டும் அனைவரும் பெருமைபாராட்டிக் கனப்படுத்துவார்கள். இதுவுமன்றி அந்த ஆளுகை இயற்கையிலுண்டானதுபோலவே உறுதியும் உண்மையும் உடையதாய், தன் காரியங்கள் தாமே ஸஹஜமாய் நடந்தேறி வரும்படி, அவ்வளவு வலிவு பெற்றிருக்கவேண்டும். தண்டனை எவ்வளவு கடினமாயிருப்பினும், அதின் செய்கையில் நிச்சயமும் உறுதியுமிருந்து அதனால் அனைவர்க்கும் கவுரவ புத்தியுண்டாகத் தக்கதாயிருந்தால், அது கடினதண்டனையாக நினைக்கத்தக்கதன்று. முற்காலத்தில் சிக்ஷைவிதிப்பவர்கள், விதிக்கவேண்டிய தண்டனை வெகு கடினமாயிருக்கிறதென்று, குற்றஞ்செய்தவர்களைக் குற்றவாளிகளென்று சொல்ல மனம் ஒப்பாமலிருந்தாலும், குற்றஞ்செய்கிறவர்கள் கொடியதண்டனை விதிக்கிற சட்டத்தைக் கண்டு நடுங்கிக்கொண்டிருந்தார்களேயன்றி அதை அவமதிக்கவில்லையென்று நாம் பலர் சொல்லக்கேட்டிருக்கிறோம். பலவாறு சொல்லியென்ன? கொடுமை கொடுமையையே உண்டாக்கும்; சாந்தகுணம் சாந்தகுணத்தையே உண்டாக்கும். மனதில் இரக்

க்மென்பதே இல்லாமல் நாம் பழக்குகிற பிள்ளைகள் இரக்கமில்லாதவர்களாவார்கள். பூததயையோடு பயிற்றுகிற பிள்ளைகள் பூததயை உடையவர்களாகவே வளருவார்கள். ஒரு ராஜ்யத்தைப் பரிபாலிக்கிற விஷயத்தில் எப்படியோ அப்படியே ஒரு குடும்பத்தைப் பரிபாலிக்கிற விஷயத்திலும் கொடுந்தன்மையிருக்குமாயின், அதனால் பல துர்க்குணங்கள் தாமே தலையெடுக்கும். சாந்தகுணமும் கம்பீரபுத்தியும் இருக்குமாயின், அதனால் விரோதாபிப்பிராயத்திற்கு இடமான பல காரணங்களும் அடங்கிக் கட்டளையை மீறிநடந்தால் எங்கே அபராதம் நேரிடுமோவென்கிற பயம் பத்திமுதலான நற்குணங்களெல்லாம் உண்டாகும்.

பிள்ளைகளைத் தண்டிப்பதற்கு உலகநீதிதவிர நல்லவழி வேறொன்றுமில்லை. நாம் புதிதாய்க் கற்பித்து ஒரு தண்டனை விதிப்பதைவிட ஸஹஜமான தண்டனைகளை அனுபவிக்கச்செய்வதே மேலானது. நாம் கெடுதிகளை அனுபவிக்கும்போது, முன்செய்தது தீச்செயலென்று தெரிந்து நாம் அனுதாபப்படுவதுபோலவே, பிள்ளைகளும் தமக்குக் கெடுதி விளைந்தால் அதைக்கண்டு தாம் செய்தது பிசகென்று நினைத்து அனுதாபப்படமாட்டார்களா? தாய்தந்தையர்கள் தாங்கள் நூதனமாய்க் கற்பித்து தண்டனைசெய்யாமல் ஸஹஜமான தண்டனைகளையே செய்தால் (அதாவது பிள்ளைகள் தங்களைத்தாங்களே தண்டித்துக்கொள்ளும்படி செய்தால்) அப்பிள்ளைகளுக்குப் பெற்றோர்களிடத்தில் எவ்வளவு மதிப்பு உண்டாகமாட்டாது! நாலு பிள்ளைகள் ஒன்றாய்ச்சேர்ந்து பாடம் படிக்கிறதென்று ஏற்பாடு இருக்க, ஒருவன் அதற்குக் கிரமமாய் வராமலே இருப்பனானால் அவனை அடித்து அதட்டிச் சரியாய் நடக்கச்செய்வதுதான் கற்பித தண்டனை. அப்படியின்றி அளவிட்டகாலத்திற்குச்சரியாய் அவன் வராமற்போனால் அவனுக்காகக் காத்திராமல், மற்றப் பிள்ளைகள் அன்றைப்பாடத்தைப் படித்துவிட்டுப் பின்பு அவன் அன்றைப்பாடம் தெரியாமல் தன் குற்றத்தைத் தானேநினைத்து விசனப்படும்படி செய்வது ஸஹஜதண்டனை. பத்துபெண்கள்சேர்ந்து ஒன்றாகக்கூடி வழக்கமாய்க் குளத்திற்குப் போய்க்கொண்டிருக்க அதற்கு ஒருத்தி சரியானகாலத்தில் வராமலே தாமதித்துக்கொண்டிருப்பளானால், அவளுக்காகக் காத்திராமல் மற்றவர்கள் அவளை விட்டுவிட்டுப் போவதுதான் அவளுக்கு விதிக்கவேண்டிய தண்டனை. இப்படி ஒவ்வொரு விஷயத்திலும் பிள்ளைகள் தங்களைத்தாங்களே தண்டித்துக்கொள்ளும்படி செய்வதனால் எவ்வளவு நன்மையுண்டாகுமோ, அவ்வளவு நாம் அடித்து அதட்டுவதனால் உண்டாகமாட்டாது. இதனால் ஸஹஜ தண்டனைக்கும் கற்பிததண்டனைக்கும் உள்ள வேறுபாடு நமக்குத் தெளிவாய்த் தெரிகிறதல்லவா? பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் ஒருவர்க்கொருவர் நம்பிக்கையும் விசுவாஸமும் நல்ல

அபிப்பிராயங்களும் உண்டாக்கத்தக்கது ஸஹஜ தண்டனையை விட வேறொன்றுமில்லை. இப்படிப்பட்ட செய்கை செய்தால் இப்படிப்பட்ட *பயன் விளையுமென்று பிள்ளைகளுக்கு நற்புத்திபோதித்து, அப்படிப்பட்ட விளைவுகளையே அவர்களுக்கு தண்டனையாக் நிரூபித்துக்காட்டுகிற பெற்றோர்களே பிள்ளைகளுக்கு அனுகூலமானவர்கள். நினைத்தபடியெல்லாம் புத்தி மாறத்தக்க வாலிபவயதில், ஒன்றும் சங்கதியே தெரியாமல் பொம்மையாடுகிற ஆட்டம்போல் ஆடவொட்டாமல், அவர்களுடைய செய்கையின் விளைவுகளையே சிக்ஷையாக அனுபவிக்கச்செய்து நன்றாய்ப் போஷிக்கப்படுகிற பிள்ளைகள்தாம் பிற்காலத்தில் தம்மைத்தாம் ஆளத் திறமையுள்ளவர்களாய்த் தமது வாழ்நாளைச் சுகமாய்க் கழிக்கமாட்டுவார்கள்.

"தந்தை மகற்காற்று நன்றிய வையத்து
முந்தி யிருப்பச் செயல்"

என்பதற்கேற்க மக்கள் மிகவும் பெருமைபெற்று வாழும்படி தாய்தந்தையர்கள் அவர்களுக்குக் கல்வியைச் செம்மையாக கற்பிக்கவேண்டும். பிள்ளைகளின் புத்திக்கு எட்டுகிறவரையில் கடவுளுடைய குணாதிசயங்களைக் கற்பிக்கவேண்டும். வஸ்து தத்துவங்களை உள்ளது உள்ளபடியே போதிக்கவேண்டும். மற்றச் சகலமான நீதிநியாயம் முதலியவைகளையும் தெளிவாய் அறிவிக்க வேண்டும். இத்தன்மையான கற்பனைமாத்திரம் வெகு கவனமாய் உபயோகிக்கப்படுமானால் துராக்ஷேபமும் வீண்வாதமும் செய்கிற சுபாவம் மாறி ஒரு வருத்தத்திற்கும் இடங்கொடாமல் சிறுவர்களுடைய புத்தி வெகு செழிப்பாய் வளரும்; தெய்வபக்தியும் விருத்தியாகும்.

பெற்றோர்களாகட்டும் படிப்பிப்போர்களாகட்டும் பிள்ளைகள் விஷயத்தில் முக்கியமாய்க் கவனிக்கவேண்டுவது என்னவெனில், அவர்கள் தங்களிடத்தில் சகலமான அந்தரங்கங்களையும் சுவாதீனமாய் வந்து சொல்லும்படியான நம்பிக்கையைப் போக்கடித்துக்கொள்ளாமலே, தம்மிடத்தில் அவர்களுக்கு மதிப்பு உண்டாகும்படி செய்யவேண்டிய மார்க்கத்தைத் தேடவேண்டும். அநேகம் பிள்ளைகள் மேலுக்குப் பெரியோர்களைக் கவுரவப்படுத்துவதுண்டு; தமக்குள்ள ரகசியங்களையும் வருத்தங்களையும் மனம்பொருந்தி அவர்களோடு சொல்லத்துணிகிறதில்லை. அதனால் இளம்புத்திக்கு எவ்வளவும் சேதமுண்டாகாது. தாய்தந்தையர்கள் மக்களை அழைத்து அடிக்கடி எந்தவிஷயத்தையும் அவர்களோடு மனம் ஒத்து போதித்துப் பழக்காமையாலேதான் அப்படியாகின்றது. தகப்பன் தன்னிடத்தில் பிள்ளைக்குப் பூர்ணமான நம்பிக்கையும் பக்தியும் மனப்பிடிப்பும் உண்டாகும்படி செய்துகொண்டால், பிறகு அவனை எப்படிப்பட்ட தொல்லையினின்று தான்

ஸ்க்ஷூர்க்கிவிடக்கூடாது? நமது அடிநாளை நாம் நினைத்துப்பார்ப்போமானால்; நமது பிள்ளைகளுக்கு மனமொத்த நேசர்களாயும் நம்பிக்கைக்கிடமானவர்களாயும் இருக்கவேண்டுமென்று நமக்கு நன்ருய்த் தோன்றும். அதை ஒருவரும் கவனித்துப்பார்க்கிறதில்லை. பெரியோர்கள் அப்படி நடந்துவருவார்களானால் சிறுவர்கள் வாலிபத்தீமைகள் ஒன்றும் நேரிடாமல் சுகமாய் விருத்தியடைவார்கள்.

மக்களுக்குத் தம்மிடத்தில் உள்ள கவுரவத்தைச் சிறிதும் போக்கடித்துக்கொள்ளாமலே, தமக்குத் தொல்லைகள் நேர்ந்தபோது அவர்களோடு ஆலோசனைசெய்வதும், சந்தோஷமாயிருக்கும்போது விநோதமாய்ப் பற்பல லோகவியவஹாரங்களைப் பேசுவதுமாய் அவர்களுக்கு அந்தரங்க நேசர்களாகவேயிருக்குந் தாய் தந்தையர்களை இப்போது நம் மனது நினைக்கின்றது. முன் ஒரு பெண்பிள்ளை தன் குடும்பத்தை வெகு சீராய்க் கண்காணித்துவந்ததாய்க் கேள்விப்பட்டிருக்கிறோம். அவள் தன் சமுசாரத்தை வெகு யுத்தியும் உபாயமுமாய்ப் பரிபாலித்துவந்தாள். கொடுமையும் கண்டிப்புமாயன்று; பிள்ளைகள் சந்தோஷமாய் எப்போதும் தன்னண்டையேவந்து கூடியிருக்கும்படி சிரிப்பும் சந்தோஷமும் இன்சொல்லும் வேடிக்கையுமாயே இருந்து அவர்களைக் காப்பாற்றினாள். அப்படியிருப்பதில் அவளுக்கு இருந்த விருப்பம் வேறொன்றிலுமில்லையாம். அப்படிப்பட்ட தாய்தந்தையர்களால் வளர்ந்த பிள்ளைகள் தங்களால் கூடியமட்டும் பெற்றோர்களிடத்தில் கவுரவபுத்திபண்ணி நன்றிபாராட்டுவது இன்றியமையாக்காரியமாயிருக்கின்றது. அப்படிப்பட்ட மக்கள்தாம் மிகவும் வல்லவர்களாகி,

> "மகன் றந்தைக் காற்றுமுதவி இவன்றந்தை
> என்னோற்றான் கொலெனுஞ் சொல்"

என்கிறபடி பெற்றோர்க்குப் பிற்காலத்தில் பெருமையுண்டாக்கத்தக்கவர்கள்.

கற்றறிந்த கனவானொருவர் இவ்விஷயத்தைப்பற்றி எழுதியிருப்பதைக் கடைசியில் சுருக்கமாய்ச் சொல்லுகிறோம். அவ்விஷயத்தைப் படித்தறிவது தாய்தந்தையர்களாகட்டும், உபாத்தியாயர்களாகட்டும் யாவர்க்கும் மிக்க நன்மைபயக்குவதாயிருக்கும். பிள்ளைகளைச் சீர்மையாய்க் கற்பிப்பது சுலபமும் வெளிப்படையுமான காரியமல்ல; மிகவும் வருத்தமானது. பிற்காலத்தில் எந்த வருத்தத்திற்கும் சலியாமல்நின்று நிர்வஹித்து ஜீவிக்கத்தக்க வழி அதுதான். கொஞ்சம் படிப்புக்காகவும், கொஞ்சம் புத்தி சாமர்த்தியத்திற்காகவும் கொஞ்சம் பொறுமைக்காகவும், கொஞ்சம் தன்னடக்கத்திற்காகவும், மனது பலவழியாய்ப் பிரயத்தினப்படவேண்டும். வாலிப நட

த்தைகளின் மாதிரிகளை நாம் நாள்தோறும் பரிசீலனம் பண்ணிக்கொண்டுவரவேண்டும். வாஸ்தவத்திலேயே நல்ல செய்கைகளிவையென்பதும், அற்பமான முயற்சிகளால் உண்டாகி மேலுக்கு நல்ல செய்கைகள்போலத் தோன்றுவன இவையென்பதும் பகுத்தறியவேண்டும். பிள்ளைகளின் மனதில் சாக்குப்போக்குச் சொல்லுகிற குணம் முதலான கெடுதிகள் பதியாதபடி காவல்காத்திருக்கவேண்டும். ஒவ்வொருபிள்ளைகளின் சுபாவத்திற்கும் ஏற்றபடி நமது சுபாவத்தையும் ஒருவகையாய்த் திருத்திக்கொள்ளவேண்டும். ஒவ்வொருபிள்ளைகளின் சுபாவமும் நல்லமாதிரியாக மாறும்படி பல உபாயங்களைத் தேடவேண்டும். அடிக்கடி பிள்ளைகளுடைய அபிப்பிராயங்களைமாத்திரம் பரிசீலனம்செய்வது போதாது; நமது அபிப்பிராயங்களையும் நல்லதா தீய்தாவென்று அப்போதைக்கப்போது ஆராய்ந்துபார்த்துக்கொண்டிருக்கவேண்டும். பலவிதமாய் நமக்கு உண்டாகிற மனோபாவங்களுள் இவை உண்மையான புத்திரவாச்சலியத்திலுல் உண்டானவை என்றும், இவை சுயபிரயோஜனத்தைக் கருதியுண்டானவையென்றும் அவைகளுக்குள்ள வேறுபாட்டை நன்றாய்ப் பகுத்தறிந்து அற்பமான எண்ணங்களை உடனே ஒழித்துவிடவேண்டும்.

பலவாறு சொல்லியென்ன? பிள்ளைகளை நாம் கற்பிக்கும்போது நமது கல்வியையும் நாம் விருத்திசெய்யவேண்டும். அவரவர்களுக்கு இயற்கையாய் உண்டான மனோகுணங்களை நற்காரியங்களுக்கே உபயோகப்படும்படியாகக் கற்பித்து, சிறந்த நற்குணங்களை மேன்மேலும் விருத்தியாகும்படி பயிற்றுவித்து அற்பகுணங்களை அடக்கவேண்டும். கடைசியாய் நாம் கண்டறியவேண்டிய உண்மையொன்றுண்டு. பிள்ளைகளுடைய விருத்திக்கெல்லாம் பெற்றோர்களுடைய முயற்சிதான் முதற்காரணம். அதை நாம் நன்றாய்த் தெரிந்துகொண்டால் மன்னுயிர்கள் ஒருவர்க்கொருவர் உள்ள விசுவாஸ பந்தத்திலுல் நல்ல மாதிரிகளைப் பயிலும்படி ஏற்படுத்திய ஏற்பாடு, பார்க்கப்பார்க்க நமக்கு எவ்வளவு அற்புதமாயிராது? அந்த ஏற்பாடிராவிட்டால் யாவரும் ஏமாந்துபோகவேண்டுவதேயன்றி வேறு வழியென்ன?

தக்காணத்துப் பூர்வகதைகள்

மச்சகுமாரன்.

ஒரு அரசனும் அரசியும் நெடுநாள் பிள்ளையில்லாமலே துக்கப்பட்டுக்கொண்டிருந்தார்கள். பிள்ளைக்காக அவர்கள் செய்த தவமும் தானமும் சொல்லிமுடியாது. ஒன்றும் பயன்படவில்லை. இப்படியிருக்க, ஒருநாள் சமையலுக்காக அரண்மனைக்கு அநேகம் மீன்கள் கொண்டுவரப்பட்டன. அவையெல்லாம் உயிரற்றிருந்தபோதிலும், ஒன்றுமாத்திரம் தப்பிப் பிராணனோடு இருந்தது. அங்கிருந்த வேலைக்காரிகளுள் ஒருத்தி அதைக்கண்டு, அந்தச் சிறு மீனை ஒரு தண்ணீர்க்குடுவையில் போட்டுவைத்தாள். ஒருநாள் ராணி அதைப்பார்த்து: அந்த மீன் வெகு அழகாயிருக்கவே, அதை வெகு செள்ளமாய்வைத்து, தனக்குப் பிள்ளையில்லாமையால் தனக்குள்ள ஆசையெல்லாம் அதன்மேல் வைத்துத் தன் குழந்தைபோலவே வளர்த்துவந்தாள். ஜனங்களெல்லாம் அதை மச்சராஜன் என்று வழங்கினார்கள்.

கொஞ்சநாளையில் மச்சராஜன் அந்தச் சிறு குடுவையில் அடங்கமாட்டாமல் பெரிதாய் வளர்ந்துபோகவே, ஒரு பெரிய பாத்திரத்தில் எடுத்துவிட்டார்கள். இன்னும் சிலநாளையில் அதிலும் வஸிக்கமாட்டாமல் பெரிதாய்ப்போகவே, பெரிய ஒரு தொட்டியில் கொண்டுவிட்டார்கள். நாளளவில் அதிலும் இருக்கமாட்டாமல் பெரிதாக வளர்ந்துபோனது கண்டு, ராணியானவள் பெரிதாக ஒரு குளம் வெட்டுவித்து, மச்சராஜனை அதிலே வஸிக்கச்செய்து, ஒவ்வொரு நாளும் இரண்டுதடவை சோறு கொண்டுபோய்ப்போட்டுப் பாதுகாத்துவந்தாள். அந்த மச்சராஜனும் அதிலேயே சுகமாக வாழ்ந்துகொண்டிருந்தான்.

ஜனங்களெல்லாம் மச்சராஜனை ஒரு மீனாக நினைத்துக்கொண்டிருந்தாலும், அது உண்மையன்று; அவன் ஒரு ராஜகுமாரன். அவன் ஒரு தருணத்தில் தேவதைகளுக்குக் கோபமூட்டினதனால், அவர்கள் அவனை மீனாகும்படி சபித்தார்கள். அதனால் அவன் மீனாகி ஆற்றிலே வாசஞ்செய்யும்படி சம்பவித்ததேயன்றி வேறல்ல.

இப்படியிருக்க, ஒருநாள் ராணியானவள் வழக்கப்படி சாப்பாடு கொண்டுவரும்போது, மச்சராஜன் அவளை அழைத்து: அம்மா! என் அருமைத்தாயே! நான் எத்தனைநாளைக்குத் தனியே ஜீவித்துக்கொண்டிருக்கிறது? எனக்கு ஒரு பெண்சாதியைத் தேடிக் கலியாண

ஞ்செய்விக்கமாட்டீர்களா? என்று கேட்டான். அதற்கு அவள்: அப்படியே, என்றால் ஆனமட்டும் பிரயத்தினப்படுகிறேனென்று பதில் சொல்லிவிட்டு வந்து, உடனே தன் குமாரனாகிய மச்சராஜனுக்கு யாராவது பெண்கொடுப்பீர்களாவென்று கேட்டு, தனக்குத் தெரிந்தவர்களுக்கெல்லாம் செய்தி அனுப்பினாள். அதைக்கேட்டு அவர்களெல்லாம் அவன் மச்சராஜனாய்த்தானிருக்கட்டும்; உங்களுடைய பரிபூரண விசுவாஸத்திற்குப் பாத்திரனாய்த்தானிருக்கட்டும்; எப்படியிருந்தாலும் கிளியை வளர்த்துப் பூனையின் கையில் கொடுப்பதுபோல், ஒரு பெரிய மீனுக்கு இரையாகும்படி எங்கள் அருமைக்குழந்தையை விட்டுவிடுவோமா? மாட்டோம் என்று பதில் சொல்லியனுப்பினார்கள்.

அந்தச் செய்தியைக்கேட்கவே ராணிக்கு இன்னது செய்கிறதென்று தோன்றாமற்போயிற்று, ஆயினும் அதனிடத்தில் ஒரு பிடிமானமாய் அதிக விருப்பமுண்டாய்ப்போகவே, எவ்விதத்திலாகிலும் அதற்குக் கலியாணம் செய்விக்கவேண்டுமென்று மனவுறுதிகொண்டு, மறுபடியும் பதினைந்துரூபாய் மொகராவில் லக்ஷம்மொகராகொடுத்து, தேசந்தேசமாய்ச் சுற்றிப்பார்த்து, எங்கே எவன் நமது மச்சராஜனுக்குப் பெண்கொடுக்கும்படி சம்மதிக்கிறானோ அவனுக்கு இதைக் கொடுத்துவிட்டு வாவேண்டும் என்று சொல்லித் தூதர்களை நாநாதேசமும் அனுப்பினாள். அவளிடத்தில் செலவுபெற்றுக்கொண்டு தூதர்கள் தேசமெங்கும் சுற்றத்தலைப்பட்டார்கள். ஒருவரும் பெண்ணைக்கொடுக்கச் சம்மதிக்கவில்லை; எவ்வளவு தரித்திரனாயிருந்தாலும் தன் குழந்தையை மீன் விழுங்கிவிடுமென்று பயந்து தன் பெண்ணை விற்கத் துணியவில்லை. இப்படியிருக்க, ஒருநாள் அவர்கள் ஒரு ஊருக்குப்போனார்கள். அந்த ஊரில் ஒரு வைராகி குடியிருந்தான். அவன் மூத்தமனையாள் இறந்துபோனபடியால் மறுவிவாஹம் செய்துகொண்டிருந்தான். மூத்தமனையாளுக்கு ஒரு பெண்ணும், இளையாளுக்கு ஒரு பெண்ணுமுண்டு. மூத்தாள் பெண்ணிடத்தில் இளையாளுக்கு ஜன்மப்பகை. அவள் அந்தப் பெண்ணை வெகு கடினமான வேலையெல்லாம் செய்யச்சொல்லி அடிப்பாள். செம்மையாய்ச் சோறிடுகிறதில்லை; இவ்வளவுமாத்திரமேயல்லாமல் அந்தப் பெண் தன் பெண்ணுக்குப் போட்டியாயிராதபடி எப்படியாவது அந்தப் பெண்ணை ஒழித்துவிடவேண்டுமென்று பலவிதமாய்ப் பிரயத்தினஞ்செய்துகொண்டிருந்தாள். இந்தராணி பெண்தேடத் தூதனுப்பிய செய்திகேட்டு, அவள், கும்பிடப்போனதெய்வம் குறுக்கேவந்ததுபோல் வெகு சந்தோஷமாய் அந்த வைராகி வெளியே போயிருக்கிற தருணம்பார்த்து அவர்களை அழைப்பித்து, நீங்கள் கொண்டுவந்த மோகராக்களை என் கையில் கொடுத்துவிட்டு, உங்கள் மச்சராஜனுக்காக என் குழந்தையை அழைத்துக்கொண்டு

போங்கள் என்றாள். (மீன் இவளைத் தின்றுவிடும்; பின்பு இவளுடைய சல்லியமில்லாமல் சுகமாயிருக்கலாமென்பது அவள் பூரணமாய்க் கொண்டகருத்து.) அதற்கு அவர்கள் சம்மதிக்கவே, அவள் அந்தப் பெண்ணை அழைத்து, நீ ஆற்றுக்குப்போய் நன்றாய் ஸ்நானம் பண்ணிவிட்டுவா; இவர்களோடுகூட ராணியார் சமுகத்திற்குப் போகவேண்டுமென்று சொன்னாள். அதைக்கேட்டு அந்தப் பெண்: தகப்பனாருமில்லையே; இந்த ஆபத்தினின்றும் எப்படித் தப்பித்துக் கொள்ளுகிறது என்று விசனமாய் ஆற்றங்கரைக்குப்போய் அழுதுகொண்டிருந்தாள். அழுகையில் அவள் கண்ணீர்த்துளி சமீபத்திலிருந்த ஒரு புற்றில் விழுந்தது. அது மேலே விழவே, அந்தப் புற்றுக்குள்ளிருந்த மகா புத்திசாலியான எழுதலை நாகமொன்று இதென்னவென்று புற்றின்மேல் தலையைத் தூக்கிப் பார்த்து, இந்தப் பெண் அழுதுகொண்டிருப்பதுகண்டு: பெண்ணே, நீ ஏன் அழுகிறாய் என்று கேட்டது. அதற்கு அவள்: நான் என்னவென்று சொல்லுகிறது? என்னைப்போல் துரதிர்ஷ்டமுள்ளவர் ஒருவருமில்லை. என் தகப்பனார் ஊரிலில்லாதவேளையில் என் மாற்றாந்தாயார் என்னைப் பெரிய மீனாகிய மச்சராஜனுக்குப் பெண்டாகும்படி ராணியின் சேவகர்களுக்கு விற்றுப்போட்டாள். நான் அங்கே போனவுடனே அந்த மீன் என்னை விழுங்கிவிடுமே என்று சொல்லக்கேட்டு, அந்த நாகம்: குழந்தாய்! நீ பயப்படாதே; இந்த மூன்று மணியாம்பருக்கைகளை உன் முன்றானையில் பத்திரமாய் முடிந்து வைத்துக்கொள்; நீ யாருக்குப் பெண்டாகப்போகிறையோ அந்த மச்சராஜன் உண்மையான மீனல்ல; சாபத்தால் உருமாறியிருக்கிற ஒரு ராஜகுமாரன்; உங்களுக்காக ராணியார் குளத்தினடுவே ஒரு சிறுமாளிகை கட்டிவைத்திருக்கிறாள். அங்கேபோய் நீ கண் அயராமல் வெகு கவனமாய் விழித்துப்பார்த்துக்கொண்டிரு. இல்லாவிட்டால் அந்த மீன்வந்து உன்னை விழுங்கிவிடும். தண்ணீரில் அது நீந்திவருகிற சத்தங்கேட்கும்போதே வெகு கவனமாயிருந்து, அதைக் கண்டவுடனே இவைகளுள் ஒருகல்லை அதன்மேலெறி; அது தண்ணீர்க்குள் ஓடிப்போம்; இரண்டாந்தடவை வரும்போதும் அப்படியே கவனமாயிருந்து மற்றொருகல்லை எறி; அப்போதும் அது முன்போல போய்விடும். மூன்றாந்தரம் வரும்போது மூன்றாவது கல்லை அதன்மேல் எறிவாயானால் உடனே மீனுருமாறி ராஜவடிவம் வந்துவிடும் என்று சொல்லி மூன்றுகல்லைக் கொடுத்துவிட்டு புற்றுக்குள் மறைந்துபோய்விட்டது. அந்த வைராகிப்பெண் அந்தப்பெருமீன் தன்னைத் தின்றுவிடுமென்று உறுதியாய் நம்பியிருந்தாலும் ஒருவேளை நாகம் சொன்னபடியானால்தானாகாதாவென்று அந்தக் கற்களை எடுத்துக்கொண்டுபோனாள்.

அந்தச் சேவகர்களெல்லாம் அந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு வெகு சந்தோஷமாய் அரண்மனையில் கொண்டுபோய்ச்

சேர்த்தார்கள். அதைக்கண்டு தன் மகனுக்குப் பெண்சாதி கிடைத்தாளென்று ராணியார் மிகவும் ஆனந்தமாய் அவர்களை வெகுமதி கொடுத்தனுப்பிவிட்டு, அந்தப் பெண்ணை விசேஷ ஆதரவாய் ஆதரித்துப் பின்பு அவளை அவர்களுக்காகக் கட்டிய நீர்மாளிகையில் கொண்டுபோய்விடும்படி கட்டளையிட்டாள். வைராகிப்பெண் அங்கேபோய்ச் சேர்ந்து அந்த மாளிகையின் அழகைப்பார்க்கிற போது ஒன்றுந்தோன்றாமல் பிரமித்துப்போயினாள். அந்தப் பெண் அவ்வளவு சிறந்த மாளிகையை ஒருநாளுங் கண்டதில்லை. ராணியார் வேண்டுமென்றே வெகு சிங்காரமாய் அந்தச் சிறுவீட்டைக் கட்டிவைத்தாள். கதவண்டை அகாதமாய்ப் பயங்கரமான தண்ணீரும், மச்சராஜன்வந்து தின்றுவிடுமென்கிற திகிலுமிராவிட்டால், மாற்றாந்தாயாரிடத்திலிருந்து நாள்தோறும் உடம்பொடிய வேலை செய்து வருத்தப்படுவதைவிட இங்கே வஸிப்பது அவளுக்கு வெகு சுகமாய்த்தானிருக்கும்.

அவள் அங்கேபோய்ச்சேர்ந்த சிறிதுநேரத்திற்கெல்லாம் ஜலத்தில் அலைமோதுகிற சத்தங்கேட்டது. வீட்டுவாயிலண்டை அலையெழும்பிவர ஆரம்பித்தது. வரவர அலை வேகமாய் அடிக்கத் தலைப்பட்டு இரைச்சலும் அதிகமாயிற்று. அந்தப் பெண் மச்சராஜன் வருகிறானென்று தெரிந்து வெகு கவனமாயிருந்தாள். அந்த மீன் பயங்கரமாய் வாயைத் திறந்துகொண்டு அவளுக்கெதிராய் வந்து கொண்டிருந்தது. அதின் தலை தண்ணீர்க்குமேலே தெரிந்தவுடன், அவள் நாகங்கொடுத்த கற்களுள் ஒன்றை எடுத்து அதன்மேல் எறிந்தாள். அது தண்ணீரில் மூழ்கிப்போயிற்று; இரண்டாந்தரம் அது வந்தபோதும் அவள் அப்படியே மற்றொருகல்லையெடுத்து எறிந்தாள். அப்போதும் அது முன்போலவே போய்விட்டது. மூன்றாந்தரம் அது முன்னிலும் அதிக பயங்கரமாய் வாயைத் திறந்துகொண்டு அதிகவேகமாய் ஓடிவந்தது; அதைக்கண்டு அவள் உடனே தன் கையிலிருந்த மூன்றாவது கல்லை வீசியெறிய, அந்தக் கல் மேலே பட்டதும் அந்த மீன்வடிவம் போய் அதற்குப் பதில் வெகு அழகிய ராஜகுமாரன் ஒருவன் தோன்றினான். அதைப்பார்த்து அந்தப் பெண் கொஞ்சம் அஞ்சினவள்போலத் திகைத்துநின்றாள். ராஜகுமாரன் அவளைப்பார்த்து: என் அருமைக்கண்ணாட்டி! நீ ஏன் பயப்படுகிறாய்? வேண்டாம்; அதிகொடூரமான சாபத்தினின்றும் நீ என்னை விடுவித்தாய்; இந்த மகோபகாரத்துக்குப் பிரதியுபகாரம் என்னால் என்னசெய்யமாளும். எனக்கு மனையாட்டியாகச் சம்மதியிருந்தால் நாளையதினம் நாம் இருவரும் வெகு சம்பிரமமாய்க் கலியாணஞ்செய்துகொள்ளலாம் என்று சொல்லி, தெய்வகதியாய் சேர்ந்த தன் அதிர்ஷ்டத்தை நினைத்துக்கொண்டே பொழுதுவிடிவதை எதிர்பார்த்திருந்தான்.

மறுநாள் காலையில் செம்மையாய் இருள்பிரிந்ததும் பிரியாததுமா

யிருக்கையிலேயே பட்டணத்து ஜனங்கள் அநேகர், மச்சராஜன தன் எளியநாயகியைத் தின்றுவிட்டிருப்பானென்று, வேடிக்கை பார்க்க வெகு ஆவலுடனே அவ்விடத்திற்கு ஓடிவந்தார்கள். வந்து பார்த்தவுடன் அவர்களுக்கு உண்டான அதிசயத்தை வாயினாற்சொல்லிமுடியாது! அவர்கள் நினைத்துவந்தபடி அங்கே மச்சராஜனில்லை. சிறந்த ராஜகுமாரன் ஒருவனிருந்தான். இந்தச் செய்தி உடனே பட்டணமெங்கும் பரவிப்போயிற்று. அதைக் கேள்விப்பட்டு ராஜா, ராணி, அரமனையிலுள்ள மற்ற உத்தியோகஸ்தர்கள் யாவரும், அந்த அதிசயத்தைக்காண அவ்விடத்திற்கு ஓடிவந்து, நீர் மாளிகையினின்றும் மச்சராஜன் வைராகிப்பெண் ஆகிய அவ்விருவரையும் கரைக்கு அழைத்துவரச் சொல்லி, அவர்களுடைய வரலாற்றைக் கேட்கவே, சந்தோஷத்தால் மனம் பூரித்து கலகலவென்று பேரிரைச்சலிடத் தலைப்பட்டார்கள். எப்படியானாலும் ஆகட்டும், கடைசியாய் எனக்கு ஒரு புத்திரன் கிடைத்தானல்லவா? என்று ராணி மனமகிழ்ந்தாள். ஜனங்களெல்லாம் தமக்குப் புதிதாய் யுவராஜாவும் ராஜாத்தியும் கிடைத்த ஆனந்தத்தால் உடம்பு பூரித்து அந்தக் குளத்திற்கும் அரண்மனைக்கும் போகிற வழிமுழுதும் நடைபாவாடை பரப்பி, நமது புதிய ராஜாவையும் ராணியையும் பார்க்கவாருங்கள்; இவ்வளவு அழகிய ராஜதம்பதிகளை யாராவது எங்கேயாவது என்றைக்காவது கண்டிருப்பார்களா? பார்க்க ஓடிவாருங்கள் என்று அவரவர்கள் தங்கள் தங்களுடைய உறவினர் நேசர்முதலியவர்களைக் கூவி அழைத்தார்கள். பின்பு யாவரும் கோலாகலமாய்ப் பட்டணம்போய்ச்சேர்ந்து வெகு சம்பிரமமாய் அவ்விருவர்க்கும் கலியாண மகோற்சவத்தை நடத்தினார்கள்.

அந்த மச்சராஜனும் மச்சராணியும் கலியாணம்செய்துகொண்டு சிலகாலம் சுகமாக வாழ்ந்துகொண்டிருந்தார்கள். இப்படியிருக்க, மச்சராணியின் மாற்றாந்தாயார் நடந்தசெய்தியைக் கேள்விப்பட்டு மிகவும் பொறாமைகொண்டு, தன் மூத்தாள் மகளுக்கு நேர்ந்த வைபவத்தைக்கண்டு சந்தோஷமடைந்தவள்போல நடித்து, அடிநாக்கில் நஞ்சும் நுனிநாக்கில் அமிர்தமுமாய்ப் பேசிக்கொண்டு அடிக்கடி அந்தப் பெண்ணண்டை வந்துகொண்டிருந்தாள். அந்தப்பெண் நல்ல இருதயமுடையவளாகையால் முன் தன் மாற்றாந்தாயார் செய்த கொடுமையெல்லாம் மறந்து, அவளிடத்தில் மிகவும் பக்ஷமாய் நடந்துவந்தாள்.

அப்படி சிலநாள் கழித்தபின்பு, ஒருநாள் மச்சராணி தன் தகப்பனைப் பார்க்கவேண்டுமென்று ஆசைகொண்டு, தன் பிறந்த வீட்டிற்குப்போய்வரும்படி தன் புருஷனைச் செலவுகேட்க அவன், சுகமாய்ப்போய்வா; ஆனால் அங்கே நெடுநாள் நிற்காதே; ஒரு

நிமிஷங்கூட நீ இராமற்போனால் எனக்குச் செம்மையாய்ப் போது போகாது என்றான். ராணி: அப்படியே ஆகட்டும்; துரிதமாய் வந்துவிடுகிறேன் என்று சொல்லிச் செலவுபெற்றுக்கொண்டு தகப்பனண்டைக்குப்போனாள். தன் செல்வப்பெண் வந்ததைக்கண்டு அந்த வைராகிக்கு வெகு சந்தோஷமுண்டாயிற்று. அவன் பெண் சாதிக்கு அந்தப் பெண்ணிடத்தில் உள்ளூற விசுவாஸமில்லாமற் போனபோதிலும், இப்போது தன் அதீனத்தில் அகப்பட்டுக்கொண்டாளே; இனி நாம் அவளை நம் இஷ்டப்படி செய்யலாமென்றுமாத்திரம் மிகவும் சந்தோஷமாயிருந்தது. அவளைத் திரும்பவும் ராஜ ஸம்ஸ்தானத்திற்குப் போகவொட்டாதபடி தன்னால் கூடியவரையில் முயலவேண்டுமென்று தீர்மானித்து, அவள் ஒருநாள் தன் சொந்தப் பெண்ணை அழைத்து: என் அருமைக்குழந்தாய்! இந்தப் பெண்ணை மீன்விழுங்கிவிடுமென்று நாம் நினைத்திருக்க, உலகத்துக்கெல்லாம் ராஜாத்தியானாளே; நாம் ஒன்றுநினைக்க தெய்வம் ஒன்றுநினைக்குமென்று உலகத்தார் சொல்லுகிறபடியாயிற்றே; லக்ஷம் மோகராதவிர நமக்கு வேறொன்றும் கிடைக்கவில்லையே! இதென்ன விபரீதகாலம் பார்த்தாயா? இதற்குத் தக்கவழி ஏதாவது ஒன்று தேடவேண்டும். நீ நான் சொல்லுகிறபடி கேள்; அப்படிச் செய்தால் நீயே அவளுக்குப் பதில்ராணியாய்விடலாம். அவளை ஆற்றங்கரைக்கு அழைத்துக்கொண்டுபோய், உன் உடைமைகளை சற்றே நான் போட்டுக்கொண்டு பார்க்கிறேனென்று வாங்கித் தரித்துக்கொண்டு, அவளை ஆற்றிலே தள்ளி அமிழ்த்திவிடு என்று துர்ப்போதனை சொல்லியனுப்பினாள்.

அந்தச் சிறுக்கி அப்படியே ஆகட்டுமென்று அதற்குச் சம்மதித்து, தன் ஒன்றுவிட்ட உடன்பிறந்தாளை ஆற்றிற்கு அழைத்துக்கொண்டுபோய், என் செல்வச் சகோதரி! உன் உடைமைகளெல்லாம் எவ்வளவு அழகாயிருக்கின்றன! நான் சற்றே இட்டுக்கொண்டு அழகுபார்க்கலாமா? என்று கேட்க, கபடமற்ற அந்த ராணி: இந்த அற்பகாரியத்திற்கு இவ்வளவுதூரமென்ன? அப்படியே நீ சுகமாய் இந்த நகைகளைப் போட்டுக்கொண்டு அதனழகை இந்த ஆற்றிலே குனிந்துபார்க்கலாம் என்று, தான் போட்டுக்கொண்டிருந்த பூஷணங்களைக் கழற்றித் தன் தங்கை உடம்பில் போட்டாள். போட்டுமுடிந்ததும் அந்தக் கபடச் சிறுக்கி அவளைப் பின்புறமாய்த் திடீரென்று ஆற்றிலே தள்ளிவிட்டுக் கொஞ்சநேரமளவும் அவளுடம்பு மேலே கிளம்புகிறதா என்னவென்று நிதானித்துப் பார்த்துவிட்டுத் திரும்பி வீட்டுக்குவந்து, தாயைக்கண்டு; இதோ அவளுடைய நகைகள்; இனி நமக்கு அவளுடைய உபத்திரவமில்லை; நாம் சுகமாய் வாழலாமென்றாள்.

அதைக்கேட்டுக் கெட்டநினைவுள்ள அந்தப் பெண்பிள்ளை வெகு சந்தோஷமடைந்து, தன் பெண்ணைச் சீராய்ச் சிங்காரித்து

ராஜசமுகத்திற்கு அழைத்துக்கொண்டுபோய், இதோ உங்கள் சொத்தைக்கொண்டு சேர்த்துவிட்டேன் என்று மச்சராஜனோடு சொல்லிவிட்டு, குழந்தாய்! நீ இங்கேயே சுகமாய் வாழ்ந்திரு, நான் போய்வருகிறேன் என்று பெண்ணண்டை செலவுபெற்றுக் கொண்டு வீடுவந்துசேர்ந்தாள். மச்சராஜன், வந்தவுடனே அந்தப் பெண்ணைப்பார்த்து: இதென்ன? நமது ராணிபோலிருக்கவில்லையே என்று முதலில் யோசித்து மறுபடியும், உடம்புமுழுதும் ஆபரணங்களிட்டு மறைத்திருப்பதனாலேதான் அப்படித் தோன்றுகிறதோ என்னவோ? நாளையதினம் பார்ப்போமென்றிருந்தான். அப்படியே மறுநாள் அவளை வந்து உற்றுப்பார்த்து: இவள் நமது பிராணநாயகியல்ல; உருவை மாற்றியிருப்பதுபோல் காண்கிறது; அந்த அழகியானால் எப்போபார்த்தாலும் சிரிப்பும் விளையாட்டுமாயிருப்பாளே! எவ்வளவு நேரங்கேட்டாலும் திருப்தி யுண்டாகாமல் தேனொழுக இனிப்பாய்ப் பேசுவாளே; இவள் உதட்டைக் கூடப் பிரியாமல் மரம்போல் நிற்கிறாள் என்று எண்ணி மறுபடியும், நாம் இவ்வளவு அவநம்பிக்கைகொள்ளக்கூடாது; ஊரிலிருந்துவந்த ஆயாஸத்தால் ஒருவேளை இப்படியிருந்தாலும் இருக்கலாமென்று தன் மனதைத்தானே தேற்றிக்கொண்டான். மூன்று நாள், எத்தனைநாள் சந்தேகப்பட்டுக்கொண்டிருக்கிறதென்று, அவள் மேல் அணிந்திருந்த உடைமைகளையெல்லாம் வாங்கிவிட்டுச் செம்மையாய்ப் பார்த்தான். அது தன் சொந்த மனையாளுடைய முகமாயிராமல் வேறுமுகமாயிருந்தது. அதைக் காணவே மச்சராஜன் உடம்புதெரியாமல் கோபமதிகரித்து, அந்தப் பெண்ணைப் பார்த்து: நீ இங்கே என்முன் இராதே; நீ சுதந்திரமாய்வாராமல் ஒருத்தி உபதேசித்து வந்ததனால் இப்போது உன் உயிரை நிறுத்தினேன். உன்னை இங்கே கொண்டுவிட்டவள் இப்போது என்முன்னேவந்து நின்றாலல்லவோ தெரியும்; ஓடிப்போ; என் கண்முன் இராதே என்று அவளைத் துரத்திவிட்டு, சேவகர்களை அழைத்து: அந்தப்பெண்பிள்ளை எங்கிருந்தாலும் பிடித்துவாருங்கள்; என் அருமை நாயகியை என் கண்ணிலே காட்டாமற்போனால் உடனே அவளுயிரை மாற்றிவிடுவேனென்று அவளை உடனே கொண்டுவரும்படி அனுப்பினான். இந்தச் செய்தியை அவள் எவ்விதமாயோ கேள்விப்பட்டு, நாம் யார் கண்ணிலாவது அகப்பட்டால் உயிர்போய்விடுமென்று எங்கேயோ ஒருவர் கண்ணுக்கும் அகப்படாமல் மறைந்து போனாள்.

இது இப்படியிருக்க, முன் அந்த மச்சராணி ஆற்றில் விழும்போது அங்கே தற்செயலாய் நீந்திக்கொண்டிருந்த அவளுடைய பூர்வசிநேகிதனான எழுதலைநாகங்கண்டு, இதென்ன? இவள் மூழ்கிப்போகிறாளேயென்று, அவளைத் தன் முதுகின்மேல் தூக்கிக் கொண்டு வெகு பத்திரமாய்த் தன் புற்றிற்கொண்டுபோய்ச் சேர்த்

தது. அந்தப் புற்றிற்குக்கீழாய் ஆற்றுக்குப்போக ஒரு வழியும், மேலாய்த் தரைக்குவர ஒருவழியும் ஆக இரண்டு வாயில்களுண்டு. தரைக்குப்போகிற வாயிலண்டை அந்தப் பெண்ணை வைத்துக் கொண்டு, அந்த நாகம் தன் குடும்பத்தோடு காத்துக்கொண்டுவந் தது. மச்சராணி தன் வீட்டுக்கு இவ்விதமாய்ப் போகிறதென்று தெரியாமல் அந்த எழுதலைநாகத்தினுடைய பெரிய புற்றிலேயே வாஸம்பண்ணிக்கொண்டிருந்தாள். நாகமும் அதன் பெண்சாதி யும் அவளைத் தமது சொந்தப்பெண்ணாகவே பாராட்டி ரக்ஷித்துக் கொண்டுவந்தன.

இப்படியே சிலகாலமிருக்கையில் அவளுக்கு அங்கேயே பிள்ளைபிறந்தான். அவன் மச்சராஜனுக்குப் பிறந்த பிள்ளையாகை யால் அவனுக்கு மச்சகுமாரனென்று பெயரிட்டாள். அந்தப் பிள்ளை சகலராஜலக்ஷணங்களோடுகூடி அதிக தைரியமும் சாமர்த்தி யமும் அழகுமுள்ளவனாய், அங்கிருந்த நாகக்குட்டிகளையே விளை யாட்டுக்கருவிகளாகக்கொண்டு எப்போதும் அவைகளோடு விளை யாடிக்கொண்டிருந்தான். அந்தக் குழந்தைக்கு மூன்றுவயதான பிறகு அந்தவழியாய் ஒருநாள் ஒரு வளையல்விற்பவன் போகக் கண்டு, மச்சராணி அவனை அழைத்துத் தன் குழந்தை கைகளுக்குப் போதுமான வளையல்களை வாங்கியடுக்கினாள். மறுநாளைக்குள் அந் தக் குழந்தை விளையாடுகையில் அவைகளையெல்லாம் ஒன்று தப்பா மல் உடைத்துவிட்டு வந்துநின்றான். திரும்பவும் அவள் வளையல் வாங்கியிட்டாள். அதுவும் உடைந்துபோயிற்று. மறுபடியும் வாங்கினாள். இப்படி எத்தனைதரம் போட்டாலும் அத்தனைதரமும் அந்தச் சிறுவன் உடைத்துக்கொண்டேயிருந்தான். அந்த வளை யல்காரன் இதுதான் தனக்கு நல்லகாலமென்று நாள்தப்பினாலும் அவ்விடத்துக்கு வருவது தப்புகிறதில்லை. இப்படி அவன் அந்தக் குழந்தைக்காக வளையல்விற்றே விசேஷதனவானாயினான். அந்தப் புற்றிலே விசேஷமான செல்வமிருந்ததனால், இந்த ராணி செல வுக்கு எவ்வளவு வேண்டுமென்றாலும் யாதொரு தடையுமில்லாமல் நாகங்கொடுத்துக்கொண்டிருந்தது. அவள் நினைத்ததெல்லாம் அவ ளுக்குக் கிடைத்தது. தன் புருஷனைப் பார்க்கவேண்டுமென்கிற ஆசையொன்றுதான் நிறைவேறவில்லை. அவள் தன் நாயகனண்டை போகவேண்டுமென்று கேட்கும்போதெல்லாம், நாகம்: நான் உன் னைத் தனியே விடமாட்டேன்; நீ எங்கே தேடிக்கொண்டுபோவாய்? அந்த ராஜாவே தேடிக்கொண்டுவந்து உன்னை அழைத்துக்கொண்டு போவாரானால் அது சிறப்பாயிருக்கும் என்று பதில்சொல்லிக் கொண்டிருந்தது. அதனால் அவள் தன் நாதனண்டை போகக்கூ டாமல் அங்கேயே இருக்கும்படி நேரிட்டது.

இவ்வளவுகாலத்தில் அந்த மச்சராஜன் தன் பெண்சாதியைத் தேடிக்கொண்டு சுற்றின்தேசம் இவ்வளவு அவ்வளவன்று. எங்

கேயும் அவளைப்பற்றி யாதொரு செய்தியும் கேள்விப்படாமல் அதிக விசனமடைந்தவனாய், எப்படியாகிலும் அவளைத் தேடிப்பிடிக்கிறதே காரியமென்று ஒரே பிடியாய்ப் பிடித்து, கண்டவனையெல்லாம் என் பெண்சாதியைப் பார்த்தாயா? என் கண்ணாட்டியைக் கண்டவர்களுண்டோ? என் பிராணநாயகியை யாராவது கண்டதுண்டோ? என்று வாயோயாமல் விசாரித்துக்கொண்டே நின்றவிடத்தில் நில்லாமல் ஓடிக்கொண்டிருந்தான். ஒருநாள் அந்த வளையல்காரனைக்கண்டு, நீ எங்கிருந்து வருகிறாயென்று கேட்க, அவன்: இங்கே ஒரு ஆற்றங்கரையில் பாம்புப்புற்றிலே குடியிருக்கிறவர்களுக்கு வளையல் விற்றுவருகிறேன் என்று சொன்னான். அதைக்கேட்டு மச்சராஜன்: அப்படியா! அவர்கள் யார் உனக்குத் தெரியுமா? என்று கேட்க, வளையல்காரன்: யாரானால் உனக்கென்ன? ஒரு தாயும் பிள்ளையுமிருக்கிறார்கள்; அந்தப் பிள்ளையைப்போல் அழகுள்ளவனை நான் எங்கும் இதுவரையில் பார்க்கவில்லையென்று சொன்னதைக் கேட்டு, அரசன்: அந்தக் குழந்தையின் பெயரென்ன உனக்குத் தெரியுமா? என்ன, அவன்: மச்சகுமாரனென்று அடிக்கடி அழைக்கிறார்கள், அதுதான் எனக்குத் தெரியும் என்றான்.

அதைக்கேட்கவே மச்சராஜன் அவர்கள்தாம் தன் பெண்சாதியும் பிள்ளையுமாயிருக்கவேண்டுமென்று எண்ணி, அந்த அற்புத மனிதர்களை நான் பார்க்கவேண்டும்; என்னை அவ்விடத்திற்கு அழைத்துக்கொண்டுபோவாயா? என்று வளையல்காரனைக் கேட்க, அவன்: இனிமேல் இன்றைக்குமாளாது; செவ்வானங்கூட மறைந்துபோயிற்று; இருட்டினவேளையில் அவ்விடத்திற்குப்போனால் நம்மைக்கண்டு அவர்கள் பயப்படுவார்கள்; நாளைக்காலையில் நான் போம்போது என்னோடு வருவையானால் அழைத்துக்கொண்டு போகிறேன்; நீ இப்போது மிகவும் களைத்து வருந்தியிருப்பதுபோல் காண்கிறது; இராத்திரி என் வீட்டில்வந்து சற்று இளைப்பாறியிரு என்று சொன்னான். அதற்கு ராஜா சம்மதித்து இரவெல்லாம் வளையல்காரன் வீட்டில் படுத்திருந்து, விடியநேரத்தில் எழுந்து அவனை எழுப்பி, உதயமாயிற்றே; அவர்களைப் பார்க்கப்போகலாமாவென்று கேட்க, வளையல்காரன்: இப்போதே போகிறதா! நான் காலைப்போஜனம் பண்ணிக்கொள்ளாமல் ஒரு இடத்திற்கும் அசையமாட்டேன் என்றான். அதனால் ராஜா அவன் வருகிறவரையில் காத்திருந்து கொஞ்சநேரங்கழித்து, அவனுடன் புறப்பட்டுப்போய், முதலில் வெகு சவுந்திரியமுள்ள சிறுவன் ஒருவன் அந்தப் புற்றின் மேல் விளையாட, வெகு தூரத்திலிருந்து பார்த்து மனமகிழ்ந்தான்.

வளையல்காரன் வளையல்களைக் கலகலவென்று குலுக்கிக்கொண்டு போம்போது, குழந்தாய்! உன் கைகளுக்குச்சரியான வளையல்களைப்பார்த்து எடுத்துக்கொள் என்று ஒரு வார்த்தை புற்றுக்குள்

ளிருந்து கேட்டது. 'அந்தச் சத்தம் காதில் விழவே அரசன் அந்தப் புற்றின் வாயிலண்டைபோய் உட்கார்ந்து, ஓ சீமாட்டி! உன் குளிர்ந் தமுகத்தை என் கண்ணுக்குச் சிறிதுநேரம் காட்டி என் தாபத் தைத் தீர்க்கமாட்டாயா? என்று கூவ, அவள்: அது தன் கணவன் குரல்போலிருக்கவே, வெகு வேகமாய் ஓடிவந்து அவனைப்பார்த்து: ஓ! என் பிராணநாதனே! நீ மறுபடியும் என்னைக் காணும்படியா யிற்றே! என்று கதறிப் பின்பு, தனக்குத் தன் சகோதரி தீங்குசெய்ய நினைத்ததும், அத்தருணத்தில் அந்த நாகம் தன் உயிரைக் காத்து அதுமுதல் தன்னைப் பரிபாலித்துவந்ததும், அப்புறம் குழந்தை பிறந்து அதற்காக நாகம் குடும்பத்தோடு மகோபகாரம்செய்த துமாகிய இவைகளையெல்லாம் ஒன்றுதப்பாமல் ஆதியோடந்தமாய் அறிவித்தாள். அதையெல்லாம் கேட்டபிறகு அரசன் தன் கதை களையும் முழுதும் சொல்லிவிட்டு: நல்லது, நீ இப்போது வீட்டுக்கு வருவதற்கு ஏதாவது தடையுண்டோ என்று கேட்க, அவள்: பெற் றோர்கள்போலவே என்னை ஸம்ரக்ஷணைசெய்துவந்த இந்த நாகங்கள் தனியே என்னை அனுப்பச் சம்மதிக்கவில்லை. இப்போது நீ வந்தி ருக்கிற செய்தியைத் தெரிவிக்கிறேன் என்று சொல்லி, நாகங்களைக் கூவி, இதோ என்னை அழைத்துக்கொண்டுபோக என் அரசன் வந்திருக்கிறான்; போய்வரலாமா என்று கேட்டாள். அதற்கு அந்த மகோபகாரியான எழுதலைநாகம்: ஆயின் நீ சுகமாய்ப் போய்வர லாம்; சொத்துக்காரன் வந்தால் சொத்தை ஒப்பிக்கவேண்டுவது கடைமைதானே; யாதொரு தடையுமில்லை என்று வேண்டிய வரி சையோடு போகச் செலவுகொடுத்தது. அந்த நாகத்தின் பெண்சா திவந்து, நீ இத்தனைநாள் பெண்போல்வே என்னிடத்தில் வளர்ந்தா யே; எப்படி உன்னை அனுப்பிவிடுகிறதென்று அவளைவிட்டுப் பிரிய மனமில்லாமலே சுகமாய் போய்வா என்றது. மற்றச் சிறுநாகங்க ளெல்லாம் தங்களோடுகூடவே விளையாடிவளர்ந்த ராஜகுமாரன் தங்களைவிட்டுப் பிரிகிறானென்று கேட்டு மிகவும் விசனமடைந் தன. யாவரும் சிறிதுநேரம் சந்தோஷமாய்ப் பேசிக்கொ ண்டிருந்து, பிறகு இம்மூவரும் நாகங்களிடத்தில் விசேஷமான பரிசோடு செலவுபெற்றுக்கொண்டு தங்கள் அரண்மனை வந்துசேர் ந்து அநேககாலம் அளவற்ற ஐசுவரியத்தோடு ஒரு குறையுமின்றி அரசாட்சிசெய்துவந்தார்கள்.

நாடியியல்.

விஷயங்களை நினைக்கிற சத்தியும் உணருகிற சத்தியும் மூளையோடு சம்பந்தப்பட்டிருக்கின்றனவென்றும், மூளையின் செய்தியை உறுப்புகளுக்கும் அந்தந்த உறுப்புகளின் செய்தியை மூளைக்கும் நரம்புகள் யாவரும் ஆச்சரியப்படும்படியாய்க் கொண்டுபோகின்றனவென்றும் சென்ற 76-வது வருஷம் டிசம்பர்மாதத்துச் சஞ்சிகையில் சொல்லியிருக்கிறதல்லவா?

செய்திகளை மூளையிலிருந்து கொண்டுவருகிற நரம்புகளுக்கு சலனநாடி (அசைவை உண்டாக்குகிற நரம்பு) என்று பெயர். நமது தேஹத்தில் ஏதாவது ஒரு உறுப்பை அசைக்கவேண்டுமென்று நமக்குக் கருத்து உண்டானவுடனே, மூளையானது சலனநாடியின்மூலமாய் அந்தக் கருத்தை அந்த உறுப்பிலிருக்கிற தசைநாடிக்கு அனுப்புகின்றது. அதனால் அந்தத் தசைநாடி சுருங்கி நாம் அசைக்கவேண்டுமென்று கருதிய உறுப்பு அசைகின்றது. இந்தச் சலனநாடிகள் சாம்பல்நிறம் கலந்த சிவப்புநிறமுள்ளவை. எவ்விடத்தில் அசைவு தேவையில்லையோ அங்கே சலனநாடிகள் இருக்கமாட்டா. அதற்குத் திருஷ்டாந்தமாய் தேஹத்தின் மேல் தோலில் சலனநாடிகள் இல்லை. அதனால், மேல்தோலுக்கு அடுத்த உட்புறத்திலிருக்கிற தசைநாடிகளை அசைக்கக்கூடினாலும், அந்தத் தோலைச் சலிப்பிப்பது நாம் எவ்வளவு முயன்றாலும் மாளாது.

செய்திகளை மூளைக்குக் கொண்டுபோகிற நரம்புகளுக்கு இந்திரியநாடி (அறிவுண்டாக்குகிற நரம்பு) என்று பெயர். உடம்பை நாம் எங்கேயாவது ஓரிடத்தில் தொட்டாலும் அடித்தாலும் உடனே இந்திரியநாடிகள் அந்தச் செய்தியை மூளைக்குக் கொண்டுபோய் அதை நாம் உணரும்படி செய்கின்றன. இந்த நாடிகள் வெளுத்து மிருதுவாயிருப்பவை. இவை சருமத்தில் அளவற்றிருக்கின்றன. விரல்நுனிகளில் வெகு அதிகம். அதனாலேதான் அங்கே பரிசம் வெகு நுட்பமாயிருக்கின்றது.

சென்ற டிசம்பர்மாதத்துச் சஞ்சிகையில் மூளையைப்பற்றிய படத்தில் காட்டியபடி மூளையினின்று முதுகெலும்புக்குள்ளே வருகிற சுழுமுனைநாடி (தேஹத்தில் உள்ள நாடிகளுக்கெல்லாம் முதன்மையான நரம்பு) யின்மூலமாய் மற்ற நாடிகள் மூளையோடு சம்பந்தப்பட்டிருக்கின்றன.

நாடிமண்டலத்திற்கு மூளைதான் மையம். சுகமாகட்டும், துக்கமாகட்டும், சீதமாகட்டும், உஷ்ணமாகட்டும், உருவங்களாகட்டும், நிறங்களாகட்டும், சுவையாகட்டும், ஒளியாகட்டும், ஓசை

யாகட்டும், நாற்றமாகட்டும் நமக்கு உணர்ச்சி உண்டாவதற்கு முன்னமே மூளையினிடத்திற்குப் போகவேண்டும். நாடி விருக்ஷத்திற்கு சுழுமுனைநாடி அடிமரம். சாம்பல்நிறமும் வெண்மைநிறமும். உள்ள இருவகைப் பொருளால் சுழுமுனைநாடி உண்டாயிருக்கின்றது. முதுகெலும்புப் பூட்டுகளிலுள்ள ரந்திரங்களின்வழியாய் நாடிகள் ஒருபங்கு சலனநாடியாகவும், ஒருபங்கு இந்திரியமாகவும், 31 ஜதையாய்ப் பிரிந்து அந்தந்த உணர்ச்சியை மூளைக்குக் கொண்டுபோவதும், அங்கிருந்து அசைகிற சத்தியை அந்தந்த அவயவத்திற்குக் கொண்டுவருவதுமாயிருக்கின்றன. இவைகளாலேதான் அந்தந்த உறுப்புகளுக்கு நியமித்திருக்கிற காரியங்கள் நடந்தேறுகின்றன.

கண் பார்வைக்கு உபயோகமான இந்திரியமல்லவா? சக்ஷுரிந்திரியநாடி இராவிட்டால் வஸ்துக்களைப்பார்க்க நம்மால் மாளாது. அந்த நாடி மூளையிலிருந்து கண்ணண்டை வந்துநின்று வெளியே நடக்கிற செய்திகளையெல்லாம் மூளைக்கு அண்டவிடுகின்றது. அப்படியே கண்களில் உள்ள தசைநார்களில் சலனநாடியிராவிட்டால் கண்ணை அசைக்க நம்மால் மாளாது. காது ஓசைகளைக் கேட்பதற்குரிய இந்திரியமல்லவா? வெளியே உண்டாகிற ஓசைகளின் செய்தியையெல்லாம் மூளைக்கு அண்டவிடுகிற சுரோத்திரேந்திரிய நாடியிராவிட்டால் ஒன்றையுங்கேட்க நம்மால் கூடாது. அப்படியே நாசி வாஸனை அறிவதற்குரிய இந்திரியம். ஆயினும் நாசியின் வழியாய் நாற்றத்தை மூளைக்கு அறிவிக்க கிராணேந்திரியநாடியிராவிட்டால் நாம் ஒன்றையும் வாசனைபிடிக்கமாட்டோம். சுவையறிய ரசனேந்திரிய நாடியிராவிட்டால் நாம் நாவினால் ஒருபோதும் உருசியறியமாட்டோம்.

இவ்வாறு இந்திரியநாடிகளுக்குப் பல வேலைகளுண்டு. அவைகள்தாம் சுவையொளி ஊறு ஓசை நாற்றம் என்கிற ஐம்புலன்களையும் நமக்குப் புலப்படுத்துகின்றன. இப்படி இந்த நாடிகள் ஐந்து அறிவுகளுக்கும் ஏதுவாகி நமக்குள்ளே நடப்பவைகளைத் தெரிவிப்பதுமல்லாமல், வெளியே நம்மைச்சுற்றி நான்குபக்கத்திலும் நடக்கிற விஷயங்களை அறியவும் நமக்கு வல்லமை உண்டாக்குகின்றன. சலனநாடிகளுக்கோ, கைகால்முதலிய அவயவங்கள் அசைவதற்காக, தசைநாடிகளைச் சுருக்குகிறவேலை ஒன்றே ஒன்றுதான்.

சலனநாடியும் இந்திரியநாடியும் ஆகிய இந்த இருவகை நாடிகள்தவிர உடனுணர்ச்சி நாடியென்று ஒருவகை நாடிகளுண்டு. அவைகளும் சுழுமுனை நாடிகளோடு சேர்ந்திருக்கின்றன. உடனுணர்ச்சி நாடிகள் மார்பிலும் அடிவயற்றிலும் உள்ள இருதயம் இரைப்பைமுதலான அவயவங்களைச் சுற்றி வலைபோல் பின்னிக்

கொண்டிருக்கின்றன. இவைகள் சுவாஸம் விடுவதற்கும் ஜீரணமாவதற்கும் வல்லமை உண்டாக்குகின்றனவென்று தோன்றுகின்றது. சுழுமுனைநாடிகளைப்போல் இவை சங்கதிகளை மூளைக்குக் கொண்டுபோகாமையால், வெளி இந்திரியங்களில் நடக்கிற காரியங்கள் தெரிவதுபோல் சரீரத்துக்குள் நடக்கிற செய்தி ஒன்றும் நமக்குப் புலப்படுகிறதில்லை.

நாடிமண்டலத்தில் மூளை, சுழுமுனைநாடி, சலனநாடி, இந்திரியநாடி, உட்டுணர்ச்சிநாடி என்று நால்வகைப்பட்ட நரம்புகள் ஆகிய இவை அடங்கியிருக்கின்றன. நரம்பாவது தசையடர்ந்த மெல்லிய ஒருவகைப்பொருள். அது முக்கியமாய்க் கொஞ்சம் பிரகாசிதமென்கிற பொருளும் உப்பும் கலந்த வெண்கருவும் தண்ணீரும் சேர்ந்து உண்டாகின்றது. நரம்புகளில் அளவிறந்த ரத்தநாடிகள் அடர்ந்திருக்கின்றன. ஒரு மனிதன் உடலில் உள்ள மூளை சுமார் மூன்று பவுண்டுநிறை உள்ளது.

காசிப்பட்டணத்தின் வரலாறு.

காசிப்பட்டணம் வெகுகாலமாய் மேன்மைபெற்று விளங்கும் புண்ணிய நகரங்களில் ஒன்று. என முன்னொருசஞ்சிகையில் சொல்லியிருக்கிறோம். வட இந்தியாவில் ஆரியஜாதியார் குடியேறின காலமுதற்கொண்டே அந்தப் பட்டணம் இருக்கிறதாகச் சொல்லலாம்; ஆகிலும் அப்படி உறுதியாய்ச் சொல்லுவதற்குப் போதுமான காரணம் ஒன்றுமில்லை. நமது பூர்வீக கிரந்தங்களிலும் புராணங்களிலும் காசியின் விஷயம் அடிக்கடி வந்துகொண்டிருக்கின்றமையால், இந்துமதம் உண்டானதுமுதலே அந்நகரம் பிரசித்திபெற்றிருக்கிறதென்று உத்தேசிக்கலாம். அதனுடைய பூர்வசரித்திரம் பூர்ணமாய் விளங்காமையால், அதனுடைய வரலாறு இப்படிப்பட்டதென்று அறிவது கூடாமையாயிருக்கிறது. ஒவ்வொரு தேசத்தாரிடத்திலும் ஜாதியாரிடத்திலும் அவரவர்களுடைய சரித்திரம் எழுத்துமூலமாய் இருக்கவேண்டும்; நமது தேசத்தார் அதைக் கவனியாதிருந்தது பெருங்குறைவு; சுத்தமாய் மூடர்களாகவேயிருந்துவிட்டால் அவர்கள் அப்படியிருந்தது அதிசயமாயிராது. உலகத்தின்கண்ணுள்ள எல்லாப் புத்திமான்களும் வியந்து சந்தோஷிக்கும்படி புத்திகூர்மையும் விஷயஞானமும் விளங்கும் தர்க்கவியாகரண சாஸ்திரங்களை உண்டுபண்ணி, நுட்பமான ஆராய்ச்சிகள்செய்து வெகுவாய்ப் பெருக்கின நமது தேசத்தார், அந்தந்தக் காலத்தில் நடந்த சரித்திரங்களையும் விசேஷங்களையும் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதிவைக்கத் தவறிப்போனார்கள். ஆகையால் பற்பல கிரந்தங்களையும் பரிசோதித்து ஒன்

ரேடொன்று ஒத்துப்பார்த்து சில சங்கதிகளை ஒருவாறு ஊகிக்கலாமேயல்லாமல், ஒன்றையும் நிச்சயமாய்ச் சொல்லக்கூடவில்லை.

கௌதமருடைய காலம் இப்போது 25 நூற்றுண்டுக்கு முற்பட்டது. எனப் பலர் ஊகிக்கிறார்கள்; அவருடைய காலத்தில் காசி நல்ல ஸ்திதியில் இருந்ததென்று நிச்சயம்; அதாவது 2,500 வருஷமாய் அது சிறப்பாக இருந்துகொண்டிருக்கிறதென்று உறுதியாய்ச் சொல்லலாம். அதற்கு முற்பட்டு எவ்வளவுகாலமாய் அப்படியிருந்ததோ தெரியாது. பாபிலன்நகரம் மேன்மையடைவதற்குமுன்னும், ஏதன்ஸ் விருத்திக்கு வருவதற்குமுன்னும், ரோம் என்னும் பேர் கிளம்புவதற்குமுன்னும் காசி பெருமையான ஸ்திதியிலிருந்ததென்பதற்குச் சந்தேகமில்லை. எகிப்து தேசத்து கோபுரங்கள் கட்டும்போதுகூட காசி இருந்ததாகச் சொல்லலாம். அநேக பெரிய பட்டணங்கள் நீடித்திருந்தும், வரவர மகிமைகுறைந்து கடைசியாய் ஒன்றுமில்லாமற்போயிருக்கின்றன; அப்படியில்லாமல் இந்தக் காசிநகரம் எப்போதும் ஒரேமாதிரியாய்ப் புகழ்பொருந்தி விளங்குவது அதை இன்னும் அதிகமாய்க் கனப்படுத்துகிறது. கிறிஸ்துபிறந்து 7-ம் நூற்றுண்டில் இந்தியாவுக்கு யாத்திரையாகவந்த ஒரு சீனதேசத்துப் பெரியவர் அந்தக் காலத்தில் காசியைப்பற்றிச் சொல்லியிருக்கிறதாவது: கங்கைக்கடுத்தும் அதற்கு மேற்கிலும் 6 மைல் நீளமும், 2 மைல் அகலமுமுள்ள ஒரு பெரிய பட்டணம் 10,000த்துக்கு அதிகமான வீடுகள் அடங்கியதாயிருக்கின்றது. ஜனத்தொகையும் அதிகம், வர்த்தகர்கள் அநேகர் இருக்கிறார்கள். ஜனங்களுடைய மாதிரிகள் நாகரீகமும் சொகுசுமுள்ளவை; எல்லாரும் படிப்பார்கள். பூஸாரம் திவ்வியமானது. ஏறக்குறைய நூறு கோவில்கள் உண்டு; லோகசிந்தையைவிட்டு ஈசுவரனையே தியானம்பண்ணிக்கொண்டு 10,000 சந்நியாசிகள் இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார். இப்போது அதற்குப்பிறகு ஆயிரம் வருஷத்துக்கு மேலாகியும் முன்போலவே அழகும் மகிமையும் குறைவின்றியிருக்கிறது. நதியினின்று பட்டணத்துப்பக்கம் திரும்பிப்பார்த்தால் கண்ணுக்கு மிகவும் ஆனந்தகரமாயிருக்கும்; அதைவிட இனிமையான காட்சி வேறெங்குமிராது. சுமார் 70, அல்லது 80 வருஷத்துக்குமுன் மெகாலே என்னும் இங்கிலீஷ் சரித்திரக்காரர் காசியைப்பற்றிச் சொல்லியது இப்போதும் அதற்குத்தகும். ஐசுவரியத்திலும் ஜனத்தொகையிலும் மேன்மையிலும் நற்குணத்திலும் காசி ஆசியாக்கண்டத்துத் திறமான நகரங்களில் ஒன்று. எப்போதும் ஜனங்கள் கஜகஜவென்று நிறைந்திருக்கும்; தெருக்களினின்று நதியில் ஸ்நானம்பண்ணும் இடங்களுக்குக் கட்டியிருக்கும் கற்படிகள் ஜனங்கள் நடந்து நடந்து தேய்ந்துகொண்டிருக்கின்றன. அதன் கோவில்களும் கல்விச்சாலைகளும் வெகுதூரத்திலிருந்து ஜனங்களை இழுக்கின்றன. அந்தவிடத்தில் கங்காநதியில் பிராணனைவிட்டால் நல்கதி கிடைக்கு

மென்றெண்ணி அதற்காக வருகிறவர்களும் உண்டு. வர்த்தகக்காரியமாக பிறதேசங்களிலிருந்து வெகுபேர் வியாபாரிகள் வந்தப்டியேயிருப்பார்கள்; அதன் அருமையான சாமான்களை ஏற்றிக்கொண்டுபோவதற்காக நதிக் கரையில் பெரிய பெரிய கப்பல்கள் எப்போதும் நின்றுகொண்டிருக்கும் என்று இவ்விதமாய் அதைப் புகழ்ந்துபேசியிருக்கிறார்.

காசி என்றால் 'சிறப்புள்ளது' என்று அர்த்தம். இந்தப் பெயர்தான் இந்துக்களுக்குள் பெரும்பாலும் வழங்கிவருகிறது; மற்றவர்கள் சாதாரண மாய் அதை பனாரிஸ் என்கிறார்கள். இந்தச் சொல்லுக்கு அர்த்தம் பல வாறாகச் சொல்லப்படுகிறது. 'நல்லதண்ணீர்' என்று அதற்குப் பொருள் கொண்டு கங்காநதிக்கரையில் நிற்கிறதுபற்றி அந்தப் பட்டணத்துக்கு அந்தப்பேர் வந்ததென்று சிலர் சொல்லுகிறார்கள். பர்னா வாரணா அல் லது வர்ணா ஆஸி என்று பிரித்து இந்தப் பேர்களையுடைய இரண்டு சிற்றா றுகள் பட்டணத்துக்கு வடக்கிலும் தெற்கிலும் ஓடுவதைப்பற்றி வார ணாஸி அல்லது பனாரிஸ் என்னும் பெயர் கிடைத்ததென்றும், அங்கே ஆண்டுவந்த ராஜாக்களுள் பர்னா என்று பேர்கொண்ட ஒரு ராஜா தன் பெயரை இந்நகரத்துக்கு இட்டான் என்றும் சொல்லுகிறார்கள். பர்னா ஆஸி என்கிற நதிகளை வடக்கெல்லையாகவும் தெற்கெல்லையாகவும் உடைத் தாகிய நகரம் என்று பழைய கிரந்தங்களில் சொல்லியிருக்கிறபடி இப்போது இராமல், அந்நகரம் பர்னாவுக்குத் தெற்கே முக்கால்மைல் ஒதுங்கியும் ஆஸியைத் தாண்டி அதற்குத் தெற்கே விஸ்தரித்துமிருக்கிறது. ஆஸிக்குத் தென்பக்கத்திலுள்ள கட்டடங்கள் புதிதாகத் தோற்றுவதையும், பர்னா வுக்கு அருகாமையில் கிலப்பட்ட கட்டடங்கள் காணப்படுவதையும் இதற்குத் திருஷ்டாந்தமாக சொல்லலாம். காசிராஜாக்களுடைய பழைய கோட்டை கங்கையோடு பர்னா கலக்குமிடத்தில் இருந்தது; வாரன் ஹேஸ்டிங்ஸ் என்னும் முதலாம் கவர்னர் ஜெனரல் காலத்திலிருந்த சைத் ஸிங்கு என்னும் ராஜாவினுடைய கோட்டை அதற்குத் தெற்கே நாலு மைல்தூரத்திலிருக்கிறது; இப்போது ராஜா வசிக்கும் கோட்டையோ இன் னும் ஒருமைல் தெற்கேயிருக்கின்றது. அந்தந்தக் காலத்திய ராஜாக்கள் ஜனங்கள் அடர்ந்த இடத்தில் வசித்திருப்பார்களென்று கொண்டால், பட்டணம் தென்பக்கமாய் ஒதுங்கிவந்திருக்கிறதென்பதற்கு இதுவும் திர்ஷ்டாந்தமாகும்.

காசியில் அதிக புராதனமான கட்டடங்கள் பௌத்தருடைய கோயில் களும் மண்டபங்களும் ஸ்தம்பங்களும் பீடங்களும் பிரதிமைகளுமே. பௌத்தர்கள் சிறந்த வேலைக்காரர்கள்; எத்தனைகாலமானாலும் வலிவாய் நிற்கும்படி 18 அங்குலம் நீளமும், 13 அங்குலம் அகலமும், 3 அங்குலம் கனமுமுள்ள செங்கல்களினாலும் திவ்வியமான கற்களினாலும் கட்டி யிருக்கிறார்கள்.' இந்துக்களுடைய கோயில்கள் குளங்கள் கிணறுகள்

இன்னகாலத்தில் கட்டப்பட்டதென்று தெரியவில்லை; ஆகிலும் அவைக ளெல்லாம் பௌத்தருடைய கட்டடங்களுக்குப் பிந்தினவைதாம். புரா ணங்களில் சொல்லப்பட்டு மற்றக் கோயில்களைவிட முற்பட்டவை என்று எண்ணத்தக்க கோயில்கள் ஆறு உண்டு; இவைகள் இப்போது வெகுவாய் சீரழிந்துகிடக்கின்றன. நாகக்கிணறு என்று சொல்லப்பட்ட ஒரு அற்பு தமான கிணறு நாலுபக்கத்திலும் செங்குத்தாய் கற்களால் கட்டப்பட்ட ஒரு குளம்போலிருக்கிறது; அதன் நடுவில் சதுரமாய்ப் பிள்ளைக்கிணறுபோ லொன்றிருக்கிறது; அங்கிருந்து பன்னிரண்டு படி இறங்கினால் ஜலத்தை எட்டலாம்; அதிலிருந்தும் இன்னொரு சிறிய உட்கிணறுக்கு இறங்கும் வழி இருப்புச்சட்டத்தினால் மூடப்பட்டிருக்கிறது. ஔரங்கஜீப் சக்கர வர்த்தி ஒரு பெரிய கோயிலை இடித்து அதன் இடத்தில் மசூதிகட்டி யிருக்கிறான். கிறிஸ்து பிறந்து 1693–ம் வருஷத்துக்குச் சரியான விக்கிர மாதித்திய சகாப்தம் 1750–ஹூத்தில் பட்டத்துக்குவந்த ஜயஸிங் என்னும் காசிராஜா கட்டிவைத்த ஜோதிஷமண்டபம் திவ்வியமாயிருக்கிறது; அந்த ராஜா கணிதசாஸ்திரத்தில் மிக்க தேர்ச்சியுள்ளவனாயிருந்தது கண்டு, பிரத்தி யட்ச நிதரிசனத்துக்கு ஒத்துவராமல் பிசகிப்போயிருந்த பஞ்சாங்கத்தைத் திருத்தும்படி டில்லி சக்கரவர்த்தி அவனைக் கேட்டுக்கொள்ள, அந்த ராஜா வும் அதற்கு இணங்கி ஜோதிஷக்கணக்குகள் கணிப்பதற்காக டில்லி, காசி, வடமதுரை, உஜ்ஜயிநீ, ஜயபுரம் இந்த இடங்களில் ஜோதிஷ உப்பரிகை கள் கட்டுவித்தான். காசியில் மானஸரோவரம் என்னும் தடாகத்தை வெட்டினதும் இந்த ராஜாதான்.

இப்படிப் பழைய கட்டடங்களைப் பரிசோதிப்பது ஏனென்றால், அவை களைக் கட்டினவர்களுடைய வல்லமையும் சாமர்த்தியமும் மற்றக் குணாதி சயங்களும் இவ்விதமாயிருந்தனவென்று அறிந்துகொள்வதற்காகவே. ஈன ஸ்திதியிலிருந்து வரவர விர்த்தியடைந்து நற்செய்கை நற்குணங்களைக் கைக் கொண்ட ஜாதியாருடைய சரித்திரத்தை அறிவதைவிட மேலான ஆனந்த மும், நல்ல ஸ்திதியிலிருந்து நாளாவர்த்தியில் கேடுகெட்டுப்போயிருக்கிற ஜாதியாருடைய வரலாற்றை அறிவதைவிட துக்கமும் வேறில்லை. நீதியிலும் ஞானத்திலும் ஏற்றமடையாத ஜாதியார் மற்றெந்தவிஷயத்தில் சிறப்புற்றி ருந்தாலும் மகிமையில்லை. இந்த விஷயத்தில் இப்போது காசியினுடைய நிலைமை 2,000 வருஷத்துக்குமுன் இருந்ததைவிட மேல் என்று சொல்ல இடமில்லை. இத்தனைகாலமும் நின்ற நிலையிலேயே நின்றுகொண்டிருந் தது; இனி அப்படியிராமல் மேன்மேலும் அபிவிர்த்தி அடையும் என்று நம்புவதற்கு இடமுண்டு.

இப்போது இங்கிலீஷ்காரருடைய அரசாட்சியினால் காசிநகரத்துக்கு அநேக நன்மைகள் உண்டாயிருக்கின்றன. முன்னே காசிக்கு யாத்திரை போவதென்றால் வெகு வருத்தம்; இப்போதோ வெகு சுலபம். பல

விடங்களிலிருந்து ஜனங்கள் அவ்விடத்தில் வந்து சேருகிறார்கள். இந்துக்கள்தாம் அதிகம்; அவர்களும் அநேகமாய் தனவான்கள். மற்றப் பெரிய பட்டணங்களைப்போல வியாதிக்கிடமானதல்ல. வீடுகள் கல்லினால் பல வடுக்காகப் பலமாய்க் கட்டியிருக்கின்றன; ஆனால் ஒன்றோடொன்று நெருங்கிக்கொண்டு கீழே இடம்போதாமையால் மித்தைகள் ஒன்றின்மேலொன்று கட்டியிருக்கின்றன. தெருக்கள் நெருக்கமாயும் ஒழுங்கற்றவைகளாயுமிருக்கும். புதிதாய் அங்கே வீடுகட்டுகிறதென்றால் அதிகப்பணம் செல்லுமாகையால், ஒரு வீட்டிலேயே 10, 12 குடிகளிருப்பது உண்டு. தெருக்களை விசாலப்படுத்துவது எளிதன்று. இதை யோசித்து நாளாவட்டத்தில் விசாலப்படுத்துவதற்காக இடிந்த வீடுகளைக் கட்டக்கூடாதென்று மாத்திரம் உத்தரவுசெய்திருக்கிறார்கள். இந்நகரத்தில் தனிகர்களான சாவுகாரிகளால் வர்த்தகம் விசேஷமாய் நடந்தேறிவருகின்றது. அங்கே காசுக்கடை, சவுளிக்கடை, ரத்தினாபரணக்கடை, பொன் வெள்ளிமுதலிய உலோகக்கடை இவைமுதலானவைகள் விசேஷமாயுண்டு. அந்தப் பட்டணத்தைவிட அதைச்சார்ந்த கங்காநதிதீரம் மிகவும் விசேஷமானது. அந்த நதிதீரத்தில் ஸ்நாநகட்டடங்கள், படித்துறைகள், ஜெபமேடைகள், தர்மசாலைகள், அன்னசத்திரங்கள் இவைகள் அதிகம். இவையெல்லாம் சாதாரணமாய் அனைவர்க்குந் தெரிந்தவிஷயமாகையால் விஸ்தரித்து எழுதவில்லை.

சிறுவர்க்கான கதை.

சித்திரக்குள்ளன்.

ஒரு சிறு குப்பத்தில் வில்லி ஒருவன் கட்டைவெட்டி விற்று ஜீவனஞ்செய்துகொண்டிருந்தான். அவனுக்குப் பிள்ளைகள் ஏழு; எல்லாம் ஆண்பிள்ளைகள். மூத்தவனுக்குப் பத்துவயது, கடைசிப் பிள்ளைக்கு ஏழுவயது; மூன்றுவருஷகாலத்தில் ஏழுபிள்ளை பிறந்தது எவ்வளவு ஆச்சரியம்! தெய்வகதியால் ஒவ்வொருதடவையும் இரண்டும் மூன்றுமாகப் பிறந்தபடியால் அப்படியாயிற்று. அவ்வளவு பிள்ளைகளையும் காப்பாற்றச் சக்தியில்லாமல் அவன் மிகவும் வருத்தம் அனுபவித்துவந்தான். பிள்ளைகளுள் ஒருவனுக்காவது வேலைசெய்து சம்பாதிக்கத்தக்க வயதுவரவில்லை. மேலும் கடைசிப்பிள்ளை மிகவும் குள்ளனாயும், வாயைத்திறந்து ஒரு பேச்சும் பேசமாட்டாதவனாயும் இருந்தான். இது அவன் நல்ல புத்திசாலியாய் இருப்பான் என்பதற்கு ஒரு அறிகுறிதான். ஆயினும், அவன் தாய்தந்தையர்கள் கள்ளனை நம்பினாலும் குள்ளனை நம்பலாகாது என்பது அறியாமல், அவன் அறிவில்லாதவன் என்

றும், வாவா மிகவும் மடையன் ஆவான் என்றும் நினைத்திருந்தார்கள். அந்தப் பிள்ளை உலகத்துக்கு ஒரு அற்புதமான குள்ளனாய் இருந்ததனால் அவனுக்குச் சித்திரக்குள்ளன் என்று பெயரிடப்பட்டது. அந்தப் பிள்ளையை ஒரு எளிய ஊழியக்காரன்போல் நினைத்து வீட்டிலுள்ள வேலையெல்லாம் செய்யச்சொல்லி அடிப்பதும் அன்றி, எந்தப் பழிவந்தாலும் அவன்மேலேயே சார்த்துவார்கள். எது எப்படியிருந்தாலும் அந்தச் சிறுவன் மிகவும் வல்லமையுள்ளவன். நன்றாய்ப் பேசத் திறமை இல்லாவிட்டாலும் கேட்டறிகிற சக்தியும், நன்மை தீமைகளை ஆராய்கிற சக்தியும் அவனிடத்தில் அதிகமாய் இருந்தது.

இப்படியிருக்க, மழையில்லாமல் பஞ்சத்தால் தேசமெங்கும் விளைவில்லாமல் பாழாய்ப்போகவே, அந்த வில்லி தன் பிள்ளைகளைக் காப்பாற்ற யாதொரு வழியும் இல்லாமல் அல்லாடித் தவித்துக்கொண்டிருந்தான். வரவர க்ஷாமம் அதிகமாகவே அவன் ஒன்றும் தோன்றாமல், அந்தப் பிள்ளைகளை எவ்விதமாயாவது ஒழித்துவிடுவதே நல்லதென்று எண்ணி, ஒருநாள் ராத்திரி பிள்ளைகள் எல்லாம் படுத்துத் தூங்கினபின்பு, தன் பெண்சாதியைப்பார்த்துப் பெருமூச்சுவிட்டு: என் அருமைநாயகியே! இந்தப் பிள்ளைகளைக் காப்பாற்ற நம்மால் முடியவில்லையே! இவர்களெல்லாம் பசியால் வருந்தி நமது காலின்கீழேசாக நாம் எப்படிப் பார்த்திருக்கிறது! நாளைக் காலையில் எழுந்தவுடன், மனுஷியசஞ்சாரமில்லாத பெருங்காட்டு மத்தியில் இந்தப் பிள்ளைகளைக் கொண்டுவிட்டு அவர்கள் வேறுகாரியத்தில் பராக்காயிருக்கிற தருணம் பார்த்து அவர்களுக்குத் தெரியாமல் ஒரு கிளைவழியாய் ஓடிவந்துவிடலாம் என்று நினைக்கிறேன். இதுதவிர இவர்களை ஒழிக்கச் சுலபமானவழி வேறொன்றுமில்லை என்றான். அதைக்கேட்டு அவன் மனைவி துக்கத்தால் மனங்கலங்கி: அப்படி ஒருபோதும் செய்யலாகாது; நமது குழந்தைகளை நாமே மனது ஒப்பிக் காட்டிலே துரத்திவிட நினைத்தால் பிறகு அவர்களுக்குக் கதியென்ன? நாம் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் பிள்ளைகளைக் கொல்ல மனம் வருமா என்றாள். அவன் அடுத்தடுத்துத் தான் படுகிற கஷ்டத்தை எத்தனைதரம் முறையிட்டும் அவள், எப்படித்தான் ஆகட்டும் பெற்றவயிறு கேட்குமா என்றே பதில்சொல்லிக்கொண்டுவந்தாள். கடைசியில், என்னசெய்யலாம்; பசியால் வருந்திக் கண்முன்னே பிராணனை விடுவதைப்பாராமல், கண்மறைவாய் ஒழித்துவிடுவதே உத்தமமென்று தன் கணவன் சொன்னதையே ஒத்துக்கொள்ளும்படி நேரிட்டது. இவ்வாறு கொஞ்சநேரம் பேசியபிறகு இருவரும் படுக்கைக்குப்போனார்கள்.

கடைசிப்பிள்ளையான சித்திரக்குள்ளன் தூங்காமலே இவையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தான். தகப்பன் பேசத்

தொடங்கும்போதே தன் படுக்கையைவிட்டு அவர்கள் படுக்கையின் கீழேயே ஒளித்து, அவர்கள் பேசினதையெல்லாம் கேட்டு அவர்கள் பேசிமுடிந்தபின்பு மறுபடி தன் இடத்திற்குவந்து, காலையில் எழுந்து தான் செய்யவேண்டுவது என்னவென்று அதைப் பற்றி ஆலோசனைசெய்துகொண்டே அந்த ராத்திரி முழுமையுங் கழித்தான்.

விடியநேரமானவுடனே எழுந்து ஆற்றங்கரைக்கு ஓடி, அநேகம் சிறு வெள்ளைக் கூழாங்கற்களைப் பொறுக்கி மடிநிரம்பக் கட்டிக்கொண்டு வீடுவந்துசேர்ந்தான். முதனாள்ராத்திரி தீர்மானம் செய்தபடியே அந்த வில்லி தன் மனையாளோடுகூடப் பிள்ளைகளையெல்லாம் அழைத்துக்கொண்டு காட்டுக்குப்போகப் புறப்பட்டான். ராத்திரி நடந்த செய்தியைப்பற்றித் தன் சகோதரர்கள் ஒருவரோடும் ஒரு பேச்சுகூடப் பேசாமல், சித்திரக்குள்ளன் அவர்களைப் பின்தொடர்ந்துபோனான். வெகுதூரத்திற்கு அப்பால், இரண்டடி ஒதுங்கினால் ஒருவர் கண்ணுக்கு ஒருவர் தெரியமாட்டாத ஒரு பெருங்காடு இருந்தது; அங்கே போனவுடன் வில்லி கட்டைகள் வெட்ட ஆரம்பித்தான். பிள்ளைகளும் அங்கங்கே இறைந்திருந்த குச்சுகளையும் கட்டைகளையும் பொறுக்கத்தொடங்கினார்கள். அந்தப் பிள்ளைகள் வேறுநினைவேயில்லாமல் வெகு உற்சாகமாய் வேலைசெய்கிற தருணம் பார்த்துத் தாய்தந்தைகள் இருவரும் அவர்களுக்குத் தெரியாமலே மெல்லமெல்ல அவ்விடம்விட்டு நழுவி வீட்டுக்கு வந்துவிட்டார்கள்.

சிறிதுநேரம் கழித்து அந்தப் பிள்ளைகள் திரும்பிப்பார்த்துத் தங்கள் மாதாபிதாக்களைக் காணாமல் கதறத்தலைப்பட்டார்கள். சித்திரக்குள்ளன் தான் ஆற்றங்கரையினின்றும் பொறுக்கிவந்த கற்களை வெகு ஜாக்கிரதையாய் வழிமுழுதும் அடையாளமாகப் போட்டுக்கொண்டு வந்தபடியால், அதைப் பார்த்துக்கொண்டே வீடுபோய்ச் சேரலாமென்று தைரியமாய் தன் சகோதரர்களோடு மற்றொன்றும் சொல்லாமல், அவர்கள் போனால்போகட்டும், பயப்படவேண்டாம்; பிசகாமல் என்பின்னோடு வந்தீர்களானால் நான் உங்களை வீடுகொண்டு சேர்க்கிறேன் என்று சொன்னான். அதைக்கேட்டு அவர்கள் அழாமல் சந்தோஷமாய்க் குள்ளன்பின்னேயே போனார்கள். அவன் அவர்களையெல்லாம் முன் வந்தவழியே அழைத்துக்கொண்டுபோனான். வீடுபோய்ச்சேர்ந்தவுடன் பிள்ளைகளெல்லாம் தாய்தந்தையர்கள் என்னசொல்லிக் கொள்ளுகிறார்களோ கேட்போம் என்று கதவண்டைநின்றார்கள்.

அந்த வில்லி பிள்ளைகளைக் காட்டில் ஒழித்துவிட்டு வீடு வந்துசேர்ந்தவுடன் ஒரு கனவான், தான் நெடுநாளாய் அவனுக்குக் கொடுக்கவேண்டியிருந்த ரூபாய் இருபதையுங்கொடுத்து அனுப்பி

ளுன். தனக்கு ஒரு காசுகூட வரவேண்டுவதில்லையென்று நினைத்திருக்க, திடீரென்று இருபதுரூபாய் வரவே மிகவும் சந்தோஷம் அடைந்து வில்லி, நெடுநாளாய் போஜனம் இல்லாமல் இருந்ததனால் கடைக்குப்போய் ஏழெட்டுபேர் புசிக்கத்தக்க சரக்குகளை வாங்கிவந்தான். உண்மையாய் பிள்ளைகளெல்லாம் வீட்டிலிருக்கிறார்கள் என்றெண்ணியே அவன் அவ்வளவு வாங்கிவந்தது. பிள்ளைகள் இல்லையென்பதை மறந்தான். வீட்டில்வந்து உட்காந்து புசித்துக்கொண்டிருக்கும்போது வில்லிச்சி பிள்ளைகளை நினைத்துக்கொண்டு, ஐயோ! அந்த அநாதைப்பிள்ளைகள் எங்கே அல்லாடுகிறார்களோ? இந்நேரம் பசியெடுத்துத் தவிப்பார்களே! நாம் புசித்து மிகுந்த இவ்வுணவை அவர்களுக்கு எப்படி கொண்டுபோய்க் கொடுக்கிறது! இது உன்னுடைய ஆலோசனைக்குறைவால் அல்லவோ நேர்ந்தது! அவசரப்பட்டு முன்னதாய் ஒரு காரியம் செய்துவிட்டால் பின்பு பச்சாதாபப்படும்படி நேரிடும் என்று முன்னேயே நான் சொல்லவில்லையா? இனி அதைச் சொல்லிப் பயனென்ன? இந்நேரம் கோநாயோ குடத்தியோ, அவர்களைப் பிடுங்கித் தின்றுவிட்டிருக்கப்போகிறது. ஐயோ! என் அருமைக் குழந்தைகளே! உங்களுக்கு என்னகாலம் வந்துவிட்டது! என்று இப்படி பலதரம் புலம்பினாள்.

கதவண்டைநின்று இவையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த பிள்ளைகள்: "இதோ வந்திருக்கிறோம், இதோ வந்திருக்கிறோம் தாயே! நீ விசனப்படவேண்டாம்" என்று கூவினார்கள். அதைக் கேட்கவே தாய் சந்தோஷத்தால் உடம்புதெரியாமல் பொங்கி ஓடிவந்து, பிள்ளைகளைக் கட்டியணைத்து முத்தமிட்டு, உள்ளே அழைத்துக் கொண்டுபோய் மிகவும் பரிவாய் அவர்களுக்குப் போஜனமிட்டு அவர்களோடு சிலநாள் சுகமாக வாழ்ந்திருந்தாள்.

ஆயினும் அந்த வில்லி வில்லிச்சிகளுக்குப் பிள்ளைகள் வந்து சேர்ந்ததனாலுண்டான சந்தோஷம் நீடித்திருக்கவில்லை. அப்போது கிடைத்த பொருளெல்லாம் செலவழிந்துபோனபின்பு மறுபடியும் முன்போலவே சிந்திக்கத் தலைப்பட்டார்கள். அவர்களுடைய வருத்தமும் நாளுக்குநாள் அதிகமாய்க்கொண்டுவந்தது. அதனால் ஒருநாள் ராத்திரி, அந்தப் பிள்ளைகள் ஒருபோதும் திரும்பி வாராதபடி முன்னிலும் வெகு தூரமாய்க் காட்டில்கொண்டுவிட்டு வரும்படி ஆலோசித்தார்கள். அந்த ரகசியமும் சித்திரக்குள்ளனுக்குத் தெரியாமல்போகவில்லை. ஆயினும் அவன் அதை ஒரு பெரியகாரியமாய்க் கவனியாமல் முன்போலவே திரும்பி வந்துவிடலாமென்று எண்ணியிருந்தான். அப்படியே விடியற்காலையில் எழுந்து கற்களுக்காக ஆற்றங்கரைக்குப்போகப் புறப்படுகையில், கதவு பூட்டியிருப்பதுகண்டு ஒன்றுந்தோன்றாமல் தவிக்கையில், தாயானவள்: இனி பிள்ளைகளைப் பார்க்கப்போகிறதில்லையே என்று

அனுதாபத்தோடு ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒவ்வொருரொட்டி கொண்டுவந்துகொடுத்தாள். அதைப்பார்க்கவே குள்ளன்; கற்களுக்குப் பதிலாய் அதைத் துண்டுதுண்டாய் வழியடையாளத்திற்குப் போட்டுக்கொண்டுபோகலாமென்று சந்தோஷமாய்த் தன் பங்கைத் தின்னுமலே வைத்துக்கொண்டிருந்தான்.

கொஞ்சநேரத்திற்கெல்லாம் யாவரும் காட்டுக்குப்போகப் புறப்பட்டார்கள். வில்லியும் வில்லிச்சியும்வெகு ஜாக்கிரதையாய்ப் பிள்ளைகளையெல்லாம் அழைத்துக்கொண்டுபோய் வெகுதூரத்தில் முன்னைதைப்பார்க்க மிகவும் பயங்கரமாயிருந்த பெருங்காட்டிலே கொண்டுபோய் விட்டுவிட்டு, அவர்களுக்குத் தெரியாமலே மெல்லமெல்ல வெளியே வந்துவிட்டார்கள். அதுதெரிந்தும் சித்திரக்குள்ளன் விசாரப்படவில்லை. ஏனெனில், தான் வழிமுழுதும் ரொட்டித் துணிக்கைகள் போட்டுக்கொண்டு வந்ததனுல் அந்தக் குறிப்படியே வீடுபோய்ச்சேரலாமென்று நினைத்துக்கொண்டிருந்தான். வீட்டுக்குப்போகத் திரும்பிப்பார்க்கையில் ஒரு துண்டுகூட அவன் கண்ணுக்கு அகப்படவில்லை. எப்படி அகப்படும்! ஒன்றுதப்பாமல் பறவைகள் பொறுக்கிக்கொண்டுபோயினவே!

அப்பிள்ளைகளெல்லாம் வழிதெரியாமல் விசனத்துடன் அக்காட்டில் அல்லாடித் தவித்துக்கொண்டே அப்புறம்போகப் புறப்பட்டார்கள். அவர்கள் போகப்போக வழியகப்படாமல் வெகு வருத்தம் உண்டாகத்தலைப்பட்டது. இப்படியிருக்க பொழுது படுகிற தருணமாயிற்று. காட்டுமரங்களில் மோதிவருகிற காற்றோசையைக் கேட்கும்போதெல்லாம் கோநாய்கள்தாம் ஊளையிடுகின்றனவோவென்று அவர்கள் நடுங்கிப்போவார்கள். ஒருவர்க்காவது வாயைத்திறந்து ஒரு பேச்சுபேச மனதெழும்பவில்லை. கைகாலை அசைத்தால்கூட என்ன அபாயம் நேரிடுமோவென்று பயந்தார்கள். இதுவுமன்றியில் ஒரு மழை அடித்து அவர்கள் உடம்பெல்லாம் தெப்பமாய் நனைந்துபோய், தரையெங்கும் காலைப் பதியவைக்கக்கூடாமல் வழுக்கினதனுல், கண்டவிடத்திலெல்லாம் விழுந்து தேகமெங்கும் சேருய்விட்டது.

நன்றுய் இருள்மூடுவதற்குமுன்னேயே சித்திரக்குள்ளன் ஒரு பெரிய மரத்தின்மேலேறி அந்தக் காட்டைவிட்டு வெளியே போக எந்த மூலையிலாவது வழியகப்படுமோவென்று நாலுபக்கமும் சுற்றிச்சுற்றிப்பார்த்தான். ஒருபக்கத்தில் வெகுதூரத்துக்கு அப்பால் அந்தக் காட்டுக்குவெளியில் மினிமினிப்பூச்சிபோல் ஒரு விளக்கொளி தெரிந்தது. அந்த வெளிச்சத்தைப் பார்த்துக்கொண்டே அப்புறம் போகவேண்டும் என்று அம்மரத்தைவிட்டுக் கீழே இறங்கிவந்து பார்க்கும்போது அந்தத் தீபம் மறைந்துபோயிற்று. இனிச் செய்யத்தக்கது இன்னதென்று தெரியாமல் அவர்களெல்லாம் மிகவும் விசனமடைந்து அந்த வெளிச்சம் தெரிந்த

பக்கமாயே நடந்தார்கள். வெகு வருத்தப்பட்டு அந்தக் காட்டைக் கடந்து வெளியே போனபிறகு அந்த விளக்கு மறுபடியும் அவர்கள் கண்ணுக்குத் தெரிந்தது. அதைப்பார்த்து உற்சாகத்துடன் வேகமாய் நடந்தார்கள். அவர்கள் பள்ளத்தாக்கில் இறங்கும் போதெல்லாம் அந்தத் தீபம் கண்ணுக்குத் தென்படாமல் மறைந்துபோம். இப்படியே அல்லாடித் தவித்துக் களைத்து வெறுப்படைந்துபோய், கடைசியில் அந்த விளக்குத் தெரிந்த வீட்டிற்போய்ச் சேர்ந்து கதவை இடித்தார்கள். அந்த வீட்டுக்காரி மிகவும் தயாளமான மனதுள்ளவள். அவள் வந்து கதவைத் திறந்து நீங்கள் யார்? இவ்விடத்திற்கு எப்படி வந்தீர்கள்? என்று மிகவும் பரிதாபத்தோடு கேட்க, சித்திரக்குள்ளன்: நாங்கள் மிகவும் எளியவர்கள்; இக்காட்டுக்குவந்து வழிதெரியாமல் தவித்து, இந்த வீட்டு விளக்குவெளிச்சத்தைக் கண்டு இங்கே வந்துசேர்ந்தோம் என்றுசொல்லி, காலைவரையில் படுத்திருக்கக் கொஞ்சம் இடம் விடவேண்டும் என்று வேண்டினான். அந்தப் பெண்பிள்ளை இவர்களுடைய அழுகையும் முகக்களையையுங் கண்டு கண்ணீர்விட்டு, ஐயோ! அநாதப்பிள்ளைகளே! இந்த இடம் இப்படிப்பட்டதென்று உங்களுக்குத் தெரியாதோ? குழந்தைகளைக் கரும்புபோல் கடித்துத்தின்கிற ஒரு ராக்ஷதனுடைய மாளிகையாயிற்றே என்றாள்.

அதைக்கேட்டுச் சித்திரக்குள்ளன்: உள்ளங்கால்முதல் உச்சந்தலைவரையில் உடம்பு நடுங்கிப்போய், ஐயோ! எங்கள் பெருமாட்டி! இனி நாங்கள் என்னசெய்வோம்! காட்டுக்கு ஓடிப்போவோமென்றாலும் கோநாய் குடத்திமுதலியவை பிடித்துத் தின்றுவிடுமே, அவைகளின் வாயில் அகப்பட்டுக்கொள்வதைவிட இந்த கனவானுக்கு இரையானால் கொஞ்சம் மேன்மையல்லவா? ஒருவேளை அவரே எங்களைக் கண்டு ஐயோ பாவம் என்று இரங்கினால்தான் ஆகாதா? என்றான்.

அவர்களுடைய பரிதாபத்தைப் பார்த்து அந்தப் பெண்பிள்ளை எப்படியாவது தன் புருஷன் கண்ணில் அகப்படாமல் காலைவரையில் இப்பிள்ளைகளைக் காப்பாற்றலாம் என்று தைரியங்கொண்டு; அவர்களையெல்லாம் உள்ளே அழைத்துக்கொண்டுபோய் நெருப்பண்டை உட்காரவைத்து தேஹத்தில் கொஞ்சம் சூடு உண்டாகச் செய்துகொண்டிருந்தாள். அந்தப் பிள்ளைகள் எல்லாரும் கொஞ்சநேரம் அடுப்பண்டை உட்கார்ந்து குளிர் காய்ந்துகொண்டிருக்கையில், தபதபவென்று தெருக்கதவை இடிக்கிற ஓசை அவர்களுக்குக் கேட்டது. அவன்தான் அந்த வீட்டு ராக்ஷதன். அந்த ஓசையைக் கேட்கவே, தயாளமனதுள்ள அந்த வீட்டுக்காரி: வெகு பரபரப்பாய் அந்தப் பிள்ளைகளையெல்லாம் உரத்து மூச்சுவிடாமல் படுக்கையின்கீழேபோய்ப் புகுந்துகொள்ளச்செய்து பிறகு தெருக்கதவைத் திறந்தாள்.

அந்த ராக்ஷதன் உள்ளே நுழைந்தவுடன், சமயலாயிற்று? சாராயம் முதலிய தாகத்திற்குவேண்டியவைகளெல்லாம் சித்தமாய்க் கொண்டுவந்துவைத்திருக்கிறதா? என்று விசாரித்துக்கொண்டே நாற்காலியில் வந்து உட்கார்ந்தான். அப்போது பாதிதான் சமயலாயிருந்தது; இரண்டொரு நிமிஷத்திற்கெல்லாம் அவன் நாலுபக்கத்திலும் திரும்பித்திரும்பி வாசனை பிடித்துப்பார்த்து: இங்கெங்கேயோ குழந்தைமாமிசநாற்றம் வருகிறதுபோல் இருக்கிறதே, அதென்ன என்று கேட்டான். அதற்கு அவன் பெண்சாதி: இப்போது நாம் ஒரு கன்றுக்குட்டியைக் கொன்றோமே! அதன் நாற்றமாயிருந்தாலிருக்கலாம் என்றாள்.

அவன் மறுபடியும், நான் சிறுபிள்ளைநாற்றம் வருகிறதென்று சொன்னால், நீ என்ன பேச்சுபேசுகிறாய் என்று சொல்லிக்கொண்டே நாலுபக்கமும் திரும்பித்திரும்பிப்பார்த்து, இது சிறுபிள்ளைநாற்றந்தான்; எனக்குத் தெரியாமல் இங்கே ஏதோ ஒரு பிசகு நடந்திருக்கிறது என்று எழுந்து நேராய் வாசனைபிடித்துக்கொண்டு படுக்கையறைக்குப்போய், அங்கிருப்பதைப்பார்த்து: ஆ! திருட்டுப்பெண்ணே! என்னை நீ மோசம்செய்ய நினைத்தாய் அல்லவா? நீ இப்போது தேகந்தளர்ந்து கிழவியாய்ப்போயிராவிட்டால் உன்னைக்கூடப் புசித்துப்போடுவேன்; இது உனக்கு அதிர்ஷ்டகாலந்தான். நாளையதினம் எனக்கும் என்னுடன் புசிக்கவருகிற என் நேசர்களுக்கும் இந்தச் சிறுவர்களெல்லாம் நல்ல போஜனமாவார்கள் என்று சந்தோஷமடைந்தான்.

பிறகு படுக்கையின்கீழ் சுவாசங்கூட உரத்துவிடமாட்டாமல் அடைந்திருந்த அந்த அநாதப்பிள்ளைகளை அவன் ஒவ்வொருவராய் வெளியே இழுத்துவிடவே, அந்த எளியபிள்ளைகள் எல்லாம் முழங்காலிட்டு, தயைசெய்து எங்களைக் காக்கவேண்டுமென்று அந்த ராக்ஷதனைப் பிரார்த்தித்தார்கள். அவனைவிடக் கொடிய ராக்ஷதன் இப்பூமண்டலத்திலேயே கிடையாது. அந்தப் பிள்ளைகளைக் கண்டு மனதில் கொஞ்சமும் உருக்கம் உண்டாகாமல் இருந்ததும் அன்றி, அவர்கள் வேண்டவேண்ட, இவர்களைப் புசித்தால் ருசியாயிருக்குமா? வாய்க்கு மெதுவாயிருக்குமா என்று ஆலோசிக்கலானான். கொஞ்சநேரம் அப்படி எண்ணமிட்டுக்கொண்டிருந்துபின்பு ஒரு பெரிய கத்தியை எடுத்து இடதுகையிலிருந்த சாணைக்கல்லில் தீட்டிக்கொண்டே, மெல்லமெல்ல அந்தப் பிள்ளைகளண்டைபோய், முதலில் ஒருவனை இழுத்துத் துண்டுதுண்டாக வெட்டப்புகுந்தான். அதற்குள் அவன் மனைவிவந்து, இவர்களையெல்லாம் இப்போதே ராத்திரியில் வெட்டிவைக்கவேண்டுமென்று ஏதாவது அவசரமுண்டோ? நாளைக்காலையில் கொல்லப் பொழுதில்லையா? என்று கேட்டாள்.

அதைக்கேட்டு அந்த ராக்ஷதன்: போதும்போதும், வாயைமூடு; என்ன மதிகெட்ட பேச்சுபேசுகிறாய்? வெட்டிக் கொஞ்சநேரம் வைத்துவைத்தாலல்லவோ மெதுவுண்டாகும் என்று சொல்ல, அவள்: அதுமெய்தான்; இப்போது வீட்டில் ஒரு கன்று, இரண்டு ஆடு, மூன்று பன்றி இவ்வளவு சித்தமாயிருக்கின்றனவே; இவையெல்லாம் ஆனபிறகல்லவோ வேறொன்று தேடவேண்டும் என்று சொன்னாள்.

அதைக்கேட்டு அவன், ஆம், நீ சொன்னது உண்மைதான். இப்போது இவர்களுக்கெல்லாம் நல்லபோஜனமிடு; இல்லாவிட்டால் காலைக்குள் இளைத்து மெலிந்துபோவார்கள் என்றான். அதைக் கேட்கவே அவள் சந்தோஷமடைந்து அந்த அறியாக்குழந்தைகளுக்கு வேண்டுமளவு சாப்பாடு இட்டாள். ஆயினும் அந்தச் சிறுவர்கள், அவன் முன்பேசின பேச்சைக்கேட்டு மிகவும் திகிலடைந்துபோனபடியால் ஒரு துளிகூடப் புஜிக்கவில்லை.

அந்த ராக்ஷதன், தான் மறுநாள் தன் தோழர்களோடு நல்ல விருந்துண்ணலாமென்கிற எண்ணத்தினால் மிகவும் சந்தோஷமடைந்ததனால், உடம்புதெரியாமல் வழக்கமாய்க் குடிப்பதைவிட அன்றையதினம் விசேஷமாய்க் குடித்துவிட்டு, மிகவும் மயக்கமடைந்து உடனே படுத்து அயர்ந்து தூங்கிப்போனான். அந்தப் பிள்ளைகளும் அவளிட்ட சாப்பாட்டைக் கொஞ்சம் கூடியமட்டும் புஜித்துவிட்டுப் போய்ப் படுத்துக்கொண்டார்கள்.

அந்தக் கொடிய ராக்ஷதனுக்கு ஏழு பெண்களுண்டு. அந்தப் பெண்களெல்லாம் இந்த வேடப்பிள்ளைகளைப்போலவே சிறுவயதுள்ளவர்கள். கொடுமையில் தமது தகப்பனையும் அதிகரித்தவர்கள். சிறுகுழந்தைகள் அகப்பட்டால் பச்சைபச்சையாய்ப் பிடுங்கித் தின்கிறவர்கள். பச்சைமாமிசங்களையே விசேஷமாய்த் தின்று வளர்ந்ததனால் அவர்கள் தேஹம் மிகவும் கொழுத்துப் புஷ்டியடைந்திருந்தன. அன்றையதினம் அந்தப் பெண்களெல்லாம் பொழுதுபோனவுடனே புஜித்துவிட்டு ஒரே படுக்கையில்போய்ப் படுத்தார்கள். அவர்கள் ஒவ்வொருவர் தலையிலும் ஒவ்வொரு தங்கக்கிரீடம் தரித்திருந்தது. அந்த ராக்ஷதன் பெண்சாதி, அந்தப் பெண்கள்பக்கத்தில் வேறொரு பெரிய பாய்போட்டு அதில் இவ்வேழு பிள்ளைகளையும் படுக்கவிட்டு, தானும் தன் புருஷனண்டைபோய்ப் படுத்துத் தூங்கினாள்.

நல்ல ஆலோசனைக்காரனான சித்திரக்குள்ளன் படுக்கையில் படுத்துக்கொண்டே, இந்தச் சண்டாளன் கொஞ்சநேரங்கழித்து விழித்துக்கொண்டு இந்த ராத்திரியே நம்மையெல்லாம் கொன்றுபோடுவான் என்று ஊஹித்து, பாதிராத்திரியில் எழுந்து தங்கள்

தலையிலிருந்த குல்லாய்களைக் கழற்றிக்கொண்டு மெல்ல நகர்ந்து அந்தப் பெண்கள் படுத்திருந்த இடத்திற்குப்போய் அவர்கள் தலையிலிருந்த கிரீடங்களை வாங்கிக்கொண்டு, தன் கையிலிருந்த ஏழு குல்லாய்களையும் அப்பெண்கள் தலையில் போட்டுவிட்டு ஒருவர்க்குந் தெரியாமலே திரும்பவும் தன்னிடத்திற்குவந்து, தன் சகோதரர்கள் தலையிலும் தன் தலையிலும் அந்தக் கிரீடங்களைப் போட்டு முன்போல படுத்துக்கொண்டு, என்ன நடக்குமோவென்று வெகு ஜாக்கிரதையாய்க் கண்காணித்திருந்தான். ராக்ஷதன் ஒருவேளை ராத்திரி எழுந்துவருவானானால், தங்களை அவன் தன் பெண்களாக நினைத்துக்கொள்ளட்டுமென்று எண்ணி சித்திரக்குள்ளன் இந்தக் காரியஞ்செய்தது. அவன் எண்ணினபடிதான் கடைசியில் முடிந்தது. இது நடந்த கொஞ்சநேரத்துக்கெல்லாம் அந்தப் பாவி விழித்துக்கொண்டு: அந்தப் பிள்ளைகளை உடனே கொன்றுபோடாமல் என்ன புத்திமோசம்போய்க் காலைவரையில் நிறுத்திவைத்தோம் பார்த்தையாவென்று மிகவும் விசனமடைந்து, சரேலென்று எழுந்து, கத்தியை உருவிக் கையில் எடுத்துக்கொண்டு, அவர்கள் எங்கே படுத்திருக்கிறார்களோ பார்த்து வேலையை உடனே முடித்துப்போடுவோமென்று, முதலில் அந்த எளியபிள்ளைகள் படுத்திருந்த இடத்திற்கு வந்தான். சித்திரக்குள்ளன்தவிர மற்றவர்களெல்லாரும் தூக்கமாயிருந்தார்கள். அவன் அவர்களுடைய தலையைத் தடவிப்பார்த்து, கிரீடமணிந்திருக்கவே, ஐயோ! நான் என்னகாரியஞ்செய்வதற்கு இருந்தேன் பார்த்தையா? ஒருவேளை நான் ராத்திரி அதிகமாய்க் குடித்திருப்பேன். இல்லாவிட்டால் இப்படி மதிமயங்கிப்போகுமா? என்று, தனக்குத்தானே சொல்லிக்கொண்டு அவ்விடத்தைவிட்டுத் தன் பெண்கள் படுத்திருந்த படுக்கைக்குப் போனான். அவர்கள் தலையில் குல்லாய்மாட்டியிருக்கவே, என் குழந்தைகளா! இங்கேயா நீங்கள் இருக்கிறீர்கள்? என்று சந்தோஷமாய் ஒரு நிமிஷத்தில் தன் பெண்களுடைய தலையை வெட்டினான். இந்தக் காரியத்தை நிறைவேற்றியபிறகு அவன் மிகவும் மனங்குளிர்ந்து திருப்தியாய்ப்போய்ப் படுத்தான்.

இவையெல்லாம் பூராயமாய்ப் பார்த்துக்கொண்டிருந்த குள்ளன், ராக்ஷதன் போய்ப் படுத்துக் குறட்டைவிடுவது காதில் கேட்டவுடனே, தன் சகோதரர்களையெல்லாம் எழுப்பி அழைத்துக்கொண்டு அவ்விடம்விட்டு வெகு வேகமாய் ஓடிப்போனான்.

பொழுது விடிந்தவுடன் ராக்ஷதன் எழுந்து தன் பெண்சாதியை அழைத்து, என் கண்ணாட்டி! உன் அருமைப் பிள்ளைகளை எழுப்பிப் புதிய உடை உடுத்திச் சாப்பாடு போடவில்லையா? என்று அவன் பரிகாசமாய்ச் சொல்ல, அவள் அதை அறியாமல், அவன் அவர்களிடத்தில் பக்ஷமாயே பேசுகிறானென்று சந்தோஷமடைந்து, சுருக்

காய் அந்தப் பிள்ளைகள் படுத்திருந்த இடத்திற்குப்போனாள். போனவுடனே தன் பெண்களெல்லாம் தலைவேறு முண்டம்வேறாய் ரத்தம் ஆறாய்ப் பெருகிக்கொண்டிருக்கக்கண்டு தக்ஷணமே மூர்ச்சைபோய் விழுந்தாள். ராக்ஷதன் வெகுநேரம் எதிர்பார்த்திருந்தும் அவள் வாராமையால், இந்த அற்பகாரியஞ்செய்வதற்கு ஏன் இத்தனை நாழிகையென்று தானும் அவளுக்கு ஒத்தாசைசெய்யும்படி அவ்விடத்திற்குப் போய், அங்கிருந்த அவஸ்தையைக்கண்டு ஒன்றுந் தோன்றாமல் உடல் நடுங்கிப்போய், ஐயோ! நான் என்ன மதிகெட்டகாரியஞ்செய்தேன்; இரவெல்லாம் இங்கே படுத்திருந்து மோசஞ்செய்த நாய்களைத்தான் இதற்காக தண்டிக்கவேண்டும்; ஆகட்டும் என்று அந்தப் பிள்ளைகளிடத்தில் மிகவும் கோபமாய் அவர்களைக் கறுவிக்கொண்டு, முதலில் தன் பெண்சாதிக்கு மூர்ச்சைதெளியும்படி பல சீதோபசாரங்கள் செய்தான். பிரஞ்ஞைவந்து அவள் எழுந்தவுடனே, அவன்: என் அருமைநாயகியே! நீ விசனமடையவேண்டாம்; என் யோசனைப்பாதரக்ஷையைக் கொண்டுவா; நான் ஒரு நிமிஷத்தில் அந்த விஷப்பூச்சிகளைப் பிடித்திழுத்துக்கொண்டுவருகிறேன் என்றான்.

அந்த ராக்ஷதன் காலில் யோசனைப்பாதரக்ஷையை மாட்டிக்கொள்ளவே, ஒவ்வொரு அடிக்கு ஒவ்வொரு யோசனையாய் நடந்து, பற்பல தேசங்களெல்லாம் சுற்றிப்பார்த்து, அங்கெங்கும் இந்தப் பிள்ளைகளைக் காணாமல் கடைசியில் அவர்கள் போனவழியாய்த் திரும்பினான். அந்தப் பிள்ளைகள் தம்முடைய வீட்டுக்கு நேராகவே புறப்பட்டுக் கொஞ்சம் ஏறக்குறைய வீட்டுக்குச் சமீபத்தில் போய்ச் சேர்ந்தார்கள். போம்போதெல்லாம் ராக்ஷதன் எங்கே தூரத்திக்கொண்டு ஓடிவருகிறானோவென்று பயந்து அடிக்கடி பின்னேயே கண்ணாய்ப் பார்த்துக்கொண்டுபோனார்கள். அப்படி போம்போது அந்த ராக்ஷதன் வெகு தூரத்துக்கப்பால் பெரிய மலைகளையும் ஆறுகளையும் அலக்ஷியமாய் தாண்டிக்கொண்டுவரக் கண்டு, குள்ளன் ஒன்றுந்தோன்றாமல் சற்றுநேரம் ஆலோசித்துப் பக்கத்திலே ஒரு பெரிய பாறையின்கீழிருந்த ஒரு குகைக்குள் தன் சகோதரர்களைப் புகுந்துகொள்ளச்செய்து, தான்மாத்திரம் அவன் என்னசெய்கிறானோவென்று அவன்மேலேயே கண்ணாய் அந்தக் குகையின் முன்புறத்திலேயே பதுங்கிக்கொண்டிருந்தான்.

அந்த ராக்ஷதன் ஒருவராலுந் தரித்துக்கொள்ளக்கூடாததும், மிகவும் ஆயாஸமுண்டாக்கத்தக்கதுமான யோசனைப்பாதரக்ஷையைத் தரித்துக்கொண்டு வெகுதூரம் நடந்துவரவே மிகவும் இளைப்படைந்துபோய், அப்புறம் நடக்கமாட்டாமல் அந்தப் பிள்ளைகள் ஒளித்திருந்த பாறையின்மேல் இளைப்பாற வந்து உட்காந்தான். அவன் உடம்பு மிகவும் ஓய்ந்துபோயிருந்ததனாலும், அன்றைய

தினம் வெயில் வெகு உக்கிரமாயிருந்ததனாலும் களைத்துப் படுத்த க்ஷணமே கண்ணயர்ந்துபோனான். அந்தப் பாறையின்கீழ் ஒளித்திருந்த பிள்ளைகள் பயந்து நடுங்கிப்போம்படி குறட்டைகள் உரப்பாய்வரத் தலைப்பட்டன.

அதைக்கண்டு சித்திரக்குள்ளன் பயப்படவேண்டாமென்று தன் சகோதரர்களுக்குத் தேறுதல்சொல்லி, நீங்கள் இங்கே ஒன்றும் செய்யவேண்டுவதில்லை. இவன் தூங்கிக்கொண்டிருக்கும்போதே திருட்டுத்தனமாய் நழுவி வீடுபோய்ச் சேருங்கள்; நான் சற்றே இங்கிருந்துவருகிறேன் என்றான். அவர்கள் சந்தோஷமாய் அப்படியே தமது வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

சித்திரக்குள்ளன் குகையைவிட்டு வெளியே வந்து காலோசை கேட்காமல் ராக்ஷதனண்டைபோய் அவன் காலிலிருந்த யோசனைப் பாதரக்ஷைகளை மெதுவாய்க் கழற்றித் தன் கால்களில் மாட்டிக்கொண்டான். அது எந்தக்காலிலேபோட்டாலும் அதற்குச் சரியாக மாறுகிற மந்திரபாதரக்ஷையாகையால், அவ்வளவு பெரிய ராக்ஷதன் காலுக்குச் சரியாயிருந்தது இந்தக் குள்ளன் காலுக்கும் சரியாகவே அமைந்தது.

அதிக சமர்த்தனான சித்திரக்குள்ளன், அந்தப் பாதரக்ஷைகளைத் தன் காலில் மாட்டிக்கொண்டவுடனே அரசன் அரண்மனை போய்ச்சேர்ந்து, தான் தூரதேசத்துச் செய்திகளை உடனே கொண்டுவரமாட்டுவேனென்று ராஜாவுக்குத் தெரிவித்தான். ராஜாவும் அதற்காக அவனை ஒரு வேலைக்காரனாக வைத்துக்கொண்டான். அரண்மனைச் செய்திகளை அப்போதைக்கப்போது தேசாந்தரத்திலிருக்கிற சேனைக்குத் தெரிவிக்கவும், அப்போதைக்கப்போது தூரதேசத்தில் நடக்கிற சண்டைகளின் செய்திகளையெல்லாம் உடனுக்கு உடனே கொண்டுவரவும் தபால் வண்டிகளைவிட அவன் அரசனுக்கு அதிக உபயோகமாயிருந்ததனால் வரவர அவனுடைய அதிர்ஷ்டம் மிகவும் விருத்தியடைந்தது. கொஞ்சநாளையில் தன் குடும்பம்முழுமையும் சுலபமாய்த் தன் வாழ்நாள்முழுதும் தாங்கத்தக்க பொருள் தேடிக்கொண்டு தன் ஊர்போய்ச்சேர்ந்தான். இப்படிப்பட்ட புத்திசாலியான பிள்ளையைக்கண்டு பெற்றோர்கள் பெருமையடைந்தார்கள்.

ராஜசபையில் அடிக்கடி சித்திரக்குள்ளனுடைய பாதரக்ஷையின் மகிமையைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கவே, ராஜாவுக்கு

அவனிடத்தில் விசேஷ கவுரவமுண்டாகி அவனை அழைப்பித்து, ராஜாங்கத்தில் உயர்ந்த அதிகாரத்தை அவனுக்குக் கொடுத்தான். அதனால் அவன் வரவர அந்த ராஜ்யத்திலுள்ளவர்களுக்கெல்லாம் மேலான தனிகனானான்.

பின்பு அந்த ராக்ஷதனுடைய கதி என்னவாயிற்றோ அதைச் சற்று விசாரிப்போம். தன் காலிலிருந்த பாதரக்ஷையைக் கழற்றினது கூடத் தெரியாமல் அவ்வளவு மடத்தனமாய்த் தூங்கிக் கடைசியில் ஏதோ ஒரு கெட்ட கனவுகண்டு அந்தப் பாறையினின்று புறண்டு உருண்டு விழுந்தான். உடம்பெங்கும் ஊசிநாட்டவிடமில்லாமல் உராய்ந்துப் புண்பட்டு - அசையமாட்டாமல் அவன் வழியில் போகிறவர்களையெல்லாம் தன்னைத் தூக்கிவிடும்படி கூவியழைத்தான். அங்கே போகிறவர்களெல்லாரும் அவன் கூச்சலைக்கேட்டு வந்தார்கள். அவன் கண்ட மனிதர்களையெல்லாம் தின்று பருவதாகாரமாய்ப் படுத்திருந்ததனால் அவர்கள் அவன் காலைக்கூட அசைக்கமாட்டாமல் நிராசையாய்ப் போய்விட்டார்கள். கடைசியில் பொழுதுபோய் நல்லபாம்பு பிடுங்கி வெகு சங்கடமனுபவித்து மாண்டுபோனான் என்று பிரசித்தமாயிற்று.

நாளாவர்த்தியில் அரசனுக்கு பிராணசிநேகிதனாய்ப்போன சித்திரக்குள்ளன், இந்த ராக்ஷதன் இறந்ததைக் கேட்டு, முதலில் அந்த ராக்ஷதன் பெண்சாதியின் நற்குணங்களையும், அவள் தங்களுக்குச் செய்த பேருதவிகளையும் ராஜசமுகத்திற்கு அறிவிக்க, அதைக்கேட்டு ராஜா சந்தோஷமடைந்து, அவளுக்கு நீ என்ன நன்றி செய்யவேண்டியிருந்தாலும் செய்யலாமென்று அனுமதிகொடுக்கவே, அவன் அவளை உடனே ராஜசபைக்கு அழைப்பித்து, சிறந்த பட்டப்பெயர்களெல்லாம் கொடுத்து மேலாக ஆதரித்துவந்தான். அந்தச் சிறுவன் வடிவத்தில் குள்ளனாயினும் புத்தியில் நீண்டவனாய் வரவர யுத்தியும் உபாயமும் அதிகமாகி, அந்த ராஜாங்கத்தில் மந்திரிப்பட்டம்பெற்று ராஜகாரியங்களைத் தானே தனித்துப் பார்த்துக்கொண்டு, ஜனங்களெல்லாம் ராஜாவைவிட இவனையே மேலாய் மெச்சும்படி அவ்வளவு சிறப்போடு வாழ்ந்திருந்தான்.

வைசூரி சாத்தியமான வியாதியா?

சென்னை விசோதக்காட்சிசாலையில் வைத்தியசிரேஷ்டராகிய

டாக்டர் ஜியார்ஜ் ஸ்மீத்து துரையவர்கள்

வைசூரியைக்குறித்துச் செய்த

உபந்யாஸம்.

வைசூரிசம்பந்தமான தொடர்வியாதிகள்
இச்சென்னைமாநகரில் மீண்டுவராமல் தடுக்க என்னசெய்யலாம்?

உலகத்தில் யாவருக்கும் கேள்விகேட்பது மிகவும் எளிது; விடை கொடுப்பது மிகவும் கடினம். இந்த விஷயம் நமக்கெல்லாம் அனுபவத்தால் வெளிப்படையாகத் தெரிந்திருக்கின்றது. இப்போது உண்டாயிருக்கிற கேள்விக்குத் தக்க சமாதானம் சொல்லக்கூடாமலாவது, சந்தேகமான சமாதானம் சொல்லும்படியாவது இருக்குமானால், உங்களுடைய காலத்தையும் என் காலத்தையும் வீண்போக்க நான் இப்போது உங்கள் முன்னிலையில் வந்து நிற்கும்படி நேர்ந்திராது. தகுந்தகாரணங்களோடுகூட திருப்திகரமான சமாதானமுண்டாகுமென்று நான் பூரணமாய் நம்பியே, பின்வருகிற விஷயங்களைத் தாங்கள் சற்று கவனிக்க வேண்டுமென்று, நான் கேட்டுக்கொள்ளத் துணிந்தனன்.

இவ்விஷயம் சிலகாலமாய்த் தத்துவங்களை ஆராய்ச்சிசெய்கிற தன்மையுள்ள இப்பட்டணத்துப் புத்திமான்களுடைய மனதில் அடிக்கடி தோன்றியிருக்கலாம். இப்போது நாம் அதிகொடூரமான இந்த வைசூரி என்னும் பெருவாரிக்காய்ச்சலாகிய சுழலில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறோம். அதனால் நேர்ந்திருக்கிற மரணங்களும் மற்றத் தீங்குகளும் அளவற்றிருக்கின்றன. ஆதலால் நாம் உபந்யஸிக்கப்போகிற விஷயம் ஒரு சாஸ்திரசம்பந்தமானதுமல்ல, ஒரு கொள்கையை அநுசரித்ததுமல்ல; அனுபவசித்தமாகவும் அவசியம் நடத்தவேண்டியதாகவும் இருக்கின்றது. அதிபயங்கரமாயும், கெடுதிபயப்பதாயுமிருக்கிற இந்தக் கொள்ளைநோயைத் தற்காலத்தில் சமனப்படுத்தவும், கூடுமானால் பிற்காலத்தில் அண்டவொட்டாமல் தடுக்கவும் தகுந்த உபாயம் ஏதாவது உண்டானால், அதைத் தெரிந்தவரையில் வைத்தியசாஸ்திரப் பயிர்ச்சியுள்ளவர்கள் தம்முடன் வாழுங் கனவான்களுக்குத் தெரிவிக்கத்தக்க தருணம் இதுதான்.

இந்தக் கெட்ட உபத்திரவத்தினின்றும் தப்பிப் பிழைக்கும்படி இப்போது நான் எடுத்துக் காட்டப்போகிற உபாயங்களை இப்பட்டணத்து

ஜனங்களுக்கு நன்றாய்த் தெரியப்படுத்தி, அவர்கள் அதை அங்கீகரித்து அவ்வாறே நடக்கும்படி, இப்போது என்னை கனப்படுத்தும்பொருட்டு இங்கு வந்திருக்கிற சுதேச கனவான்கள், தமது செல்வாக்கினாலும், மற்றப் படித்த சுதேசிகளுடைய சஹாயத்தாலும் அநேகமாய்ப் பிரயத்தனப்படுவார்களென்று நான் பூரணமாய் நம்பியிருக்கிறேன்; ஆகையால், நான் எடுத்துரைக்கப்போகிற குறிப்புகள் முக்கியமாய் அவர்களையே உத்தேசித்துச் சொல்லப்படும்.

அனுபவசித்தமான வைசூரியின் சரித்திரச்சுருக்கம்.

வைசூரியின் செய்தி இப்படிப்பட்டதென்றே தெரியாதவர்கள்கூட இந்த உபந்யாசத்தைக் கேட்கும்படியிருக்குமாகையால் யாவருக்கும் நன்றாய்த் தெரியும்படி. அனுபவத்திற்கேற்க அதன் வரலாற்றைச் சுருக்கமாய்த் தெரிவிக்கவேண்டும். மேலும் அதின் விஷயத்தில் எனக்கு எவ்வளவு நிச்சய ஞானமுண்டாயிருக்கின்றதோ, அப்படியே கேட்போர்களுக்கெல்லாம் உண்டாகும்படி தகுந்த நியாயங்களும் எடுத்துக்காட்டவேண்டும். இப்போது நான் புதிதாக யாதொன்றும் எடுத்து உரைக்கப்போகிறதில்லை. முன்னிருந்த பண்டிதர்கள் தேர்ந்தறிந்த விஷயத்தை ஞாபகப்படுத்தி, உங்களுடைய நியாயவாதத்தாலும், செல்வாக்கினாலும், நடத்தையாலும் அதை நடவடிக்கைக்குக் கொண்டுவரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

விசாலமான இப்பூமண்டலத்தில் முதலில் எந்த இடத்தில் வைசூரி கண்டதோ, எப்போது அதைப்பற்றிய சரித்திரம் இப்பூமண்டலத்தில் பரவத்தலைப்பட்டதோ, அது ஒருவருக்கும் தெரியமாட்டாது. இந்த நோய் முதலில் மனிதர்களுக்கு உண்டாகிப் பிறகு மற்ற ஜந்துக்களிடத்தில் பரவிற்றோ, மிருகங்களுக்குத்தானுண்டாகி அங்கிருந்து மனிதர்களிடத்தில் சம்பந்தப்பட்டதோ அதுவுந்தெரியாது. இந்த வியாதி வெகுகாலமாய்ப் பிரசித்திபெற்றிருக்கிறதென்பதுமாத்திரம் நமக்கு நன்றாய்த் தெரியும். 3000 வருஷத்திற்குமுன்னமே சீனதேசத்தில் கண்டிருக்கின்றது. இந்தியாவில் வெகுகாலமாயுண்டு. கிறிஸ்துபிறந்த ஆறாவது நூற்றாண்டில் அரேபியா அபிசீனியா, ஸிரியாமுதலிய தேசங்களில் இந்தக் கொள்ளைநோயினால் அதிபயங்கரமான தீங்குகளுண்டாயின. இந்தக் கீழ்த்தேசங்களினின்றுமே ஐரோப்பாவுக்குப் போய்ச்சேர்ந்தது. அங்கிருந்து அமெரிக்காவுக்குப் போயிற்று. இவையெல்லாம் நமக்குத் தெரிந்தவைதாம். இந்தக் கொள்ளைநோயால் உண்டாகும் மரணம் யாவரையும் திடுக்கிடச்செய்யும். முதல் முதல் அந்த நோய் எங்கே உண்டாகின்றதோ அங்கெல்லாம் பிராணசேதமே அதிகமாயிருக்கின்றது. அந்த நோய் காண்கிற மனிதர்கள் கறுத்ததோலுள்ளவர்களாயிருந்தாலும் அப்படியே. இந்த உபத்திரவம் மனிதர்களுக்கு

மாத்திரமே காண்கிறதென்பதில்லை. ஆடுமாடு குரங்கு நாய் பன்றிமுதலான ஜந்துக்களுக்கும் விசேஷமாய்க் காண்கிறது. இதன் கொடுமையும் இதனால் விளையும் தீமையும் மனிதர்களுக்குப்போலவே மிருகங்களுக்கும் அதிக பயங்கரமானதாகவே இருக்கின்றது. மனிதர்களுக்குவருகிற நோய்க்கும் மிருகங்களுக்குவருகிற நோய்க்கும் எவ்விதத்திலும் வேறுபாடு இடையாது. இந்த வியாதி மனிதர்களிடத்தினின்று மிருகங்களுக்கும், மிருகங்களிடத்தினின்று மனிதர்களுக்கும் தொடர்கிறது உண்டு.

வியாதியின் லக்ஷணம்.

இயற்கையாயுண்டாகிற வைசூரி, பார்த்தவர்களெல்லாம் நடுங்கத்தக்கதாயிருப்பதுமாத்திரமேயல்ல, மிகவும் அபாயத்தை விளைவிக்கின்றது. அம்மையைப்போல் அவ்வளவு வலிவும் உறுதியும் உள்ளதும், அவ்வளவுதூரம் வியாபிக்கத்தக்கதுமான வியாதி வேறொன்றுமில்லையென்று டாக்டர் வாட்ஸன் என்பவர் சொல்லுகிறார். ஒருபோதும் வைசூரிபோடாதவர்களுக்காவது அம்மை குத்தாதவர்களுக்காவது வைசூரிகாணுமானால் அவர்களுள் பத்தில் ஒன்றுமுதல் மூன்றில் ஒன்றுவரையில் சேதமுண்டாகின்றது. அப்படிப் பிராணன் போகாமல் தப்பித்துக்கொண்டவர்களுள் அநேகர் செவிடும் குருடும் ஊமையும் மொண்டியும் முடமும் அங்கஹீனமுமாய்ப் போவதுமன்றி, பின்பு ஒருகாலும் உடம்பு சுகப்படாமலே வெகு சங்கடங்களை அனுபவிக்கிறார்கள். வைசூரியினால் மனிதர்களுக்கு நேரிடுகிற பல துன்பங்களையும் நாம் நினைத்துப்பார்க்கும்போது மரணமொன்றுதான் அவைகளுள் முக்கியமானதாய்த் தோற்றுகின்றது.

இந்த வியாதிக்கு விசேஷமாய் இளைதேடுவதிலேயே நோக்கம் அதிகம். வயதுசென்றவர்களைவிட, சிறுவர்களையும் காளைகளையுமே அது விசேஷமாய் விரும்புகின்றது. இந்த நோய் மரணாந்தமான தன் கொடுமைகளையெல்லாம் குழந்தைகளிடத்திலேதான் விசேஷமாய்க் காட்டுகின்றது. ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் நூற்றுக்கு எழுபத்தைந்துவீதம் சேதமுண்டாகின்றதென்று டாக்டர் பார் என்பவர் சொல்லியிருக்கிறார். கார்னிஷ் துரையவர்கள் அனுப்பிய கணக்குவிவரத்தின்படி பட்டணத்தில் 1855-ம் ஸுமுதல் 1876-ம் ஸுவரைக்கும் வைசூரியால் இறந்துபோன 10076 பேர்களுள் ஐந்துவயதுக்குட்பட்ட பிள்ளைகள் நூற்றுக்கு 68 வீதமும், அதற்குமேல் பத்துவயதுக்குட்பட்ட பிள்ளைகள் நூற்றுக்கு 83 வீதமுமாயிருக்கின்றது. நல்ல பருவமுடையவர்களுள் முக்கியமாய் இந்த நோய் ஆண் பிள்ளைகளையே விசேஷமாய்ப் பீடிக்கின்றது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் நேரிடுகிற சேதத்தை ஒத்துப்பார்க்குமளவில் பெண்களில் 100 ஆனால் ஆண்களில் 128 ஆயிருக்கின்றது. இப்படிப்பட்ட கொடிய செய்கையுள்ள வைசூரியாகிய கொள்ளைநோய் நன்றாய் நிவிர்த்திசெய்யக்கூடிய நோயேயன்றி வேறல்ல.

யாவரும் சவுக்கியமாய் வாழ்ந்துகொண்டிருப்பதைவிட சம்பத்து வே றொன்றுமில்லையென்று பிராங்கிலின் என்பவர் சொல்லியிருக்கிறார். ஜன ங்களுடைய சவுக்கியத்தை மந்திரிகள் முதன்மையாய்க் கருதவேண்டிய தென்று எங்கிலாந்துதேசத்து மந்திரி அபிப்பிராயங்கொண்டார். இப்பட்ட ணத்துக் குடிகளும் அதிகாரிகளும் முக்கியமாய்ச் செய்யவேண்டிய பெ ருத்தகாரியம் ஒன்றுண்டு. யாவரும் விசுவாசத்துடன் அந்தக் காரியத் தைத் துணிந்து நடத்துவார்களானால் அதனால் காரியசித்தி உண்டாவதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. வைசூரி நம்மால் நிவிர்த்திசெய்யக்கூடிய நோய்தான்.

சமாசாரம்.

ஐரோப்பாகண்டத்தில் ருஷியா சக்கரவர்த்தி துர்க்கிதேசத்திலிருக்கிற கிறிஸ்தவர்களைச் சீராய் ஆளும்படி சுல்தானை நிர்ப்பந்தித்துக் கேட்டதின் மேல், ருஷியா சக்கரவர்த்திக்கும் துர்க்கி சுல்தானுக்கும் சிலநாளாய் மனஸ்தாபமிருந்துகொண்டேயிருந்தது. அதைப்பற்றி ஒருவாறு சமாதான உடன்படிக்கை செய்யும்படி நாநாதேசத்துத் தூதர்களும் துர்க்கிதேசத்துப் பிரதான பட்டணமான கான்ஸ்டாண்டிநோபில் நகரத்தில் சென்ற மார்ச்சு மீ சபைகூடிப் பலதரம் பேசியதற்கு, என் குடிகளை தக்கபடி ஆள வழி எனக்குத் தெரியும்; அந்நியர் காட்டிக்கொடுக்கவேண்டுவதில்லை; மானபங்கத்தைவிட மரணமே மேலானது; நீங்கள் போய்வரலாம்; யாவ ருக்கும் இரண்டுகையாலும் சலாஞ்சொல்லுகிறேன் என்று சுல்தான் வந்தி ருந்த தூதனை அனுப்பிவிட்டான். துர்க்கி சுல்தானுடைய பலத்தைக் குறைக்கவேண்டுமென்று ருஷியர் விருப்பங்கொண்டதனால், மடிமாங் காய்போட்டுப் போராடும்படி துர்க்கிதேசத்தில் படையெடுத்துச் சென்றார் கள். இத்தனைநாளாய்த் தூங்கிக்கொண்டிருந்த சுல்தான், இனி நாம் துரி தப்படாமலிருந்துவிட்டால் நமது பட்டத்தை இழந்துபோவோமென்று தானும் படையெடுத்தான். இப்போது இருதரத்தாருக்கும் கைகலந்து சண் டைநடந்துவருகிறது. தமது கிறிஸ்தவர்கள் விஷயத்தில் நெறிகேடும் கொ டுமையும் செய்யத்தலைப்பட்டதனால் துருக்கியர்மேல் தாம் படையெடுத்தோ மென்று ருஷியர் சமாதானஞ்சொல்லுகின்றனர். தன்னை நிலையினின்றும் பெயர்க்க ருஷியராஜா கருதியிருக்கிறதினால் தான் படையெடுக்கும்படியா யிற்றென்று துர்க்கி சுல்தான் சமாதானஞ்சொல்லுகிறான். பொதுவாய் இந்த யுத்தத்தைத் தொடங்கிய அபவாதம் ருஷியர் இடத்திலேதான் தாக்கப் படுகின்றது. மற்றத் தேசத்தார் இவ்விருதரத்தாருக்கும் சகாயஞ்செய்யா மலே ஒதுங்கிநிற்கிறார்கள். அங்கிலேயர் பகிரங்கமாய் ஒருவருக்கும் சகா யஞ்செய்யாமற்போனாலும், ருஷியர் கடல்மார்க்கத்தை ஆக்கிரமித்துக்கொ ள்ளவொட்டாமல் அவர்களை முன்னிருந்த நிலையிலேயே நிறுத்தித் துர்க்கி யர்க்குச் சிற்சிலவாய் உதவுவார்கள்போலும்.

ஜயாபஜயங்கள் இருதரத்தார்க்கும் பொதுவாயிருக்கிறது. கடைசியில் எப்படி முடியுமோ? இந்த யுத்தம் இன்னும் எத்தனைநாள் நீடித்திருக்குமோ?

என்னென்ன விபத்துகள் விளையுமோ யாமறிகிலோம். நாளதுமீத்தில் மகம்மதியர்களெல்லாம் வந்து தனக்கு உதவுவார்களென்று கருதி துர்க்கி சுல்தான் மகம்மதிய மதோத்தாரகர் என்னும் விருதொன்றை வஹித்துக்கொண்டு அதைப் பிரசித்தப்படுத்தினான். ருஷியா தேசத்தானும் கிறிஸ்து மதாபிமானி என்று தன் பிரபாவத்தை வெளியிடுகிறான். மனிதனுடைய கொடுமைகளை அடக்கிச் சாந்தகுணத்தை விருத்திசெய்து நீதிகுலையாமல் நடப்பதற்காக ஏற்படுத்திய மதத்தைக்கூட இவர்கள் சண்டைசெய்வதற்கு உபபலமாய்ச் செய்துகொண்ட விபரீதத்தையும் நாம் என்னென்று சொல்லலாம்? மன்னவர் அக்கிரமம் இத்தன்மையது. காலத்தின் கோலத்தை யரர் கண்டறியக்கூடும்?

பொன்மழை. — சென்ற தாதுருஷூல் காலமழையாவது அகாலமழையாவது பெய்யாமல் தென்னிந்தியாவில் ஏரி குளம் மடுக்கள் யாவும் ஜலசூன்யமாய் மாடுமேயப் புல்லுமில்லாத வெட்டாந்தரையாய்விட்டது. சிலவாரங்களாய்க் கிணறுகளிலும் நீரில்லாமற்போயிற்று. உப்புக்கழிகளிலும் நீர்வற்றிப் படகுகள் போக்குவரவில்லாமல் கரையில் கவிழ்ந்துகிடந்தன. கன்றுகாலிகள் மிகவும் வருத்தப்பட்டு அநேகம் மாண்டுபோயின. உணவுக்கு யாதொரு ஆதாரமுமில்லாத நாட்டுப்பேதைகள் ஆயிரக்கணக்காக சென்னபட்டணம் வந்து சேர்ந்தார்கள். தானியக்ஷாமத்திலும் ஜலக்ஷாமம் மேலிட்டுப் பலவிடங்களில் கிணறுகள் வறண்டு ஜலம் கிரயங்கொடுத்து வாங்கும்படி நேரிட்டது. இப்படிப்பட்ட துஷ்காலத்தில் சோடைமழையாவது பெய்யாவிடில் எப்படி பிழைக்கப்போகிறோமென்று பிரஜைகள் ஏக்கமுற்றிருக்கையில், ரக்ஷகருடைய பேருளினால் ஒருவரும் எதிர்பாராததிசையிலிருந்து சரத்காலத்தில் வாடைமழைவந்ததுபோல் நாளது மேமீ 16௳ முதல் மூன்றுதினம் இராப்பகல் விடாமழையாகப் பெய்து எங்கும் ஜலசமிர்த்தியுண்டாயிற்று. "மழைபெய்வது மஹாதேவருக்கும் தெரியாது" என்கிற பழமொழி பிரசித்தமாயிற்று. இதை எல்லோரும் பொன்மழையென்று கொண்டாடுகிறார்கள்.

இந்த மழை வர்ஷாகாலத்து மழைபோல் வடகிழக்குமூலையிலிருந்து கடல்மார்க்கமாய் மேகங்கள் எழும்பி வாடைக்காற்றோடு கலந்துபெய்ததால், கடலோரத்தில் இராசிராசியாய் அடுக்கியிருந்த அரிசிமூட்டைகள் சில நனைந்துவிட்டதும், சில பழையவீடுகள் இடிந்ததுமாகிய சிற்சில நஷ்டங்கள் நேரிட்டபோதிலும் இந்தக் காற்றுமழையினால் வாயுமண்டலத்திலும் பூதலத்திலுமுள்ள விஷக்காற்றுகள் நீங்கி எங்கும் பரிசுத்தமாய்விட்டது. 20 சுமை மழை அல்லது 21 அங்குலமளவு மழை பெய்ததாகக் கணக்கிடப்பட்டது. வாயுவேகம் மணிக்கு 30மைல் தூரமாக வீசியதாம்.

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை."

இப்படி நல்ல மழைபெய்து பூமி குளிர்ந்ததனால் நாட்டிலிருந்து சென்னையில் பஞ்சத்துக்கு அஞ்சி ஓடிவந்து சர்க்கார் அன்னசாலைகளில் அடைக்கலம் புகுந்த ஏழைஜனங்களுள் கொள்ளைநோயால் மாண்டவர்கள்போகப் பிழைத்த மற்றவர்களை அவரவர்களிருப்பிடத்திற்குத் திரும்பிப்போய்விடச் செலவுகொடுத்தார்கள். ஒவ்வொரு குடும்பத்திற்கும் உடுக்க உடைகளும் குடும்பத்தலைவனுக்குப் பத்துரூபாயும் கொடுத்தனுப்பிவிட உத்தரவாயிற்று. இந்த ஏழைகளுக்கு என்றும் மறவாத பேருதவி இதைவிட வேறுண்டோ? கடவுளால் மழையும் அரசர் சகாயத்தால் பொருளுதவியும் கிடைத்தபடியால், இந்த ஏழைகள் இனிப் பயிரிட்டு க்ஷேமப்படுவதற்குச் சந்தேகமில்லை.

Printed at the C. K. S. Press.



BRIDGE AT GHURWAL.

ஸ்ரீநகரம்.